விலை : 20.00
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
Valampurii


website : www.valampurii.lk
E-mail: valampurii@yahoo.com

Registered as a Newspaper in Srilanka

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
உலகத்தர ISO 14 001, 9001
சான்றிதழ் பெற்றுள்ள
ஒரே சீமெந்து ராம்கோ

சங்கு 15 வள்ளுவர் ஆண்டு 2045 சித்திரை 04 வியாழக்கிழமை (17.04.2014) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 119

# சர்வதேச விசாரணைக்கான அழுத்தங்களை அதிகரியுங்கள்



## பிரி.எதிர்க்கட்சித் தலைவர் மில்லிபாண்ட் கோரிக்கை

(லண்டன்) யுத்தக் குற்றச்செயல்கள் தொடர்பில் இலங்கைமீது சர்வதேச விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும். அதற்கான அழுத்தங்களை பிரித்தானிய அரசும் சர்வதேச சமூகமும் முனைப்புடன் மேற்கொள்ள வேண்டும் என பிரித்தானிய எதிர்க்கட்சித்தலைவர் ஈட் மில்லிபாண்ட் தெரிவித்துள்ளார். (19ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு உதவிய சந்தேகத்தில் மேலும் ஒருவர் ரி.ஐ.டியினரால் கைது

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் புலனாய்வுப் பிரிவிற்கு நிதி உதவிகளை வழங்கினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் மேலும் ஒருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

பயங்கரவாத குற்றத்தடுப்பு பிரிவினரால் வடக்கில் பலர் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ள அதேவேளை புலிகளின் புதிய தலைவர் என்று பாதுகாப்பு தரப்பினரால் கூறப்பட்டு வந்த கோபி 20 ஆம் பக்கம் பார்க்க..

## பொது பல சேனாவுக்கு எதிராக விசாரணை

(கொழும்பு)

ஜன பல சேனா நடத்திய ஊடக வியலாளர் சந்திப்பை பொது பல சேனா அமைப்பு குழப்பியடித்தமை தொடர்பான வழக்கு நேற்று கொழும்பு மேல் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இதன் போது குறித்த 9-ம் திகதி இடம்பெற்ற இந்த சம்பவம் தொடர் 20 ஆம் பக்கம் பார்க்க..

## கூட்டமைப்பு எம்.பிக்கு கோபியுடன் தொடர்பு

### உயர் கல்வியமைச்சர் குற்றச்சாட்டு

(கொழும்பு)

சுட்டுக் கொல்லப்பட்ட மூன்று விடுதலை புலி உறுப்பினர்களுக்கு போக்குவரத்து வசதிகள் மற்றும் தங்குவதற்கு இடம் வழங்கப்பட்டதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் மீது உயர் கல்வியமைச்சர் எஸ்.பி. திஸாநாயக்க குற்றம் சாட்டியுள்ளார்.

இராணுவத்தினரால் விடுதலைப் புலிகள் என்று கூறப்பட்ட கோபி, அப்பன், தேவியன் ஆகிய மூன்று பேரும் நெடுங்கேணி காட்டில் கடந்த வெள்ளிக்கிழமை அன்று பாதுகாப்பு படையினரால்சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இதுகுறித்து உயர்கல்வி அமைசசர் திஸாநாயக்க ஊடகமொன்றுக்கு 20 ஆம் பக்கம் பார்க்க..

## இளம் யுவதியின் மரணத்திற்கு காரணமானோரை தண்டியுங்கள்

### யாழ்.ஆயர் இல்லம் முன் ஆர்ப்பாட்டம்

(யாழ்ப்பாணம்)

குருநகரில் கிணற்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்ட கொன்சலிற்றா என்ற இளம் பெண்ணின் மரண சடங்கில் கலந்து கொண்ட பொது மக்கள் அவரின் பூதவுடல் தாங்கிய ஊர்தியுடன் நேற்றுக் காலை யாழ். ஆயர் இல்லம் முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரஸ்தாப இளம் பெண்ணின் மரணத்திற்குக் காரணமானவர்களை சட்டத்தின் முன் நிறுத்தி



தமக்கு நீதி வழங்கக் கோரி மறைமாவட்ட ஆயர் இல்லத்தின் முன் ஆர்ப்பாட்டம் ஒன்றை மேற்கொண்டனர்.

இதேவேளை கொன்சலிற்றாவின் உடல் நல்லடக்கத்துக்காக அவரது சொந்த ஊரான மண்டைதீவுக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

இச்சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது, குருநகர் அடப்பன் வீதியில் வசித்துவந்த மண்டைதீவைச் சேர்ந்த ஜெரோமி கொன்சலிற்றா (வயது 22) என்ற இளம் யுவதி குருநகரில உள்ள மறைக் 20 ஆம் பக்கம் பார்க்க..

## இலங்கை-இந்திய மீனவர் பேச்சை தாமதப்படுத்தியது அ.தி.மு.கவே!

### ஜெயா அரசு மீது சோனியா தாக்கு



(கொழும்பு)

இலங்கை - இந்திய மீனவர்கள் இடையிலான பேச்சு வார்த்தைக்கு மத்திய அரசு ஏற்பாடு செய்த போதிலும் அதற்கு அனுமதி அளிப்பதற்கு அ.தி.மு.க. அரசு கால தாமதம் செயதது என காங்கிரஸ்தலைவர்சோனியா காந்தி குற்றம்சாட்டியுள்ளார்.

தமிழகத்தில் உள்ள கன்னியாகுமரி மாவட்டத்தில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி கலந்துகொண்டு பேசியபோது இலங்கை விவகாரத்தில் காங்கிரஸ் கட்சியின் நிலைப்பாடு குறித்து விளக்கினார்.

இலங்கை விவகாரத்தில் தமிழக கட்சிகள் தங்களைக் குற்றம் சாட்டுவதாகவும், ஆனால், தங்கள் அளவுக்கு இலங்கைத் தமிழரகளுக்குச் செய்தவர்கள் யாரும் இல்லை என்றும் ராஜீவ்காந்தி தன் உயிரையே தியாகம் செய்ததாகவும் சோனியா காந்தி தெரிவித்தார். 2009ஆம் ஆண்டிற்குப் பிறகு இலங்கை தமிழர்களுக்கு எல்லா விதமான ஆதரவையும் காங்கிரஸ் அரசு செய்துவருவதாக சோனியா காந்தி தெரிவித்தார்.

தமிழக மீனவர்கள் இலங்கைக்கடற்படையினரால் கைது 20 ஆம் பக்கம் பார்க்க..

## தலைமைத்துவ சவாலை த.தே.கூட்டமைப்பு சந்திக்கும்

### கேர்ணல் ஹரிகரன் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கையில் தமிழ் மக்களின் அபிலாசைகளை வெற்றி கொள்வதற்கு, தமிழ் தேசிய கூட்டமைப்பு கடுமையான தலைமைத்துவ சவால்களை சந்திக்க வேண்டிவரும் என்று ஓய்வு பெற்ற இந்திய புலனாய்வுத் தலைவர் கேர்ணல் ஹரிகரன் தெரிவித்துள்ளார்.

வடமாகாண சபைத் தேர்தல் நடத்தப்பட்டமை மிகப்பெரிய ஜனநாயக முன்னெடுப்பாக இருந்த போதும், இதில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு பெற்ற வெற்றியானது, தமிழ்த் தேசியம் தொடர்பில் கூட்ட 20 ஆம் பக்கம் பார்க்க..

## கிணற்றை சுற்றியிருந்த சுவர்கள் இடிப்பு!

(யாழ்ப்பாணம்)

ஜெரோம் கொன்சலிற்றா (22) சடலமாக மீட்கப்பட்ட யாழ். சென் பற்றிக்ஸ் கல்லூரிக்கு பின்புறமாகவுள்ள பொதுக் கிணற்றினைச் சுற்றி கட்டப்பட்டிருந்த மறைப்புச் சுவர் இனந்தெரியாதோரால் நேற்று உடைக்கப்பட்டுள்ளது.

இச்சம்ப வத்தினை அறிந்த குருநகர் பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் சம்பவ இடத்திற்கு வந்து கிணற்றினை பார்வையிட்டதுடன், விசாரணைகளையும் மேற்கொண்டனர்.

குருநகர்ப் பகுதி யினைச் சேர்ந்த மேற்படி யுவதியின் சடலம் கடந்த திங் 19 ஆம் பக்கம் பார்க்க..

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றவாளிகளை விடுவிப்பதால் மகிந்த சொல்வது என்ன?

## ஐ.தே.கட்சி கேள்வி

(கொழும்பு)

பிரபல சிங்களப் பாடகர்களான ரூகாந்த குணதிலக்க, சந்திரலேக்கா தம்பதிக்கு இடையூறு ஏற்படுத்தியதாக குற்றம் சுமத்தப்பட்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டவர்களை விடுவித்ததன் மூலம் சமூகத்திற்கு வழங்கிய செய்தி என்னவென ஐக்கிய தேசியக் கட்சி கேள்வி எழுப்பியுள்ளது.

மேற்படி குற்றச்சாட்டு தொடர்பில் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதியின் பாதுகாப்பு அதிகாரிகள், ஜனாதிபதி பொது மன்னிப்பின் கீழ் புத்தாண்டு முன்னர் விடுதலை செய்யப்பட்டனர்.

இது குறித்து கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து வெளியிட்ட ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பீ. பெரேரா தெரிவிதததாவது.

ரூகாந்த, சந்திரலேக்கா தம்பதியினருக்கு இடையூறுகளை ஏற்படுத்தி, அவர்களுக்கு சொந்தமான பல மில்லியன் பெறுமதியான சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தியதாக பாணந்துறை மேல் நீதிமன்றத்தில் குற்றம் சுமத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டவர்கள் தற்போது எந்த பிரச்சினைகளும் இன்றி வெளியில் வந்துள்ளனர்.

அரசியலமைப்புச் சட்டத்தின் 34 வது பிரிவுக்கு அமைய ஜனாதிபதி விரும்பினால் முழுமையான விடுதலையோ, நிபந்தனை அடிப்படையிலான பொது மன்னிப்பை வழங்க முடியும். ஆனால் இந்த குற்றவாளிகளுக்கு முழுமையான மன்னிப்பு வழங்கியதை ஏற்றுக்கொள்ள முடியாது.

பல வருடங்களாக விசாரிக்கப்பட்ட வழக்கொன்றில் தண்டனை வழங்கப்பட்டவர்களை மன்னிப்பு வழங்கி விடுதலை செய்ததன் மூலம் சட்டம் குறித்து நாட்டு மக்களுக்கு வழங்கும் செய்தி என்ன?.

அமைச்சர் மில்ரோய் பெர்ணான்டோவின் உறவினர் மற்றும் அவரது பணிப் பெண்ணை கொலை செய்ததாக குற்றம் சுமத்தப்பட்டு தண்டனை வழங்கப்பட்ட அமைச்சரின் மனைவி, கொலை குற்றம் சுமத்தப்பட்ட இரத்தினபுரி சமன் ஆலயத்தின் முன்னாள் பஸ்நாயக்க நிலமே ஆகியோரும் இவ்வாறு ஜனாதிபதியினால் பொது மன்னிப்பு வழங்கி விடுவிக்கப்பட்டனர் எனவும் அஜித் பீ. பெரேரா மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

# கப்பம் பெறுவோருக்கு அஞ்சி பஸ்களை விற்ற அமைச்சர்

கப்பம் பெறுவோரின் துப்பாக்கிச் சூட்டில் இருந்து உயிர் தப்புவதற்காக தனக்கு சொந்தமான பஸ்களை விற்பனை செய்து விட்டதாக வடமேல் மாகாண போக்குவரத்து அமைச்சர் குணதாச தெஹிகம தெரிவித்துள்ளார். குருநாகலில் நடைபெற்ற வைபவம் ஒன்றில் பேசும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

நான் ஒரு பஸ் உரிமையாளராக இருந்தேன். 4 முறை கப்பம் பெறும் நபர்களின் துப்பாக்கிச் சூட்டில் இருந்து உயிர் தப்பினேன்.

நாங்கள் எனக்கு சொந்தமான சில பஸ்களை பயணிகள் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுத்த அனுமதியை பெற்று அவற்றை போக்குவரத்துச் சேவையில் ஈடுபடுத்தி வந்தேன்.

எனினும் கப்பம் பெறுவோரிடம் இருந்து தப்பிக்க முடியவில்லை. இதனால், அவற்றை விற்று விட்டேன். நான்கு முறை என்மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் நான் இறக்கவில்லை.

கப்பம் பெறும் நபர்களிடம் இருந்து வடமேல் மாகாண பயணிகள் போக்குவரத்துச் சேவையை பாதுகாக்க உரிய வேலைத்திட்டம் ஒன்றை ஆரம்பிக்க எண்ணியுள்ளேன்.

ஐந்தாவது முறையாகவும் என் மீது துப்பாக்கி பிரயோகம் செய்து என்னை கொலை செய்ய முயற்சிப்பார்கள், ஆனால் நான் இந்த திட்டத்தை மேற்கொள்வேன் எனவும் வடமேல் மாகாண அமைச்சர் குணதாச தெஹிகம மேலும் தெரிவித்துள்ளார். (செ-11)

# பௌர்ணமி விழா

(யாழ்ப்பாணம்)

கரவெட்டி கலட்டி ஐக்கிய சனசமூக நிலையம் நடத்தும் பௌர்ணமி விழா நாளை வெள்ளிக்கிழமை மாலை 6.45 மணிக்கு தலைவர் சி.ஜி.திருமாலழகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக சங்கீத வித்வான் ஏ.கே.கருணாகரன் கலந்து கொள்ளவுள்ளார்.

வடமராட்சி வலய இந்து சமய பாட ஆசிரிய ஆலோசகர் சைவப்புலவர் சித்தாந்த பண்டிதர் சி.நவரட்ணம் "மனிதம்" எனும் தலைப்பில் சிறப்பு சொற்பொழிவு ஆற்றவுள்ளார்.

"சித்திரை மகளே வருக" "இம்முறையாவது தருவாயா" என்னும் தலைப்பில் சித்திரைப் புத்தாண்டு சிறப்புக் கவிதைகளை சி.பால்முரளி, செ.பரம்நாத் ஆகியோர் ஆற்றவுள்ளனர்.

மற்றும் க.பொ.த சாதாரண தரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களான செல்வி சரண்யா சச்சிதானந்தம், செல்வி பாரதி பாலசுப்பிரமணியம், செல்வி காயத்திரி கணேசமூர்த்தி, செல்வி கீர்த்தனா சுகேந்திரன், செல்வி விஷ்ணுஜா செல்வச்சோதி ஆகியோரை கௌரவித்தலும் இடம்பெறவுள்ளது.

மற்றும் சனசமூக நிலையத்தால் வடமராட்சி லயன்ஸ் கழகத்தினால் இலவச கண் பரிசோதனை முகாமும் இலவச கண்ணாடி வழங்கும் நிகழ்வும் இடம்பெறவுள்ளதால் இச் சேவையை பெறவிரும்புவோர் நிலைய உப தலைவர் இ.கருணாகரன் உடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (செ-11)

## புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் அட்டவணைப்படுத்தப்படாத பதவிகளின் வெற்றிடங்களை நிரப்புதல் -2013

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2013.01.01 ஆம் திகதி முதல் புதுககுடியிருப்பு பிரதேசசபைக்கு அனுமதிக்கப்பட்ட ஆளணி விபரங்களுக்கமையவும், உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரின் 2013.02.08 ஆம் திகதிய NP/05/01/GE6/UNS/RQ இலக்க கடிதத்திற்கமைவாகவும் கீழ்க்குறிப்பிடப்படும் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்காக உரிய ஆள்சேர்ப்புத் திட்டத்தின் கீழ் தகைமையுடையவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**சேவை நிபந்தனைகள்**

01. இப்பதவி நிரந்தரமானதும், ஓய்வூதியத்திற்குரித்துடையதுமாகும்.
02. ஊழியர் விதவைகள்/தபுதாரர்கள், அநாதைகள் ஓய்வூதியத்திற்கு பங்களிப்புச் செய்தல் வேண்டும்.
03. நியமனம் பெறுபவர்கள் மூன்று வருட கால தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவார்கள்.

**அடிப்படைத் தகைமைகள்**

01. விண்ணப்பதாரி இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும்.
02. விண்ணப்பங்கள் பொறுப்பேற்கப்படும் இறுதித் திகதியன்று 18 வயதிற்கு குறையாதவராகவும் 45 வயதிற்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். ஏற்கெனவே உள்ளூராட்சி சேவையில் நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதுமான நியமனங்களைக் கொண்டிருப்பவர்கள் தொடர்பில் உயர் வயதெல்லை ஏற்புடையதாகமாட்டாது.
03. நன்னடத்தை உடையவராகவும், சிறந்த தேகாரோக்கியம் உடையவராகவும் இருத்தல வேண்டும்.
04. விண்ணப்பதாரி புதுக்குடியிருப்பு பிரதேசசபை எல்லைக்குள் நிரந்தர வசிப்பிடத்தினைக் கொண்டவராக இருத்தல் வேண்டும். (வதிவிட சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

**தெரிவு செய்யப்படும் முறை**

அங்கீகரிக்கப்பட்ட நேர்முகப் பரீட்சை குழுவினால் நேர்முகப் பரீட்சை நடத்தப்படுவதுடன் விண்ணப்பதாரி நேர்முகப்பரீட்சையின் விதிக்கமைந்து ஒழுகுதல் வேண்டும்.

**விண்ணப்பிக்கும் முறை**

01. புதுக்குடியிருப்பு பிரதேசசபையின் தலைமை அலுவலகத்தில் ரூபா நூறு (100/=) செலுத்தி அலுவலக நேரத்தில் விண்ணப்பப் படிவத்தை பெற்று பூரணப்படுத்தி தகைமைகளுக்கு ஆதாரமான சான்றிதழ்களின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
02. விண்ணப்பத்தில் உரிய முறையில் தேவையான தகவல்கள் பூரணப்படுத்தப்படாததிருப்பின் அத்தகைய விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
03. விண்ணப்பங்கள் விண்ணப்பதாரியின் சொந்த கையெழுத்தால் பூர்த்திசெய்யப்பட்டு **"செயலாளர், புதுக்குடியிருப்பு பிரதேசசபை, புதுக்குடியிருப்பு"** என்ற முகவரிக்கு 10.05.2014 ஆம் திகதியன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ எமக்குக் கிடைக்க்கூடியதாக பதிவுத தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். அதற்குப் பின்னர் கிடைக்கப் பெறும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும்.
04. தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் எழுதப்பட வேண்டும்.
05. ஆட்சேர்ப்புத்திட்ட விதிமுறைகளின்படி விண்ணப்பதாரி விண்ணப்பிப்பதற்குத் தகைமையற்றவரென நியமனத்திற்கு முன்னரோ நியமனத்தின் பின்னவராகவோ நியமனத தின் போதோ அல்லது முன்வைக்கப்படும் ஏதேனும் தகவலொன்று பொய்யானதெனவோ தெரியவரும் எச்சந்தர்ப்பத்திலும் விண்ணப்பம் நிராகரிக்கப்படுவதுடன் நியமனமும் நிறுததப்படும்.

**பதவிகள் பற்றிய விபரங்கள்**

| பதவி இல. | பதவிகள் |
|---|---|
| 01 | வேலைத் தொழிலாளி - தரம் 111 |
| 02 | சுகாதாரத் தொழிலாளி - தரம் 111 |

**சம்பள அளவுத்திட்டம்**

PL-1-2006A(11730-10X120-10X130-10X145-12X160- 17600)

**கல்வித் தகைமை**

தரம் 8 இல் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.

பிரதேசசபை,
புதுக்குடியிருப்பு

(சி-7040)

கு.மிதிலைநாதன்,
செயலாளர்


**தொடர்ந்தும் உங்கள் சேவையில்....**

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு உடனுக்குடன்
- கடிதங்கள்
- அன்பளிப்பு பொருட்கள்
- உடுபுடவைகள்
- CD, VCD க்கள் அனுப்பவும் உலகெங்குமுள்ள உறவுகளிடமி ருந்து Western Union மூலம் அனுப்பிய பணத்தை ஒரு சில நிமிடங்களில் பெற்றுக் கொள்ளவும். தொலைபேசி அட்டைகளைப் பெற்றுக்கொள்ளவும்.

ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்
303, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
T.P. No :-0212225392

WESTERN UNION MONEY TRANSFER

(C-7038)

வலம்புரி விளம்பர தொடர்புகளுக்கு: 021 321 0815, 021 567 1532


# கண்ணீர் அஞ்சலி



## திருமதி யோகானந்தம் இராஜேஸ்வரி

கிளிநொச்சி மாவட்ட செயலகத்திலுள்ள மாவட்ட சமூக சேவைகள் அலுவலகத்தில் அபிவிருத்தி உத்தியோகத்தராக பணிபுரியும் திருமதி கீதா வசீகரன் அவர்களின் அன்புத் தாயார் **திருமதி யோகானந்தம் இராஜேஸ்வரி** அவர்கள் இயற்கை எய்தியமையையிட்டு அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

19,டி-10, உருத்திரபுரம்,
கிளிநொச்சி.

(சி-7042)

வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் (யாழ் - கிளிநொச்சி) குடிநீர்த் தட்டுப்பாடும் சுகாதாரத் தேவைப்பாடும்

## மக்கள் அவசியம் தெரிய வேண்டிய தகவல்கள்



யாழ் குடாநாட்டில் போதிய தரைக் கீழ் நீர் வளம் இல்லை என்று நிரூபிக்கப்பட்டுள்ளது.




- ✔ நிலத்தடி நீரை நம்பி உருவாக்கிய பல நீர் வழங்கல் திட்டங்கள் நீர் தரம், குறிப்பாக உப்பாதல் மற்றும் நீரின்மை பிரச்சினையால் கைவிடப்பட்டுள்ளன. உதாரணம்:- நாரந்தனை, புங்குடுதீவு காரைநகர், வட்டு தெற்கு முதலி கோவிலடி மற்றும் பழைய நீர் உள்ளெடுக்கும் நிலையங்களாகிய கட்டுடை வர்தாரவத்தை கண்பொல கந்தரோடை, நவாலி ஆகிய திட்டங்கள் இதற்குச் சான்றாகும்.
- ✔ நிலக்கீழ் நீர் போதாமை காரணமாக தற்போதைய நீர் வழங்கல் திட்டங்கள் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே நீர் விநியோகத்தை கொண்டுள்ளன. இவை பொதுமக்களின் தேவைக்கேற்ப விஸ்தரிக்க முடியாதுள்ளது. இதனால் பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களை எதிர் நோக்குகின்றனர். (மட்டுப்படுத்தப்பட்ட 1 மணித்தியால நீர் விநியோகத்தை வரிசையில் நின்று பொதுக் குழாய் மற்றும் பவுசர்களில் பெற்றுக் கொள்கின்றனர். **யாழ் குடாநாட்டில் தரைக்கீழ் நீரின்**
  - ❖ நைற்றேற் அளவு அபாயகரமான அளவு அதிகரித்துள்ளது
  - ❖ பக்டீரியாக்களின் அளவு அபாயகரமான அளவு அதிகரித்துள்ளது
  - ❖ உவர்த்தன்மை அதிகரித்து வருகின்றது

இதனால் புற்று நோய், நெருப்புக் காய்ச்சல் முதலான பயங்கர நோய்கள் மக்களை வாட்டி வதைக்கத் தொடங்கி விட்டன. இதன் மூலம் எதிர்காலத்தில் இறப்புக்கள் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக உள்ளன.

இவ் ஆபத்தில் இருந்து விடுபடுவதற்கு வழி இல்லையா?









மாகாண ரீதியில் பாதுகாப்பான குழாய் மூலமான குடி நீர் வழங்கலை வட மாகாணம் 06 % மட்டுமே கொண்டுள்ளது. இதேவேளை, நாட்டின் சராசரி 45 % ஆகும். சர்வதேச, தேசிய இலக்கானது பாதுகாப்பான குடி நீர் மற்றும் சுகாதாரம் ஒவ்வொன்றும் 85% 2015 லும், 100% 2025 லும் எட்டப்பட வேண்டும் என்பதாகும்.

**யாழ் கிளிநொச்சி நீர்வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டத்தை செயற்படுத்துவதன் மூலம் மக்களுக்கு பாதுகாப்பான குடி நீரை வழங்குவதுடன் சுகாதாரத்தை மேம்படுத்தி சர்வதேச, தேசிய ரீதியான இலக்குகளையும் அடையலாம்.**

## யாழ் கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டம்

மொத்த திட்ட செலவு : ரூபா 2,300 கோடி

திட்டப் பயனாளிகள்:

| | |
|---|---|
| குடி நீர் வழங்கல் | - 300,000 பேர் (யாழ் கிளிநொச்சி மாவட்டங்களில்) |
| கழிவகற்றல் சுகாதாரம் | - 80,000 பேர் (யாழ் மாநகர சபை ப்குதியில்) |
| நீர்ப்பாசனம் | - 55,000 பேர் (கிளிநொச்சி விவசாயிகள்) |

**சுத்தமானதும் பாதுகாப்பானதுமான குடி நீர் வழங்கலையும், ஆரோக்கியமான எதிர்காலத்தையும் உறுதி செய்ய நடைமுறையிலுள்ள யாழ்- கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் சுகாதாரத் திட்டத்தை ஆதரிப்போம்!**

திட்டப் பணிப்பாளர் காரியாலயம், யாழ்ப்பாணம்
தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்புச் சபை
தொலைபேசி: 0212220256 தொலைநகல்: 0212220257 இணையதளம்: www.ikwssp.org

# யாழ்.போதனா வைத்தியசாலைக்கு சி.பி.ஏ.பி.இயந்திரம் அன்பளிப்பு


யாழ்.போதனா வைத்தியசாலையின் குழந்தைகள் அதிதீவிரச் சிகிச்சைப் பிரிவுக்கு 3 மில்லியன் ரூபா பெறுமதியான சி.பி. ஏ.பி." இயந்திரம் இன்னர் கொழும்பு லயன்ஸ் கழகத்தினரால் அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது.

குறை மாதத்தில் பிறந்த குழந்தைகளுக்கு ஏற்படும் மூச்சுத்திணறல் மற்றும் சளியில் இருந்து குழந்தைகளை இந்த இயந்திரத்தின் மூலம் பாதுகாக்க முடியும்.

இந்தக் கழகம் 30 வருட கால தொடர்பினை யாழ். போதனா வைத்தியசாலையுடன் பேணி வருகின்றது. 25 வருடத்திற்கு முன்பு கண் சத்திரசிகிச்சைப் பிரிவும் அம்புலன்ஸ் ஒன்றும் வழங்கியிருந்தது.

யுத்த காலத்தின் போது 12 மில்லியன் ரூபா செலவில் அவசர சிகிச்சைப் பிரிவும் கட்டிக் கொடுக்கப்பட்டதுடன் குழந்தைகள் பிரிவுக்கு 4 வென்சிலேட்டர்களும் வழங்கியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இதே வேளை நேற்றைய தினம் இடம் பெற்ற இந்நிகழ்வில் லயன்ஸ் கழக மாவட்ட ஆளுநர் லயன்ஸ் ரஞ்சித் பர்னாண்டோம அவரது பாரியார் டில்கானி, லயன்ஸ் கழக முன்னாள் ஆளுநர் லயன்ஸ் ராகவன், யாழ். போதனா வைத்தியசாலை உதவிப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கே.நந்தகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (2-6)



நன்றி-அததெரண

# குப்பைகள் அகற்றப்படாமையால் தொற்று நோய் பரவும் அபாயம்

## வெற்றிலை வியாபாரிகள் கவலை

(கரணவாய்)

வடமராட்சி கரவெட்டி மேற்கு பிரதேச சபைக்கு உட்பட்ட புதிய சந்தைப் பகுதியின் குறிப்பாக வெற்றிலைக் கடைகள் அமைந் துள்ள இடங்கள் நீண்ட நாட்களாக குப்பைகள் அகற்றப்படாது சுகாதாரம் பேணப்படவில்லை என வெற்றிலை வியாபாரிகளால் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த இடத்தில் வெற்றிலை உமிழ்வதாலும் பழுதடைந்த மரக்கறிகள் மற்றும் வேறு கழிவுப் பொருட்கள் பலவற்றை வீசுவதாலும் குறித்த இடத்தின் சுற்றுச் சூழல் சுகாதாரம் இல்லாமல் காணப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இச் சுகாதார சீர்கேட்டினால் கொசு, ஈ என்பன அதிகமாகக் காணப்படுவதாக வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

அத்துடன் தொற்றுநோய் பரவக்கூடிய இடமாகக் காணப்படுவதாக காட்சியளிக்கிறது.

எனவே இப் பகுதியில் காணப்படும் குப்பைகளை அகற்றி சுகாதார முறைப்படி ஒழுங்கு செய்து தருமாறு உரிய அதிகாரிகளுக்கு வியாபாரிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-60)

# சுகாதார ஊழியர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்

தங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்குமாறு கோரி யாழ். மாநகரசபையின் சுகாதார ஊழியர்கள் நேற்றைய தினம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மேற்படி சுகாதார ஊழியர்களுக்கும் வேலைப்பகுதி தொழிலாளர்களுக்கும் நிரந்தர நியமனம் வழங்குவதாக யாழ். மாநகரசபை தெரிவித்திருந்தது.

இருப்பினும், இதுவரையில் தங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லையென ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

யாழ். மாநகரசபையில் 420 இற்கும் மேற்பட்ட சுகாதார ஊழியர்களும் வேலைப்பகுதி தொழிலாளர்களும் கடமையாற்றுகின்றனர். இவர்களில் 180 பேர் சுகாதார ஊழியர்கள் ஆவர்.

கல்விப் பொது சாதாரண தரத்தில் 6 பாடங்களுக்கான சித்தியுடன் சுகாதார ஊழியர்களாக தாங்கள் கடமையாற்றி வருவதாகவும் தற்போது இதற்கான கல்வித் தகைமையை உயர்த்தியுள்ளதால் தாங்கள் பெரிதும் பாதிக்கப்படுவதாகவும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் கூறினர்.

கடந்த ஓரிரு மாதங்களுக்கு முன்பாக 100 பேருக்கு நிரந்தர நியமனம் வழங்குவதாக யாழ். மாநகர ஆணையாளர் செ.பிரணவநாதன் கூறியிருந்தார். இருப்பினும், இதுவரையில் தங்களுக்கான நிரந்தர நியமனம் வழங்கப்படவில்லை.

இந்நிலையில், நேற்றையதினம் மாலைக்குள் தங்களுக்கான நிரந்தர நியமனம் வழங்குவதற்கான நடவடிக்கை மேற் கொள்ளாவிடின் தொடர்ச்சியாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபடவுள்ளதாகவும் ஆர்ப்பாட்டக்காரர்கள் தெரிவித்தனர். (2-6)




# அங்குரார்ப்பண நிகழ்வும் விருது வழங்கலும்

(யாழ்ப்பாணம்)

கிளிக்கர் நிறுவனத்தின் புதிய இணையத்தள அங்குரார்ப்பண நிகழ்வும் புகைப்படக் கலை விருது வழங்கலும் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரி குமாரசாமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஆர்வமுள்ளவர்கள் பங்கேற்று பயன் பெறுமாறு கேட்கப்பட்டுள்ளது. (2)

# க.பொ.த உயர்தரத்திற்கு மாணவர்களை அனுமதித்தல்

(யாழ்ப்பாணம்)

யா/ நெல்லியடி மத்திய கல்லூரி க.பொ.த. உயர்தரம் -2016 புதிய வகுப்புக்களுக் கான மாணவர்களை அனுமதிப்பதற்கான நேர் முகத்தேர்வை எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 9 மணிக்கு கல்லூரி அலுவலகத்தில் நடத்தவுள்ளது. தகுதி பெற்ற கல்லூரி மாணவர்களையும் விண்ணப்பித்துள்ள ஏனைய பாடசாலை மாணவர்களையும் தவறாது சமுக மளிக்குமாறு அதிபர் எஸ். சேதுராஜா கேட்டுள்ளார். (அ)

# தனியார் தொழிற்சாலைகளுக்கு அடிக்கல் நாட்டப்பட்டுள்ளது

அச்சுவேலி கைத்தொழிற்பேட்டையானது இந்திய அரசின் 225 மில்லியன் ரூபா நிதியுதவியுடனும் இலங்கை அரசின் 50 மில்லியன் ரூபா நிதியுதவியுடனும் உட்கட்டுமானப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் மூன்று தனியார் தொழிற்சாலைகளுக் கான அடிக்கல் நாட்டி வைக்கப்பட்டன.

அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை வளாகத்தில் அடிக்கல் நாட்டும் நிகழ்வுகள் நேற்றைய தினம் இடம்பெற்றுள்ளன.

இதன்பிரகாரம் விவசாய நடவடிக்கைகளுக்கான யூனியன் என்ரபிறைஸ் பிளாஸ்ரிக் குழாய் தொழிற்சாலைகளினதும் மீன்பிடி வலை மற்றும் அது சார்ந்த தொழிற்சாலையான மல்வா தொழிற்சாலைகளினதும் இவற்றுடன் ஜாம், நெல்லிகிறஸ் மற்றும் பப்படம் ஆகியவற்றின் உற்பத்திகளை முன்னெடுக்கும் வகையில் ஹேமர இன்டஸ்றீஸ் தொழிற்சாலைக்கானதுமான அடிக்கற்கள் நாட்டி வைக்கப்பட்டன.

இந் நிகழ்வுகளில் அடிக்கற்களை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ,வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி, இந்திய துணைத் தூதுவர் மகாலிங்கம் உள்ளிட்டோர் நாட்டி வைத்தனர்.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினது ஆலோசனை மற்றும் வழிகாட்டலுக்கு அமைவாக அச்சுவேலி கைத்தொழிற் பேட்டையானது இந்திய அரசின் 225 மில்லியன் ரூபா நிதி உதவியுடனும் இலங்கை அரசின் 50 மில் லியன் ரூபா நிதியுதவியுடனும் உட்கட்டுமான பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் நிலையில் இன்றைய தினம் மூன்று தனியார் தொழிற்சாலைகளுக்கான அடிக்கற்கள் நாட்டி வைக்கப்பட்டன.

கைத்தொழிற்பேட்டை வளாகத்தில் குறித்த மூன்று தொழிற்சாலைகளுக்குமான அடிக்கற்கள் முதற்கட்டமாக நாட்டி வைக்கப்பட்டுள்ள நிலையில் ஏனைய தொழிற்சாலைகளுக்கான அடிக்கற்கள் விரைவில் நாட்டி வைக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (2)



புத்தாண்டு நிகழ்வு வடமாகாண ஆளுநர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்து இருப்பதனையும் மன்னார் மாவட்டத்தை சேர்ந்த காது கேட்காத சிறுமிக்கு சத்திர சிகிச்சைக்காக ஆளுநர் நிதியிலிருந்து 3 இலட்சம் பெறுமதியான காசோலையினை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என் டக்ளஸ் தேவானந்தா வடமாகாண ஆளுநர் ஜி.ஏ சந்திரசிறி ஆகியோர் இணைந்து வழங்குவதையும் நிகழ்வில் கலந்து கொண்ட உயர் அதிகாரிகளையும் படங்களில் காணலாம்.


(படங்கள் : என்.குமார்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.கம்பன் கழகத்தின் நிலாக்கால நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் கம்பன் கழகம் நடத்தும் நிலாக்கால நிகழ்வு எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 4.30 மணிக்கு நல்லூர் கம்பன் கோட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அதிபர் சி.க. எழில்வேந்தன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் மங்கல விளக்கினை நயினை நாகபூசணி அம்மன் ஆலயத் தலைவர் ஆதியாக்ராஜா ஏற்றி வைப்பார். இந்நிகழ்வில் வீழ்ச்சியால் பெரிதும் மாட்சி பெற்றபாத்திரம் எனும் தலைப்பில் பேராசிரியர்எஸ். சிவலிங்கராஜா தலை மையில் விவாத அரங்கு இடம்பெறவுள்ளது. (2)






யாழ். வண்ணார் பண்ணை ஸ்ரீ காமாட்சி அம்மன் (நாச்சிமார் கோவில்) ஆலய வருடாந்த தேர்த்திருவிழா அண்மையில் இடம்பெற்றது.

இதன் போது சுவாமி தேரில் வீதி வலம் வருவதையும் பக்தர்கள் கூடி நிற்பதையும் படங்களில் காணலாம்.

(படங்கள்:-மானிப்பாய் செய்தியாளர்)

# வன்னி இறுதியுத்தத்தில் இந்திய இராணுவம் பங்கேற்கவில்லை

## மறுக்கிறார் சரத் பொன்சேகா



(கொழும்பு)

**இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்ட யுத்தத்தின் போது யுத்த களத்தில் இந்திய இராணுவம் இருந்ததாக தெரிவிக்கப்படும் கருத்து முற்றிலும் பொய்யானது என முன்னாள் இராணுவ தளபதி சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.**

எந்தவொரு வெளிநாட்டு இராணுவமும் இலங்கை இராணுவத்துடன் இணைந்து இறுதிக் கட்ட யுத்தத்தில் செயற்படவில்லை என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையின் இறுதிக் கட்ட யுத்தத்தின் போது இந்திய இராணுவம் யுத்தக் களத்தில் இருந்ததாகத் தெரிவித்து இந்திய உயர் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே சரத் பொன் சேகா இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

பாராளுமன்ற அனுமதி இன்றி வேறு நாட்டுக்கு இந்திய இராணுவத்தை அனுப்புவது அரசியல்யாப்பை மறும் செயல் என டில்லி தமிழ் சட்டத்தரணிகள் சங்கத்தின் செயலாளர் ராம் சங்கர் தனது மனுவில் தெரிவித்துள்ளார்.

இலங்கை யுத்தத்தில் இந்திய இராணுவம் பங்கேற்றமைக்கான சாட்சி இருப்பதாகவும் அது குறித்து விசாரணை நடத்த உயர் நீதி மன்றம் தீர்ப்பாயம் ஒன்றை அமைக்க வேண்டும் எனவும் அவர் தனது மனுவில் கோரியுள்ளார்.

இந்நிலையில், உலகில் உள்ள பல நாடுகளின் ஊடாக தமக்கு தேவையான புலனாய்வுத் தகவல்கள் கிடைக்கப் பெற்றதாகவும் சில நாடுகள் புலிகளுக்கு எதிரான யுத்தத்தை ஆதரித்ததாகவும் சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார். இலங்கை யுத்தத்திற்கு இந்தியா இடையூறு ஏற்படுத்தவில்லை என அவர் கூறினார்.(2)

## ஸ்ரீ சத்தியசாயி ஆராதனை மகோற்சவம்

ஸ்ரீ சத்திய சாயி ஆராதனை மகோற்சவம் எதிர்வரும் 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவின் அறிமுக நிகழ்வை வட பிராந்திய சத்திய சாயி சேவா நிறுவனங்களின் இணைப்புக் குழுத் தலைவர் ஸ்ரீ.எஸ்.ஆர்.சரவண பவன் நிகழ்த்துவார்.

சர்வமத ஒற்றுமை இசையும் அசையும், பாலவிகாஸ் மாணவர்களின் ஆற்றுகை என்பன இடம்பெறும்.

சத்திய சாயி பாபாவின் அவதார மகத்துவம் எனும் தலைப்பில் சிறப்புரையினை திருகோணமலை மாவட்ட ஓய்வு பெற்ற மேலதிக அரசாங்க அதிபர் ஸ்ரீ.நா.புவனேந்திரன் நிகழ்த்துவார்.

அதனைத் தொடர்ந்து பகவான் ஸ்ரீசத்திய சாயி பாபாவின் அற்புதங்கள், சேவைகள் தொடர்பான வீடியோ தொகுப்பு இசை ஆராதனை என்பன இடம் பெறும். (2)

## முகிழ்நிலை ஆசிரியர்களுக்கான தேசிய டிப்ளோமா இறுதிப் பரீட்சை

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் தற்போது உள்ளகப் பயிற்சியில் இருக்கும் முகிழ் நிலை ஆசிரியர்களுக்கான கற்பித்தலில் தேசிய டிப்ளோமாவிற்கான இறுதிப்பரீட்சை யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் எதிர்வரும் 23 ஆம் திகதி ஆரம்பமாகி நடைபெறவுள்ளதாக யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி எஸ். அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

மேலும் பரீட்சை அனுமதி அட்டைகளை எதிர்வரும் 22ஆம் திகதி பிற்பகல் 5 மணிக்கு தம்மிடம் இருந்து பெற்றுக்கொள்ளுமாறும் உள்ளக பயிற்சிஆசிரியர்களை அன்றைய தினம் பிற்பகல் தொடக்கம் பரீட்சை இறுதிநாள் வரையான காலப்பகுதியில் கல்லூரியில் தங்குவதற்கானஏற்பாடுகளுடன் வருகை தருமாறும் அவர் கேட்டுள்ளார்.(2)

# போதைப்பொருளை தாக்கும் நோக்கில் கலந்துரையாடல்

(சாவகச்சேரி)

போதைப் பொருளை தடுக்கும் நோக்கில் சாவகச்சேரி கொட்டான் பிட்டி கிராமத்தில் அக்கிராம இளைஞர் யுவதிகளை உள்ளடக்கி கலந்துரையாடல் ஒன்று நேற்று முன் தினம் நடைபெற்றது.

மேற்படி கிராம த்தில் நீண்ட காலமாக ஐந்து பேர் கொண்ட குழுவினர் போதைப் பொருள் உற்பத்தியிலும் விற்பனையிலும் ஈடுபட்டு வந்தனர்.

இவ்வாறான செயற்பாடுகளை தடுக்கும் நோக்கில் இச் சட்ட விரோத செயற்பாட்டில் ஈடுபட்ட நபர்களை உள்ளடக்கி மேற்படி கூட்டம் நடை பெற்றது.

இக்கூட்டத்தில் அப் பிரதேச கிராம சேவையாளர் க.கார்த்திகேயன் கலந்து கொள்ள சாவகச்சேரி நகராட்சி மன்ற உறுப்பினரும் அ.பாலமயூரனும் தலைமை தாங்கினர் .

இக்கிராமத்தில் வசிக்கும் பலர் நீண்ட காலமாக போதைப் பொருள் உற்பத்தி மற்றும் விற்பனையில் ஈடுபட்டிருந்த நிலையில் அதில் சிலர் தாமதமாகவே அத் தொழிலை கை விட்டு வாழ்கின்றனர்.

ஆயினும் குறிப்பிட்ட இந்த நபர்கள் தமது தொழிலாகவே இச் செயற்பாடுகளில் ஈடுபட்டு.வந்த நிலையிலேயே அவர்களை அத் தொழிலில் இருந்து விடுவிக்கும் நோக்கில் இக் கூட்டம் நடத்தப்பட்டது.

மேற்படி போதைப்பொருள் உற்பத்தியிலும் விற்பனையிலும் ஈடுபட்ட நபர்கள் தாம் இனி மேலும் இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபட மாட்டோம் என்றும் தமது குடும்ப பொருளாதார கஷ்டத்தை போக்கவும் பிள்ளைகளின் கல்வி செயற்பாடுகளுக்காகவும் தாம் கைத்தொழிலில் ஈடுபட்டு வந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதன்போது கருத்து தெரிவித்த கிராம சேவையாளர்,

சாவகச்சேரி நகராட்சி மன்ற ஒத்துழைப்புடன் அவர்களது பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளை மேற்கொள்ளவதாகவும் சமுர்த்தி நிவாரணம் மூலம் குடும்ப வாழ்வாதாரத்தை மேற் கொள்ள உதவி செய்வதாகவும் உறுதியளித்தார்.

இதன்போது கண்காணிப்பு உறுப்பினர்கள் ஐவர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இக்கிராமத்தில் இவ்வாறான சட்ட விரோத செயல்களில் ஈடுபடுவோர் மீது கிராம சேவையாளர் உதவியுடன் நடவடிக்கை எடுப்போம் எனவும் இவ்வாறான நடவடிக்கைகளில் எமது சமூகம் ஈடுபடக் கூடாது எனவும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (2-29)

## இன்றைய இராசி பலன்

17.04.2014

(சித்திரை 04,வியாழக்கிழமை)
சூரிய உதயம் காலை 6.05 மணிக்கு
துதியை பிற்பகல் 12.32 மணிவரை
விசாகம் முன்னிரவு 11.22 மணிவரை
இராகுகாலம் 1.34-3.04 மணிவரை
சுபநேரம் 7.34-9.04 மணிவரை

வளவன்

**மேடம்** – விருப்பங்கள் நிறைவேறும் நாள், விலகிச் சென்றவர்கள் விரும்பி வந்து இணைவர், வெளியூர் பயணங்களால் அலைச்சல்கள் அதிகரிக்கும், சான்றோர் சந்திப்புண்டு.

**இடபம்** – தன்னம்பிக்கையும் தைரி[யமும்] அதிகரிக்கும், நோயிலி[ரு]ந்து நிவாரணம் பெறுவீர்கள் கல்யாணக் கனவுகள் நனவா[கு]லாம், செய்தொழில் மேன்மையுண்[டு]

**மிதுனம்** – மனதில் இனம்புரியாத சந்தோசம் குடிகொள்ளும், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், வியாபார விருத்தியுண்டு, பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**கடகம்** – மனதில் நீண்ட நாட்களாக இருந்த பாசம் குறையும், புதிய பொறுப்புகள் வந்து சேரலாம், கல்வியில் ஆர்வம் காட்டுவீர்கள், ரோக பயமுண்டு

**சிம்மம்** – ஆதாயம் அதிகரிக்கும் நாள், குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறி தோன்றும், வெற்றிச் செய்திகள் வீடு வந்து சேரலாம்.

**கன்னி** – குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், தொழிலில் புதிய முதலீடுகள் செய்யும் எண்ணம் உருவாகும், அதிகாரிகளை அனுசரித்துச் செல்வது நல்லது.

**துலாம்** – ஆழ்ந்த சிந்தனையுண்டு, எடுத்[த] காரியத்தை முடிக்க அதிக பி[ர]யாசை எடுக்கும் சூழ்நிலை உ[ரு]வாகும், போசன சுகமுண்டு வீட்டை அழகுபடுத்துவதி[ல்] ஆர்வம் காட்டுவீர்கள்.

**விருச்சிகம்** – விருந்தினர் வருகையுண்டு, புதிய திட்டங்கள் கைகூடும், தொழிலில் ஆர்வத்துடன் பணியாற்றுவீர்கள், காரிய அலைச்சல்கள் அதிகரிக்கும் நாள்.

**தனுசு** – குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், பணப்புழக்கம் அதிகரிக்கும், பெரிய மனிதர்களின் தொடர்புகள் நன்மை தரும், தூரதேசச் செய்திகள் மகிழ்ச்சி தரும்.

**மகரம்** – அதிர்ஷ்ட வாய்ப்புக்கள் அலை மோதும் நாள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், செய்தொழில் மேன்மையுண்டு, உதிரி வருமானங்கள் வந்து சேரலாம்.

**கும்பம்** – குடும்பத்தினரை அனுசரித்துச் செல்வது நல்லது, தொழில் ரீதியாக எடுத்த முயற்சிகளில் சில தாமதங்கள் ஏற்படலாம், நண்பர்களின் ஒத்துழைப்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு.

**மீனம்** – எதிர்பாராத மனஸ்தாபங்கள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம், உடல் நலனில் கவனம் தேவை, கவலைகள் தீர கணபதியை வழிபட வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 60 | 50 | 60 |
| உருளைக்கிழங்கு | 130 | 100 | 100 | 120 |
| பச்சைமிளகாய் | 100 | 120 | 80 | 80 |
| தக்காளி | 40 | 40 | 40 | 60 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 40 | 50 | 40 |
| கோவா | 40 | 30 | 40 | 40 |
| கரட் | 90 | 60 | 80 | 120 |
| பூசணி | 30 | 30 | 30 | 40 |
| புடோல் | 40 | 50 | 60 | 40 |
| வாழைக்காய் | 25 | 30 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 80 | 80-90 | 80 |
| பெரிய வெங்காயம் | 80 | 80 | 60 | 80 |
| பாகற்காய் | 140 | 140 | 100 | 100 |
| வெண்டிக்காய் | 60 | 80 | 50 | 60 |
| கருணைக் கிழங்கு | 40 | 50 | — | 60 |
| பயிற்றங்காய் | 60 | 80 | 100 | 80 |
| லீக்ஸ் | 60 | 60 | 80 | 140 |
| பீற்றூட் | 40 | 40 | 50 | 60 |
| கறிமிளகாய் | 100 | 70 | 90 | 100 |
| முருங்கைக்காய் | 80 | 150 | 100 | 160 |
| போஞ்சி | — | 140 | — | 140 |
| கத்தரிதம்புள்ள | — | 50 | 50 | — |
| கீரை - 1 பிடி | 10 | 20 | 25 | 30 |
| தேசிக்காய் | 90 | 120 | 90 | 60 |
| தேங்காய் (ஒன்று) | 25-60 | 50 | 40 | 40 |
| இராசவள்ளி | 80 | 100 | 100 | 80 |

# ஈழத்தமிழர்கள் பிரச்சினையில் அரசியல் செய்ய வேண்டாம்

### அமைச்சர் ஜீ.கே.வாசன் தெரிவிப்பு

இலங்கைத் தமிழர்களுக்கும் மீனவர்களுக்கும் மத்தியரசு செய்கிற நன்மைகளைத் தடுக்கும் வகையில் தமிழக அரசியல் கட்சிகள் சில அநீதி இழைக்கின்றன. இதில் அரசியல் செய்ய வேண்டாமென மத்திய அமைச்சர் ஜீ.கே. வாசன் தெரிவித்துள்ளார்.

தேணியில்பிரசாரத்துக்கு வருகை தந்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து கூறுகையில்,

மீனவர்களின் பிரச்சினையை முக்கியமாகக் கருதி அவர்களின் அச்சத்தை நீக்க மத்திய அரசு இலங்கை அரசுடன் தொடர்ந்து பேசி வருகிறது. இலங்கைக் கடற்படை செய்யும் தவறுகளைக் கண்டித்து அவர்களை அடக்கி வைத்தது. இரு தரப்பு மீனவர்கள் பேச்சுவார்த்தை நடக்க மத்திய அரசுதான் காரணம். இரண்டாவது கட்ட பேச்சுவார்த்தை நடத்தப்படாததற்கு, மாநில அரசுதான் காரணம்.

இலங்கையில் போரினால் பாதிக்கப்பட்ட மக்கள் பலர் இன்னும் வீடுகளுக்குச் செல்லவில்லை. இராணுவப் பாதுகாப்பில் இருக்கி றார்கள். அவர்களை விடுவிப்பது இந்தியாவின் கடமை. சிங்களவர்களுக்கு கிடைக்கக் கூடிய உரிமை, பாதுகாப்பு, நல்வாழ்வு... எல்லாமும் தமிழருக்குக் கிடைக்க மத்திய அரசு படிப்படியாக நடவடி க்கை எடுத்து வருகிறது.

இதற்கு நடுவே மீனவர் பிரச்சினை வந்துவிட்டது. மீனவர் பிரச்சினையால் அங்குள்ள தமிழர்கள் பாதிக்கப்படக் கூடாது என்று மத்திய அரசு நினைக்கிறது. அதனால், இங்கு இருக்கும் மற்ற அரசியல் கட்சிகள் மத்திய அரசை குறைகூறி வாக்கு வாங்கிவிடலாம் என்று நினைக்கின்றன. இதுவரை இலங்கைத் தமிழர்களுக்கு 6 ஆயிரத்து 500 கோடி ரூபாயை செலவு செய்துள்ளது இந்தியா.

ஜெனீவாவில் இந்தியா நடுநிலைமையாக இருந்ததால்தான், இந்த உதவியைச் செய்ய முடிந்தது. இந்தியாவின் நோக்கம், அங்கு வாழும் மக்களுக்கு மேலும் பாதிப்பு ஏற்படக் கூடாது என்பதுதான். இங்கு இருக்கும் ஒட்டுமொத்த தமிழக கட்சிகள், இதை அரசியல் ஆக்குகிறார்கள்.

இலங்கைத் தமிழர்களுக்கும் மீனவர்களுக்கும் மத்திய அரசு செய்கிற நன்மைகளைத் தடுக்கும் வகையில், தமிழக அரசியல் கட்சிகள் சில அநீதி இழைக்கின்றன. இதில் அரசியல் செய்ய வேண்டாம் என்பது என் பணிவான வேண்டுகோள் என்றார். (2)

## சர்வதேச உள்ளக விசாரணை நடத்தப்படுவது அவசியமானது

### தேசிய சமாதான பேரவை தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

சர்வதேச தரத்திலான உள்ளக விசாரணை நடத்தப்பட முடியும் என தேசிய சமாதானப் பேரவையின் தலைவர் ஜெஹான் பெரேரா தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

சர்வதேச அழுத்தங்கள் அவசியமானது. எனினும், அது நாட்டின் அடிப்படை கட்டமைப்பில் மாற்றங்கள் செய்யக் கூடிய வகையிலான தீர்வுத திட்டங்களையோ அழுத்தங்களையோ ஏற்றுக்கொள்ள முடியாது.

ஐக்கிய நாடுகள் மனிதவுரி மைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் நிறைவேற்றப்பட்ட போது வாக்களிப்பில் பங்கேற்காத சில நாடுகள், சர்வதேச விசாரணைக ளுக்கு ஆதரவாக செயற படக் கூடுமென அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சர்வதேச விசாரணைகள் நடத்தப்படுவதனை இந்தியா பெரிதாக விரும்பவில்லை என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (2)

## இணையத்தள மருந்து கொள்வனவை தவிர்க்கவும்

### சுகாதார அமைச்சு அறிவிப்பு

இணையத்தின் ஊடாக மருந்துப் பொருட்களை கொள்வனவு செய்வதனை தவிர்த்துக் கொள்ளுமாறு சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இணையத்தின் ஊடாக கொள்வனவு செய்யப்படும் மருந்துப் பொருடகள் உரிய தரத்தைக் கொண்டிருப்பதில்லை எனவும் வைத்தியரகளின் பரிந்துரையின்றி பயன்படுத்தும் மருந்து பொருட்கள் உடலுக்கு தீங்கு ஏற்படுத்தும் எனவும் தேசிய ஔடதங்கள் அதிகார சபையின் பணிப்பாளர் டாக்டர் ஹேமந்த பெனரகம தெரிவித்துள்ளார். (2)

## மதுபோதையில் வாகனம் செலுத்திய ஆயிரத்து 130 சாரதிகள் கைது

மதுபோதையில் வாகனம் செலுத்திய ஆயிரத்து 130 சாரதிகள் கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் காலை 6 மணி தொடக்கம் நேற்று காலை 6 மணி வரையான 24 மணிநேரத்திற்குள் 253 சாரதிகள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குடிபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய 609 சாரதிகள், முச்சக்கரவண்டி சாரதிகள் 403 பேர் மற்றும் 118 வான் சாரதிகள் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

மதுபோதையில் வாகனம் செலுத்தும் சாரதிகளைக் கைது செய்வதற்காக, நாடுபூராகவும் கடந்த 10ஆம் திகதி முதல் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

20 ஆம் திகதிவரை இந்த சோதனை நடவடிக்கை தொடரும் என பொலிஸார் அறிவித்துள்ளனர். (2)



யாழ்ப்பாணம் புங்குடுதீவு சிவலப்பிட்டி சனசமூக நிலையம் அம்பாள் விளையாட்டுக் கழகமும் இணைந்து ஆண்டு நிறைவு விழாவும் பரிசளிப்பு விழாவும் அண்மையில் இடம் பெற்றது. இன் நிகழ்வில் பல்வேறு துறைகளில் சாதனை புரிந்தவர்களையும் வழி நடத்தியவர்களையும் பாராட்டும் நோக்கில் இவ் விழா ஏற்பாடு செய்யப்பட்டது.

இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக பல்கலைக்கழக பேராசிரியர் வேல்நம்பி, யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சி.சறிதரன், வட மாகாண உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் ஓய்வு பெற்ற கிராம உத்தியோகத்தர் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் நினைவுப் பரிசில் வழங்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

## வான்- மோ.சைக்கிள் விபத்தில் இருவர் பலி!

ஹொரண் பொலிஸ் பிரிவில் பாணந்துறை - இரத்தினபுரி பிரதான வீதியில் பொருவதன்ட பகுதியில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

வான் ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் இவ்விபத்து நேர்ந்துள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் படுகாயமடைந்து ஹொரண வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு உயிரிழந்துள்ளனர்.

18 மற்றும் 19 வயதுடைய இளைஞர்களே விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

விபத்துடன் தொடர்புடைய வான சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை, அம்பலாங்கொட பொலிஸ் பிரிவில் விடுதி ஒன்றுக்கு பின்புறமாகவுள்ள கடலில் நீராடச் சென்ற மாலைதீவு பிரஜை நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

பகல் நீரில் மூழ்கிய குறித்த நபரை நேற்று முன்தினம் பிரதேச மக்கள் மீட்டு பலபிட்டி வைத்திய சாலையில் அனுமதித்த போதும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

28 வயதுடைய அலி தொகா என்ற நபரே உயிரிழந்துள்ளார். (2)

## இலங்கைக்கு பயணம் செய்யும் அவுஸ்.பிரஜைகளுக்கு எச்சரிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கு பயணம் செய்யும் அவுஸ்திரேலிய பிரஜைகளுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில் பாதுகாப்பு நிலைமைகள் மோசமாக இருப்பதாக அவுஸ்திரேலிய வெளிவிவகார அமைச்சு வெளியிட்டுள்ள பயண எச்சரிக்கை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

பாதுகாப்பு நிலைமைகள் மோசமாக இருப்பதால் அங்கு செல்லும் தமது பிரஜைகள் கவனமாக எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும் என அவுஸ்திரேலியா வலியுறுத்தியுள்ளது. இலங்கையில் இடம் பெறும தாக்குதல் சம்பவங்களில் அவுஸ்திரேலிய பிரஜைகள் சிக்கி விடக்கூடாது.

இலங்கையில் நடைபெறும் ஆர்ப்பாட்டங்கள் மற்றும் போராட்டங்களில் அவுஸ்திரேலிய பிரஜைகள் கலந்துகொள்ளக் கூடாது என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் அரசாங்கத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள், பேரணிகள் மற்றும் போராட்டங்கள் நடைபெறலாம் எனவும் அவற்றை கலைக்க கண்ணீர்ப் புகை குண்டு தாக்குதல்களை நடத்துமாறு இலங்கை அரசாங்கம் பொலிஸாருக்கு உத்தரவிட்டுள்ளது.

இந்த போராட்டங்களில் கலவரங்கள் வெடிக்கலாம் என்பதால், அவை நடைபெறும் பிரதேசங்களுக்கு தமது பிரஜைகளை செல்ல வேண்டாம் எனவும் அவுஸ்திரேலியா கேட்டுக்கொண்டுளளது.

பிரித்தானியாவைத் தொடர்ந்து அவுஸ்திரேலியாவும் இலங்கைக்கு பயணம் செய்யும் தமது பிரஜைகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளது. (2)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வடக்கு மாகாண கல்விமேம்பாட்டுக்கான மீளாய்வு மாநாடு

வடக்கு மாகாண சபையின் கல்வியமைச்சரின் கருத்துக்கமைவாக வடக்கு மாகாணத்தின் தற்போதைய கல்வி நிலையை ஆராய்ந்து அவற்றை மேம்படுத்துவதற்கான செயற்றிட்டங்களை அமுல்படுத்தும் நோக்கில் வடக்கு மாகாணத்தின் கல்விமான்களை உள்ளடக்கிய பின்வரும் ஆறு பிரதான குழுக்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

*1. கற்றலும்- கற்பித்தலும்*

*2. மாணவர் -ஆசிரியர் ஒழுக்கமும் ஆலோசனையும்*

*3. ஆசிரியர்கள்- நிர்வாகிகள் சம்பந்தமானவை*

*4. நிதி தொடர்பானது உத்தியோகத்தர் தேவைகள், மாணவர் தேவைகள்*

*5.கல்வி நிர்வாக அமைப்புக்களும் அதற்கான மாற்றீடுகளும்*

*6. திட்டமிடல் மற்றும் தரவுமையமான ஆராய்ச்சியும் அபிவிருத்தியும்*

இக்குழுக்கள் வடக்கு மாகாணத்தின் கல்விசார் பிரச்சினைகளையும் அவற்றிற்கான தீர்வுகளையும் இனங்காணும் படிமுறைகளில் ஒன்றாக வடக்கு மாகா ணத்தின் பொதுமக்கள் , ஆசிரியர்கள், கல்விமான்கள், பொது அமைப்புக்கள் மற்றும் மாணவர்களிடமிருந்து கல்விசார் பிரச்சினைகளையும் அவற்றின் தீர்வுகளுக்கான முன்மொழிதல்களையும் எதிர்பார்த்து நிற்கின்றன.

பொதுமக்கள், பங்குதாரர்களிடமிருந்து அவர்களின் அபிப்பிராயங்கள், தகவல்கள், சிந்தனைக் கருத்துக்களை செயற்குழுவின் கவனத்திற்கு அனுப்பி வைக்குமாறு கோரும் இதனையொத்த விளம்பரம் ஒன்று ஒக்டோபர் 2013 இல் அனைத்து வடக்கு மாகாண தமிழ், சிங்கள பத்திரிகைகளிலும் பிரசுரிக்கப்பட்டது. அனைத்து தரப்பினரிடம் இருந்தும் துலங்கல்களைப் பெற்றுக் கொண்டோம். அனைவருடனும் கலந்தாலோசித்துப் பெற்றுக் கொண்ட ஆலோசனைகளின் தொகுப்பு அறிக்கையில் பிரசுரிக்கப்படுகின்றது. இவ் விளம்பரம் அச்சந்தர்ப்பத்தினைத் தவறவிட்டவர்களுக்காக பிரசுரிக்கப்படுகின்றது.

தங்கள் கருத்துக்களையும் முன்மொழிதல்களையும் 21.04.2014 இற்கு முன்பாக தபால் மூலமோ அல்லது மின்னஞ்சல் மூலமோ அனுப்பி வைத்துதவுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

*தபால் முகவரி*
*கலாநிதி நா. எதிர்வீரசிங்கம்,*
*இணையக் கற்கைநெறி நிறுவனம்,*
*66, கட்டைப்பாலி ஒழுங்கை,*
*யாழ்ப்பாணம்.*
*மின்னஞ்சல் முகவரி:-*
*ethirveerasingam@gmail.com*

*த.குருகுலராசா*
*கல்வி பண்பாட்டலுவல்கள்*
*விளையாட்டுத் துறை மற்றும் இளைஞர்*
*விவகார அமைச்சர்,*
*வடக்கு மாகாணம்.*

(சி-7041)

# பொதுபலசேனா பயங்கரவாத பட்டியலில் இணைத்தமை நகைப்புக்குரியதாகும்

## நிறைவேற்று அதிகாரி டிலந்த வித்தானகே தெரிவிப்பு

பயங்கரவாத அமைப்பு பட்டியலில் பொதுபல சேனா அமைப்பின் பெயர் இணைக்கப்பட்டுள்ளமைக்கு பொதுபலசேனா அமைப்பின் பிரதான நிறைவேற்று அதிகாரி டிலந்த வித்தானகே எதிர்ப்பு தெரிவித்தார்.

இச் செயல் நகைப்புக்குரியது என அவர் குறிப்பிட்டார்.

பொதுபல சேனா பயங்கரவாத அமைப்பு என பெயரிடப்பட்டுள்ளமை குறித்து அவர் தெரிவிக்கையில்,

தமது அமைப்பை பயங்கரவாத அமைப்பாக பெயரிடுவதற்கு முன்னர் தங்களிடம் கலந்தாலோசித்திருக்க வேண்டும் எனவும் அவ்வாறு செய்யப்படாததால் ஜனநாயகப் பிரச்சினை ஏற்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மியன்மார் விரத்து தேரருடன் பொதுபல சேனா தேரர் சந்தித்து படம் எடுத்துக் கொண்டதால் தம்மை பயங்கரவாத அமைப்பு என்று கூற முடியாது எனவும் அப்படியாயின் தடை செய்யப்பட்ட புலிகள் அமைப்புடன் தொடர்பு வைத்திருந்த நோர்வே பயங்கரவாத பட்டியலில் இணைக்கப்பட்டிருக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

பொதுபல சேனா பயங்கரவாத அமைப்பு இல்லை. அது மிகவும் பகிரங்கமாக செயற்படும் அமைப்பு என அவர் தெரிவித்தார்.

சிங்கள பௌத்த மக்களுக்கு உலகில் விடுக்கப்படும் அழுத்தம் இதன்மூலம் வெளிப்படுவதாக டிலந்த வித்தானகே கூறினார். (2)

# வாகன விபத்தில் இருவர் உயிரிழப்பு

(கொழும்பு)

வாரியபொல பொலிஸ் பிரிவில் குருநாகல் -அநுராதபுரம் வீதியில் தங்கஹமுல்ல சந்தியில் இடம்பெற்ற வாகன விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

கார் ஒன்றுடன் பேருந்து மோதியதில் நேற்று முன்தினம் மாலை இவ்விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் காரின் சாரதி மற்றும் இரண்டு பெண்கள் படுகாயமடைந்து வாரியபொல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது ஒரு பெண் உயிரிழந்துள்ளார்.

சாரதியும் மற்றுமொரு பெண்ணும் மேலதிக சிகிச்சைக்காக குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது சாரதி உயிரிழந்துள்ளார்.

வேகமாக பயணித்த கார் வாகனம் ஒன்றை முந்திச் செல்ல முயற்சித்த போது எதிர் திசையில் வந்த தனியார் பேருந்துடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

குறித்த தனியார் பேருந்து சாரதி கைது செய்யப்பட்டுள்ளார்.

வாரியபொல் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (2)


கல்யாண மாலை

இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1978 இந்து
நட்சத்திரம்: பூரட்டாதி 2
கி.பா: 57 செவ் 7 இல்
உயரம்: 5'7"
தகைமை/தொழில்: A/L / சாரதி, Services Station
தொ.இ: B/1313

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: மகம்
கி.பா: 10.25 சூரி செவ் 3 இல்
உயரம்: 6'
தகைமை/தொழில்: A/L / தனியார் நிறுவன முகாமையாளர்
தொ.இ: B/1318

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: சித்திரை 4
கி.பா: 18.75 செவ் 8 இல்
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: CIMA / கணக்காளர்
தொ.இ: B/1320

பிறப்பு: 1985 இந்து
நட்சத்திரம்: சுவாதி 2
கி.பா: 83.5
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: NCT, Civil Engineering / தொழில்நுட்ப உத்தியோகத்தர்
தொ.இ: B/1322

இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1975 இந்து
நட்சத்திரம்: உத்தரம் 1
கி.பா: 6 செவ் 8 இல்
உயரம்: 5'3"
தகைமை/தொழில்: BBA, MCA / தனியார் ஆசிரியர்
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: G/1873

பிறப்பு: 1980 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 3
கி.பா: 36 செவ் 8 இல்
உயரம்: 5'4"
தகைமை/தொழில்: BE / பொறியியலாளர் (டுபாய்)
எதிர்பார்ப்பு: சைவபோசனம்
தொ.இ: G/1874

பிறப்பு: 1981 இந்து
நட்சத்திரம்: மிருகசீரிடம் 1
கி.பா: 22.75 செவ் 8 இல்
உயரம்: 155 cm
தகைமை/தொழில்: Dip. in Education / ஆசிரியர்
தொ.இ: G/1875

பிறப்பு: 1979 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை 1
கி.பா: 63.75
உயரம்: 5'
தகைமை/தொழில்: A/L
தொ.இ: G/1876

கல்யாண மாலை
(சர்வதேச திருமண சேவை)
இல. 144, பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்
பதிவுக் கட்டணம் ரூபா 1000 மட்டுமே
தொடர்பு:- 021 720 1005
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
குறிப்பு: எமது காரியாலயம் காலை 9.00 - 5.00 மணிவரை திறக்கப்படும்.
( [illegible]க்கிழமையும் கல்யாணமாலை விடுமுறை தினம் என்பதனையும் அறியத்தருகின்றோம் )


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# குழந்தைகளது உயர்வில் முன்பள்ளி ஆசிரியர்களது ஆளுமை சார் அணுகுமுறைகள்



கருணாமூர்த்தி பத்மகாந்தன்
ஆசிரியர்
கிளி/ஸ்கந்தபுரம் இல.2 அ.த.க பாடசாலை

ஒரு குழந்தையை நாம் நினைத் தபடி சிறந்த நற்பிரஜையாகவோ, நடத்தை கெட்ட ஒருவராகவோ உருவாக்க முடிகிறது. அத்தகைய நிலையில் சிறந்த நற்பிரஜையாக உருவாக்கும் பொறுப்புதாரர்களாக பெற்றோர், ஆசிரி யர்கள்,



சமூகத்தவர்கள் எனப் பல தரப்பட்டவர்கள் விளங்குகின்றனர். இங்கு பிள்ளைகளை நல்வழிப்படு த்துவதில் பெற்றோருக்கு அடுத்த நிலையில் பொறுப்பேற்பவர்கள் முன்பள்ளி ஆசிரியர்களாவர். இவர்களது கற்பி த்தல் முறைகள் கற்றலை மேம்படுத்தவும் வினைத்திறனாக்கவும் உதவுகின் றன. முன்பள்ளி ஆசிரியர்கள், கற்றல் கற்பித்தல் மற்றும் மாணவர்களது நல்லொழுக்க மேம்பாடு, ஆளுமை த்திறன் விருத்தி என்பவற்றிற்கு உயிர் கொடுப்பவர்களாக திகழ்கின்றார்கள். இத்தகைய தன்மைகளிற்கு உயிர் கொடுக்கும் ஆசிரியர்கள் தொடர்ந்து கற்றுக் கொள்வதுடன் தமது ஆளுமையை வளர்த்துக் கொள்வதற்குப் பின்வரும் ஆற்றல்களையும் அணுகு கையாளுதல் இன்றியமையாதது.

**பிள்ளைகள் மீது நல்ல மனப் பான்மையைக் கொண்டிருத்தல் வேண்டும்.**

"குழந்தையும் தெய்வமும் குண த்தால் ஒன்றென்பர்" மேலும் "எந்தக் குழந்தையும் நல்லவராகவே மண்ணில் பிறக்கிறார்கள். அவர்கள் நல்லவராவதும் தீயவரா வதும் தாய், தந்தை மற்றும் ஆசிரியர்கள், சமூகத்தவர்" எனப் பலரது கைகளிலும் தங்கியுள்ளது. அந்த வகையில், முன்பள்ளி ஆசிரியர்களே! அக்குழந் தைகளை நல்லவராகவும் வல்லவரா கவும் உருவாக்கும் பொறுப்பில் ஓர் பங்கு உங்களது கைகளிலும் உண்டென்பதை மறந்துவிடாதீர்கள். எனவே, முதலில் உங்களை நம்பி வந்த குழந்தைகள் மீது நேர் மனப்பான்மையை ஏற்படுத்துங்கள்.

சிறு குழந்தைகள் என அவர்கள் நல்லது கெட்டது அறியாதவர்கள், வஞ்சனை, கள்ளம் கபடம் அற்ற வர்கள், எதையும் துருவியாராயும் திறனுள்ளவர்கள். எனவே முன்பள்ளி ஆசிரியர்களே உங்களை நம்பி வந்த ஒவ்வொரு பிள்ளையும் நல்லவர்கள். அவர்கள் திறமைசாலிகள், அவர்கள் ஆற்றலுள்ளவர்கள் என்ற ரீதியில் அவர்களை அணுகி, அவர்களின் ஆற்றல்களை மேலும் வளர்ப்பதற்குரிய மனப்பாங்கை ஏற்படுத்தி செயற்பாடு களைத் திட்டமிட்டு நடை முறைப்படுத்தி அதில் வெற்றியும் காணுங்கள்.



**ஒரு தாயைப்போல அரவணைத்தல் வேண்டும்.**

ஆசிரியர்களே நீங்கள் பல்வேறு பாத்திரங்களை முன் மாதிரிகளை (Roll model) ஏற்க வேண்டியவர்களாக உள்ளீர்கள். உங்களுடைய செயற்பாடுகள், மொழிப்பிரயோக ங்கள் எல்லாம் முன்மாதிரியாக அமைதல் வேண்டும். சிறு குழந்தைகள் பெரியவர்களைப் பார்த்து பின்பற்றும் பழக் கத்தை தம்மிடத்தே அதிகம் வளர் த்துக் கொள்ளும் இயல்புடையவர்கள். நீங்கள் சிறந்த முன்மாதிரியாக திகழும் போது தான் அவர்களுடைய பின்பற்றலும் சிறப்பானதாக அமைய வாய்ப்புண்டு.

அடுத்து பாத்திரமேற்றல் என்கிற போது தாயாக, தந்தையாக, வைத்தியராக, நல்ல விளையாட்டுப் பயிற்று விப்பாளராக, கதை கூறுபவராக, நல்ல பாடகராக, நல்ல நடிகராக பல்வேறு பாத்திரங்களை ஏற்கக்கூடிய ஆற்றல், ஆளுமையுடையவர்களாக உங்களை நீங்களே வளர்த்துக் கொள்ளுதல் மிகவும் வேண்டப்படுவ தொன்றாகும். இங்கு நாம் பார்க்கின்ற போது, நான்கு வருடங்கள் தன் தாயுடனே அல்லும் பகலும் அன்பைப் பரிமாறி மகி ழ்ந்த குழந்தை ஓர் புதிய சூழலில் பிரவேசிக்கின்றது. இதுவரை காலமும் தாய் தந்தையர் மூலம் கிடைத்த உறவு மற்றும் அன்பு என்பவற்றிற்கிடையில் ஓர் இடைவெளி ஏற்படுகின்றது. இவ் இடைவெளியில் அதற் கான அன்பில் ஏற்படும் இழப் பென்பது குழந்தையால் ஜீரணிக்க முடியாத தொன்றாகும். நான் சேர்ந்த இந்த புதிய சூழலில் தாயன்பு கிடைக்குமோ? என்று குழந்தை ஏங்குகிறது. அவ்வன்பின் காரணமாகவே புதிதாக சேரும் குழந்தைகள் வீட்டிற்குச் செல்வதற்காக அடம் பிடித்து அழுதல், வேறு சிலர் அமைதியாக இருத்தல், கதைப்பதற்குப் பயப்படல், மன திற்குள் நினைத்து திடீரென்று விம்மி விம்மி அழுதல், முன்பள்ளி வாசலையே பார்த்த வண்ணம் இருத்தல் போன்ற பல்வேறு வெளிப்பாடுகளைக் காட்டி நிற்பதனை எம்மால் அவதானிக்க முடிகின்றது.

ஆகவே ஒரு தாய் எவ்வாறு அன்பை வழங்குகின்றாரோ அதே போன்று ஆசிரியர்களும் அரவணைத்து அன்பை வழங்கி ஆறுதல் வார்த்தைகள் கூறுதலுடன், பிள்ளைகள் கூறுவதையும் செவிமடுத்து அவர்களது குறைகளை யும் தீர்த்தல் வேண் டும். அதன் மூலம் அக்குழந்தைகள் ஆசிரியர் நம்மீது பாசம் வைத்துள்ளார். அவர் தங்களுக்கு துணையாகவும் இருக்கின்றார் என்ற நம்பிக்கை ஏற்படுத்து கின்றது. அதன் மூலம் சிறந்த ஓர் வகுப்பறைச் சூழலைப் பேணி செயற்பாடுகளை மேற்கொள்ள முடிகின்றது.

**குழந்தை உளவியல் பற்றிய அறிவு பெற்றிருத்தல் அவசியம்.**

ஆசிரியத் தொழில் மற்றும் வைத் தியத் தொழில் என்பன மனித உயி ருடன் தொடர்புடைய தொழில்களாகக் காணப்படுகின்றன. உயிர்களுடன் உறவாடுகின்ற உன்னத தொழில்கள் என் பதால் நிச்சயம் பொறுப்புக் கூறுதல் என் பதில் இருந்து தப்பி விட முடியாது.

ஓர் நோயாளியின் நோயைக் குணப் படுத்தலில் வைத்தியரின் பங்கு எவ் வகையிலுள்ளதோ அதேபோல் ஓர் மாணவனது கற்றல் அடைவை மேம்படுத்தலில் ஆசிரியரது பங்கும் மேலா னதாகக் காணப்படுகின்றது. இவ்விரு செயற்பாடுகளுக்கிடையிலும் நெருங்கிய தொடர்பு காணப்படுகின்றது.

இங்கு இரண்டு நபர்களுக்கும் மனிதனது உடல், உள்ளம் பற்றியதும் இவற்றில் ஏற்படும் குறைபாடுகள் பற்றியதும் அவற்றை எவ்வகையில் நிவர்த்தி செய்து மனிதனைக் குணப்படுத்தி மேம்படுத்தலாம் என்ற ஆழமான அறிவும் அனுபவமும் அவசியமானதாகக் காணப்படுகின்றது. இந்த வகையில் முன்பள்ளி ஆசிரியரால் குழந்தைகளது உள்ளம் மற்றும் உலக ரீதியான நிலை மைகள் போன்றவற்றை இலகுவாக அறிந்து பொருத்தமான முறையில் அப் பிரச்சினைகளிற்கு தீர்வு காணக் கூடிய திறன் பெற்றிருத்தல் வேண்டும். இது எல்லோராலும் முடியாத காரியமாகும். இதற்கு ஒவ்வொரு முன்பள்ளி ஆசிரியர்களும் கட்டாயமாக குழந்தை உளவியல் பற்றிய ஆழமான அறிவும் அதனுடன் இணைந்த அனுபவங்களை யும் பெற்று தம்மை மேம்படுத்தல் மிக மிக அவ சியமாகும். அல்லாவிடத்து முன் பள்ளிக் குழந்தைகளைக் கையாளுதல் என்பது கையாலாகாத செயலாகிவிடும்.

**பிள்ளைகள் மீது அக்கறை உடையவர்களாக இருத்தல் வேண்டும்.**

தாம் பெற்றெடுத்து வளர்த்து அன்பு காட்டி முழு நேரமும் தமது கண்காணிப்பில் வைத்திருந்த பிள்ளைகளைப் பெற்றோர் அவற்றின் எதிர்கால நன்மை கருதி குறிப்பிட்ட மணிநேரம் அவர்களை நம்பிக்கையின் பேரில் உங்களிடம் ஒப்படைக்கின்றார்கள்.

எனவே பெற்றோர்கள் தமது குழந்தைகளில் எவ்வளவு அக்கறை கொண்டுள்ளார்க ளோ அதைவிட ஒரு படி மேலான அக்கறையை தாமும் பிள்ளைகளிடத்தே காட்ட வேண்டும் என்ற மனப்பாங்கை முன்பள்ளி ஆசிரியர்கள் வளர்த்துக் கொள்ள வேண்டும். உங்கள் சொந்தப் பிள்ளைகள் மற்றும் உங்கள் உறவுகளது பிள்ளைகள் மேல் எவ்வளவு அன்பும் அக்கறையும் காட்டு வீர்களோ அதேபோல் உங்களை நம்பி வந்த மழலைச் செல்வங்கள் மீதும் அன்பும் அக்கறையும் காட்டுங்கள்.

(தொடரும்)



## கல்வித் தரிசனம்

கல்வித் தரிசனம் பகுதிக்கு துறைசார்ந்தவர்களிடமிருந்து தரமான ஆக்கங்கள் கோரப்படுகின்றன.
அனுப்ப வேண்டிய முகவரி:-
வலம்புரி
கல்வித் தரிசனம்
இல.3,2 ஆம் ஒழுங்கை.
பிறவுண் வீதி.
யாழ்ப்பாணம்.
(ஆ-ர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சதுரகிரி சித்தர்கள்

## ஆன்மீகம் 94

...இவரை தூரத்திலிருந்து பார்த்தால் பிள்ளையார் உருவம் போலவும், அருகில் சென்று பார்த்தால் வெள்ளைப் பாறை போலவும் தெரிவார். அதற்கு மேல்புறம் போகிற பாதைக்கு வட பக்கம் மிகப் பெரிய வனம் இருக்கிறது என்று இந்த வெள்ளைப் பிள்ளையாரைக் காண வழிகாட்டுகின்றது மலைவாகடம்.

ஆனால் மலைவாகடம் சொல்லாத செய்தி இங்கே குரங்குத் தொல்லை அதிகம் என்பதுதான்.

சம தரையில் நடந்து வந்த நாங்கள் இப்போது படிக்கட்டு போன்ற பாதையில் ஏற ஆரம்பிக்கிறோம். பிடிமானம் தான் ஏதுமில்லை. அருகில் இருக்கும் குத்துச்செடிகளைப் பிடித்துக் கொண்டு மெதுவாக ஜம்ப் செய்கிறோம். செங்குத்தான பாதை.


அப்பாடா! என்று மூச்சு வாங்குவதற்குள் ஒரு குறுகிய திருப்பம். சீயக்காய்ச் செடியின் வாசம் கமகமத்தது.

என்ன வாசம்? நிமிர்ந்து பார்க்கிறோம். ஒவ்வொரு மரத்திலும் ஒவ்வொரு குரங்குகள் சின்னதும் பெரியதுமாய் அமர்ந்திருந்தன.

இப்பொழுது எச்சரிக்கையாக ஆளுக்கு ஒரு கொம்பைக் கையில் எடுத்துக் கொண்டோம். பதட்டம் வேண்டாம். அவைகளை நாம் தொந்தரவு செய்யாத வரையில் அவைகளும் நம்மைத் தொந்தரவு செய்யாது என்று கூறிய்வாறே முன்னால் சென்றார் நாகராஜ்.

குரங்குகள் எங்கள் கையில் இருந்த கைப்பைகளையும் பொலித்தீன் பைகளையும் பறிப்பதற்கு அருகில் வந்தன.

அருகில் வரும் குரங்குகளைச் திசை திருப்புவதற்காக பாக்கெட்டில் வைத்திருந்த டைரி மில்க் சாக்லெட்டுகளை



வெள்ளைப் பிள்ளையார்

அவைகளை நோக்கி வீசினார் சாக்ரடீஸ்.

ஆனால் அது எவ்வளவு பெரியதவறு என்பது அடுத்த சில நொடிகளில் தெரிந்தது. மரத்திற்கு ஒன்றிரண்டு குரங்குகள் என்ற நிலை மாறி மரக்கிளையெங்கும் குரங்குகளாய்க் காட்சியளித்தன. கண் மூடிக் கண் திறப்பதற்குள் இவ்வளவு குரங்குகளா!

எல்லாக் குரங்குகளும் ஒன்று சேர்ந்து எங்கள் கைப்பைகளை பிடுங்கிச் செல்ல ஆயத்தமாயின.

எங்களுக்கு ஒரே அதிர்ச்சி. இது எப்படி நடந்தது?

பாக்கெட்டிலிருந்து சாக்லெட்டுகளை அள்ளி வீசவே, கைப்பைகளிலும் ஏதேனும் உணவுப் பொருட்கள் இருக்கும் என்பதற்காக அதனைப் பிடுங்கிக் கொள்ள அனைத்து வானரங்களும் திரண்டு வந்திருந்தன.

ஏன் இப்படி செய்தீர்கள்? என்று அனைவரும் சாக்ரடீஸை கோபித்துக் கொண்டனர். கையிலிருந்த கம்பால் சூ.... காட்டினார். கம்புகளைக் கண்டதும் குரங்குகளுக்குக் கோபம் வந்துவிட்டது போலும். பல்லை இளித்துக் கொண்டு இன்னும் அருகில் வரத் தொடங்கின.

நாகராஜ் தன் உண்டி வில்லால் அவைகளை விரட்டிக் கொண்டிருந்தார். கழிகளுக்குப் பயப்படாத குரங்குகள் கவண் கல்லுக்குப் பயப்பட ஆரம்பித்தன.

இனி நிறைய குரங்குகள் படையெடுத்து விடும். சீக்கிரம் பார்த்துவிட்டுக் கிளம்புங்கள் என்று கூறவே ஒருவர் மட்டுமே நடக்கக்கூடிய அந்தக் குறுகலான பாதையில் ஒருவர்பின் ஒருவராகப் பார்த்துவிட்டு நகரத் தொடங்கினோம்.

குட்டி யானை ஒன்று தும்பிக் கையை அசைத்து நம்மை விளையாட அழைப்பது போன்ற தோற்றம். நேர் எதிரே சென்று பார்த்தால் மட்டுமே அந்த அழகிய பிள்ளையார் வடிவம் புலப்படும். வெள்ளைக்கல் பிள்ளையாரை தரிசித்துவிட்டு வந்த வழியே திரும்பினோம். வழியில் போட்டுவிட்டுச் சென்ற சாக்லெட்டுகள் அப்படியே இருந்தன. மேலுக்குக் கிடந்த ஒரு சில துண்டுகளை எடுத்துக் கொண்டு திரும்பிப் பார்க்காமல் சென்று கொண்டிருந்தோம்.

இந்த வெள்ளைப் பிள்ளையாரைப் போலவே கருப்புப் பிள்ள்யார் ஒன்று சூரிய கிரியில் இருக்கிறதாம். அங்கு சென்று பார்த்தால் இரண்டு பாறைகளுக்கு இடையில் யானை ஒன்று படுத்திருப்பது போல ஒரு கல் தோன்றுமாம். அசல் கருப்பு யானை ஒன்று ஆசீர்வாதம் செய்ய தும்பிக்கையைத் தூக்குவது போன்றோ அல்லது நமது கையிலிருந்து ஏதேனும் பொருளை வாங்குவது போன்றோ காணப்படுமாம். பக்கத்தில் வந்த துறவி சொன்னார்.

இப்போது அதனைக் காண முடியுமா?

பாதை மாறி வந்து விட்டோம். அதனால் அதைப் பார்க்க முடியாது. இப்போது வாதமேட்டைப் பார்ப்போம் வாருங்கள் என்று மேலே சென்றார் நாகராஜன்.

குரங்குகள் எங்களைப் பின்தொடருகிறதோ? என்ற பயத்துடனே அவருக்குப் பின்னால் சென்றோம்.

(தொடரும்)

டாக்டர். சீ. எஸ். முருகேசன், எம்.ஏ., பி.எச்.டி

# இந்தக் குளத்தில் கல்லெறிந்தவர்கள்

13

...இப்படியெல்லாம் அவரை நான் அனுபவிக்கிறேன் என்று அவருக்குத் தெரியாது.

ஆனாலும் அவரை நான் நேசிக்கிறேன்.

அவர் உச்சரிப்பைப் பற்றித் தமிழ் நாட்டில் சச்சரவு உண்டு.

தமிழர்களே தமிழை தமிலாக உச்சரித்துக் கொண்டிருக்கும் போது ஒரு பிற மொழிக்காரர் தமிழைப் பிறழ உச்சரிப்பதில் ஆச்சரியமில்லை.

'திருக்கோயிலே' என்று எழுதிக் கொடுத்தால் 'தெருக்கோயிலே' என்று பாடுகிறார்கள் என்று கவியரசு கண்ணதாசன் இவரை ஒருமுறை கண்டித்தார்.

ஒலிப்பதிவின் போது எழுதிக் கொடுத்தவர் வந்து திருத்த வேண்டியது தானே என்று ஜேசுதாஸ் திருப்பிக் கேட்டார்.

கவியரசு கண்ணதாசனுக்கு ஜேசுதாஸ் வழங்கிய உரிமையை அவர் எடுத்துக் கொண்டாரோ இல்லையோ நான் எடுத்துக் கொண்டேன்.

அந்த உரிமையைத்தான் அவரால் ஜீரணிக்க முடியவில்லை என்று சிறுகச் சிறுகக் கண்டு கொண்டேன்.

ஜேசுதாஸ் குரல் மீது எனக்கு எவ்வளவு மயக்கமோ தமிழ் சரியாக உச்சரிக்கப்பட வேண்டும் என்பதிலும் எனக்கு அவ்வளவு இறுக்கம்.

பிரசவ அறைக்கு வெளியே நிற்கும் புருஷனின் கவலையெல்லாம் பெற்றவளும் இறந்துவிடக் கூடாது பிள்ளையும் இறந்து விடக்கூடாது என்பதுதான்.

கர்ப்பமே குழந்தைக்குக் கல்லறையாகிவிட்டால்....?

பிறக்கும் குழந்தை கையில் கொள்ளியோடு பிறந்தால்....?

அந்தக் கணவனின் கவலைதான் இந்தக் கவிஞனின் கவலை.



## ஜேசுதாஸ்

அவ்வளவு பெரிய சங்கீத மேதையால் இந்தச் சின்ன விஷயத்தைச் செரித்துக் கொள்ள முடியவில்லை.

திருத்துவதை அவர் தன்னை வருத்துவதாய் நினைக்கிறார்.

ஒலிப்பதிவுக் கூடத்திற்கு நான் பிரம்போடு வருவதாக ஒரு பிரமை இருக்கிறது அவருக்கு.

ஒலிப்பதிவுக் கூடத்தில் ஒவ்வொரு முறையும் [illegible] தான் கைகுலுக்கிக் கொள்கிறோம்.

குலுக்கிய கைகள் பிரிகிறபோது கையில் ரத்தமே கசிகிறது.

ஆனாலும் அவரை நான் நேசிக்கிறேன்.

ஈரமான ரோஜாவே ஒலிப்பதிவாகிக் கொண்டிருந்தபோது **தண்ணீரில் மூள்காது காற்றுள்ள பந்து** என்றே பாடிக் கொண்டிருந்தார்.

ரொம்ப நேரமாய்த் தமிழ் மூழ்கிக் கொண்டிருந்தது.

மயிலிறகால் மருந்திடுவது மாதிரி நளினமாய்ச் சொன்னேன்; திருத்திக் கொண்டார்.

**'வெள்ளைப்புறா ஒன்று'** பாட வந்தபோதும்

முதல் எளுத்து தாய் மொளியில்


தலை எளுத்து யார்மொளியில்

என்றுதான் சோகமாய்ப் பாடிக் கொண்டிருந்தார்.

அதன்பிறகுதான் பாடல்களை நான் சொல்லச் சொல்ல அவர் தன் தாய்மொழியில் எழுதிக் கொள்ளும் வழக்கத்தை ஏற்படுத்தினோம்.

நாமெல்லாம் சிறப்பு 'ழ' கரம் என்று கருதிக் கொண்டிருக்கிற 'ழ' கரம்தான் பிற மொழியாளர்களுக்கு வெறுப்பு ழகரமாக இருக்கின்றது என்ற உண்மையை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

லதா மங்கேஷ்கரும், ஆஷாபோன்ஸ்லேயும் கூட மராட்டியின் மூல [illegible] இந்த 'ழ' கரத்தைப் புரிந்து கொள்கிறார்களே தவிர இந்தியில் சுட்டுவதற்கு எழுத்தே இல்லை.



'அ'கரம் தமிழுக்கு சிகரம் என்பதைக்கூட நாம் மறுபரிசீலனை செய்ய வேண்டியவர்களக இருக்கிறோம்.

'அ'கரம் தமிழுக்கு அஸ்திபாரம் தான்.

'ழ'கரம் தான் தமிழுக்குச் சிகரம்.

அந்தச் சிகரத்தில் ஏற முடியாமல் தான் பலருக்குச் சிராய்ப்புகள்.


அடிக்கடி திருத்துகிற ஆசிரியர் உத்தியோகம் பார்க்கக்கூடாது என்பதை அறிவேன் நான்.

ஆனாலும் * கோடிக்கணக்கான தமிழர்கள் கேட்கும் பாட்டு, கொச்சையாகிவிடக்கூடாது என்பதற்காகவே அவர் புண்படுத்தப்படுவாரே என்று புரிந்தும்கூடப் பண்படுத்த வேண்டிய பணியைப் பண் பாட்டோடு செய்ய வேண்டியிருக்கிறது.

-வைரமுத்து- (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அதிசயப்பழம்


...சிற்சில மக்களுக்கு மட்டுமே பயன்படும் பொருட்கள் உலகத்தவர் அனைவருக்கும் கிடைத்தால் நன்மையே தவிர ஆபத்தில்லை என்பதை வலியுறுத்தினர்.

தவிர, அப்பழங்களை வெளியுலகிற்குப் பயன்படுத்தினால் அதனால் கிடைக்கும் வருமானம் காணியின மக்களுக்குப் பெரிதும் பயனாகும் என்றும் புரிய வைத்த பிறகே, அவர்கள் ரகசியத்தைக் கூற ஒப்புக் கொண்டனர்.

கடைசியில் அவர்கள் பழத்தின் பெயரைக்கூறவும், பழம் தோன்றும் மரத்தைக் காட்டவும் ஒப்புக் கொண்டு, மல்லனை அவர்களுடன் அனுப்பினர்.

அவ்வாறே, மல்லன் காட்டில் அவர்களை அப்பழங்கள் தோன்றும் தாவரங்கள் இருக்குமிடத்திற்குக் கூட்டிச் சென்றான்.

அவை செடிகள் வடிவத்திலேயே இருந்தன. அந்தப் பழத்தின் பெயர் 'ஆரோக்கிய அப்பச்சா'



என்று மல்லன் தெரிவித்தான்.

அந்தப் பழங்கள் சிலவற்றையும், சில செடிகளையும் விஞ்ஞானிகள் தங்களுடன் எடுத்துச் சென்று, ஆராய்ச்சி சாலையில் ஆய்வு செய்தனர்.

ஆரோக்கிய அப்பச்சாவில் நிறைந்திருந்த சில ரசாயனப் பொருட்கள் உடலுக்கு சுறுசுறுப்பையும், அளவில்லா ஆற்றலையும தருகின்றன என்ற உண்மையைக் கண்டு பிடித்தனர்.

அதன் விஞ்ஞானப் பெயர் 'ட்ரிக்கோபஸ் ஜீலானிகஸ் டிராவாங்கோரியஸ்' என்பதாகும்.

அந்தச் செடி, உலகிலேயே கேரளத்திலும் தமிழகத்தின் சில பகுதிகளில் மட்டுமே பயிராகிறது என்றும், கண்டுபிடித்தனர்.

பலவிதமான ஆராய்ச்சிகளுக்குப் பிறகு, இறுதியாக அந்தத் தாவரங்களில் இருந்து விஞ்ஞானிகள் வெற்றிகரமாக ஒரு மருந்தினைத் தயாரித்தனர்.

அவர்களுடைய கனவு நனவாகியது.

காணிப் பழங்குடியின மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குறுதி நிறைவேற்றப்பட்டது.

மருந்துகளின் விற்பனையிலிருந்து கிடைத்த வருமானத்தின் ஒரு பகுதி முறையாக அவர்களுக்குச் சென்றது.

பழங்குடி மக்கள் தங்களுக்குள்ளாக ஒரு குழு அமைத்துக் கொண்டு, அந்த வருமானத்தை தங்களுடைய பொதுநலத் திட்டங்களில் செலவிட்டனர்.

தற்போது, அந்தத் தாவரங்கள் வளரும் காட்டுப்பகுதி காட்டிலாகாவின் பொறுப்பில் உள்ளது.

பழங்குடி மக்கள் தங்களுடைய நிலத்தில் ஆரோக்கிய அப்பச்சாச் செடிகளைப் பயிரிட காட்டிலாகா அனுமதித்துள்ளது.

காட்டிலேயே வசித்துவரும் காணியின மக்களுக்கு, தாங்கள் பரம்பரையாகத் தெரிந்து வைத்துள்ள தாவரங்களைப் பற்றிய தகவல்கள் எவ்வளவு தூரம் பயன்படுகின்றன என்பது புரிய வந்து உள்ளது.

தங்கள் வாழ்க்கையையே மேம்படுத்த அவை உதவுகின்றன என்ற உண்மை தற்போது அவர்களுக்குத் தெரியவந்துள்ளது.

(முற்றும்)




- 69 - பெட்ரியாக்கும் என்ற இடத்தில் இடம்பெற்ற போரின் பின்னர், விட்டேலியஸ் என்பவன் ரோம் பேரரசின் மன்னன் ஆனான்.
- 1492 - வாசனைப் பொருட்களை ஆசியாவில் கொள்வனவு செய்யும் உரிமையை கொலம்பஸ் ஸ்பெயின் அரசிடம் இருந்து பெற்றுக் கொண்டார்.
- 1524 - இத்தாலிய நாடுகாண் பயணி ஜோவானிடா வெரசானோ நியூயோர்க் துறைமுகத்தை அடைந்தார்.
- 1861 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: வேர்ஜீனியா கூட்டணியில் இருந்து விலகியது.
- 1864 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: கூட்டமைப்புப் படைகள் வட கரோலினாவின் பிளைமவுத் நகரைத் தாக்கினர்.
- 1895 - சீன-ஜப்பான் போரை முடிவுக்குக் கொண்டு வந்த ஒப்பந்தம் சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்டது.
- 1941 - இரண்டாம் உலகப் போர்: யூகொஸ்லாவியப் பேரரசு ஜேர்மனியிடம் சரணடைந்தது.
- 1961 - அமெரிக்க உளவு நிறுவனமான சிஐஏயினால் பயிற்சியளிக்கப்பட்ட கியூபா அகதிகள் குழு ஒன்று பிடெல் காஸ்ட்ரோவைப் பதவியில் இருந்து அகற்றும் நோக்குடன் பிக்ஸ் விரிகுடாவில் தரையிறங்கினார்.
- 1969 - செக்கோசிலொவாக்கியாவின் கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் அலெக்சாண்டர் டுப்செக் பதவியில் இருந்து அகற்றப்பட்டார்.
- 1970 - அப்போலோ 13 விண்கப்பல் பழுதடைந்த நிலையில் தனது பயணத்தை இடைநிறுத்தி பூமிக்குத் திரும்பியது.
- 1971 - முஜிபுர் ரகுமான் தலைமையில் வங்காள தேச மக்கள் குடியரசு அமைக்கப்பட்டது.
- 1975 - கம்போடியாவில் கெமர் ரூச் படைகள் தலைநகர் நாம் பென்னைக் கைப்பற்றினர். கம்போடிய அரசு சரணடைந்தது.
- 1986 - 335 ஆண்டுகள் போரை முடிவுக்குக் கொண்டு வரும் ஒப்பந்தம் நெதர்லாந்துக்கும் சில்லி தீவுகளுக்கும் இடையில் கைச்சாத்தானது.
- 2004 - இந்தியத் திரைப்பட நடிகை சௌந்தர்யா பெங்களூரில் விமான விபத்தில் இறந்தார்.

### பிறப்புகள்

- 1756 -தீரன் சின்னமலை, இந்திய விடுதலைப் போராட்ட வீரர் (இ. 1805)
- 1894 - நிக்கிட்டா குருஷேவ், சோவியத் ஒன்றியத்தின் பிரதமர் (இ. 1971)
- **1916 - சிறிமாவோ பண்டாரநாயக்க, இலங்கையின் பிரதம மந்திரி, உலகின் முதல் பெண பிரதமர் (இ. 2000)**
- 1946 - ஜோர்ஜெஸ் கோஹ்லெர், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் (இ. 1995)
- 1972 - முத்தையா முரளிதரன், இலங்கைப் பந்தாளர்

### இறப்புகள்

- 1761 - தொமஸ் பேயிஸ், ஆங்கிலேயக் கணிதவியலாளர்
- 1790 - பெஞ்சமின் பிராங்கிளின், அமெரிக்க கண்டுபிடிப்பாளர் (பி. 1706)
- 1942 - ஜீன் பெரின், நோபல் பரிசு பெற்ற பிரெஞ்சு இயற்பியலாளர் (பி. 1870)
- 1975 - சர்வபள்ளி ராதாகிருஷ்ணன், சுதந்திர இந்தியாவின் முதல் குடியரசுத் துணைத்தலைவர், இரண்டாவது குடியரசுத் தலைவர் (பி. 1888)
- 1976 - ஹென்ரிக் டாம், மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்றவர் (பி. 1895)
- 1994 - ரொஜர் ஸ்பெரி, மருத்துவத்துக்கான நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (பி. 1913)
- 2004 - சௌந்தர்யா, இந்திய நடிகை (பி. 1971)
- 2013 - டி.கே. ராமமூர்த்தி, தென்னிந்திய திரைப்பட இசையமைப்பாளர் (பி. 1922)

### சிறிமாவோ பண்டாரநாயக்க



சிறிமாவோ ரத்வத்தை டயஸ் பண்டாரநாயக்க 1916 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17 ஆம் திகதி பிறந்தார். இவர் இலங்கையின் ஓர் அரசியல்வாதியாவார். இவர் இலங்கையின் பிரதம மந்திரியாக மூன்று முறை, 1960-1965, 1970-1977 மற்றும் 1994-2000 ஆகிய காலப்பகுதிகளில் பதவியில் இருந்தவர்.

இவரே உலகிலேயே முதலாவது பெண பிரதமருமாவார். இலங்கை சுதந்திரக் கட்சியின் தலைவராக இருந்தவர். இவரது கணவர் மறைந்த முன்னாள் இலங்கை பிரதமர் சொலமன் பண்டாரநாயக்க. மகள் சந்திரிக்கா பண்டாரநாயக்க இலங்கையின் நான்காவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்தவர். இவரது ஏனைய மக்கள் அநுரா பண்டாரநாயக்க, சுனேத்திரா பண்டாரநாயக்க ஆகியோர்.

எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்க கொல்லப்பட்டபின்னர் கட்சியின் தலைமைப் பொறுப்பில் நியமிக்கப்பட்டார். ஜூலை 21, 1960 இல் முதன் முறையாக பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1965 இல் நடந்த பொதுத்தேர்தலில் கட்சி தோல்வியடைந்ததைத் தொடர்ந்து 1970 வரை எதிர்க்கட்சித் தலைவராக இருந்து கட்சியை வழி நடாத்தினார். 1970 பொதுத்தேர்தலில் இடதுசாரிகளுடன் கூட்டுச் சேர்ந்து பெரும் வெற்றி பெற்று இரண்டாம் முறை மீண்டும் பிரதமரானார்.

1977 இல் நடந்த தேர்தலில் கட்சி படு தோல்வி அடைந்தது. 1980 இல் அன்றைய ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் ஆட்சியினால் ஊழல் குற்றச்சாட்டுகளில் பாராளுமன்றத்தில் இருந்து வெளியேற்றப்பட்டு குடியுரிமை பறிக்கப்பட்டு ஏழு வருடங்களுக்கு அரச பதவிகளை ஏற்கத் தடை செய்யப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "ஜய" வருட ராசிபலன்கள்

# துலாம்

# ஜென்மச் சனி விலகும் நேரம்!





**சித்திரை 3,4 ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள்**

**ஜென்மச்சனி விலகும் நேரம்!**
**நேரம் காலம் பார்த்துச் செய்தால்**
**நினைத்ததை எல்லாம்**
**சாதிக்கலாம் என்று சொல்லும்**
**துலாம் இராசி நேயர்களே!**

விஜய வருடம் முடிந்து ஜய வருடம் தொடங்கிவிட்டது. தனாதிபதி செவ்வாய் விரய ஸ்தானத்தில் சஞ்சரிக்க, உச்சம் பெற்ற ஜென்மச் சனி வக்ர இயக்கம் காண, சர்ப்பக் கிரகமான ராகு- கேதுக்களின் பிடியில் இருந்தபடியே ஜயவருடம் பிறக்கிறது.

சுக்ரனின் ஆதிக்கம் உங்களுக்கு இருப்பதால் கவர்ச்சிகரமாகப் பேசி காரியங்களை சாதித்துக் கொள்வீர்கள். எதைப் பற்றியும் கவலைப்பட மாட்டீர்கள். ஆடை, அணிகலன்கள் அணிவதிலும் ஆகாரங்களைத் தேர்ந்தெடுத்து சாப்பிடுவதிலும் அதிக பிரியம் கொண்டவர்கள் நீங்கள். இலக்கியம், கலை, சினிமா என்று ஏதேனும் ஒரு துறையில் ஈடுபாடு கொள்வீர்கள்.

நவக்கிரகங்களில் களத்திர காரகன் என்று வர்ணிக்கப்படுபவர் உங்கள் இராசிநாதன் சுக்ரனாவார். குடும்ப ஸ்தானாதிபதியாகவும் செவ்வாய் விளங்குவதால் செவ்

## சிவல்புரி சிங்காரம்

வாயின் பலத்தையும், இராசிநாதன் சுக்ரனின் பலத்தையும் பார்த்தே வாழ்க்கைத் துணையைத் தேர்ந்தெடுக்க வேண்டும்.

**எப்படியிருக்கும் ஜய வருடம்?**

இப்படிப்பட்ட அமைப்புகளைப் பெற்ற உங்களுக்கு இந்தப் புத்தாண்டு வக்ர சனி, வக்ர செவ்வாயின் இயக்கத்தோடு பிறக்கிறது.

ஒன்பதில் சஞ்சரிக்கும் குருவின் பலமான பார்வை உங்கள் இராசியில் பதிகிறது. உங்கள் இராசிநாதனுக்கு குரு பகைவனாக இருந்தாலும் கூட அதன் பார்வை உங்கள் இராசிநாதன் மீதும் பதிகிறது. உங்கள் இராசியின் மீதும் பதிகிறது.

எனவே, யோசிக்காது செய்யும் காரியங்களில்கூட யோகங்கள் வந்து வெற்றியை வரவழைத்துக் கொடுக்கும். தேக நலனில் அக்கறை செலுத்துவீர்கள். வள்ளல்கள் உங்களைத்தேடி வந்து உதவி செய்வர். வாசமலராக வாழ்க்கை மலரும். வரவு- செலவுகள் திருப்திகரமாக இருக்கும். வருமானம் இருமடங்காக உயரும்.

அதே நேரத்தில் தனாதிபதி விரய ஸ்தானத்தில் வக்ரம் பெறுகிறார். அதோடு தொழில் ஸ்தானாதிபதி சந்திரனும் இணைந்து செயற்படுகிறார். எனவே, ஆண்டின் தொடக்கத்திலேயே தொழில் மாற்றச் சிந்தனைகள் மேலோங்கும்.

புதன் நீச்சம் பெறுவது ஒருவழிக்கு நன்மைதான். உத்தியோகத்தில் உள்ளவர்கள் விருப்ப ஓய்வு பெற்று, வேண்டியபடியே தொழில் தொடங்க முன்வருவர்.

ஜென்ம இராகுவின் ஆதிக்கம் இருக்கும் வரை ஏற்றமும், இறக்கமும் வந்து கொண்டே இருக்கும். கூட்டாளிகள் உங்களோடு வந்து இணைவர். பிறகு விலகுவர். ஒரு நிம்மதியற்ற தன்மையும் திருப்தியில்லாத மன நிலையும் உருவாகிக் கொண்டேயிருக்கும்.

தெய்வ வழிபாட்டில் கூட ஒரு சிலருக்கு ஆர்வம் குறையலாம். ஆனால், தன்னம்பிக்கையும், தைரியமும் மட்டும் குறையாமல் பார்த்துக் கொள்வது நல்லது. அரவுக் கிரகங்களின் பெயர்ச்சிக்குப் பின்னால் ஆனந்தம் உங்கள் இல்லத்தில் அடுத்தடுத்து அரங்கேறும்.


**நலம் தரும் ராகு- கேது பெயர்ச்சி!**

ஆனி மாதம் 7 ஆம் திகதி (21.06.2014) அன்று கன்னி இராசியில் ராகுவும், மீன இராசியில் கேதுவும் சஞ்சரிக்கின்றார்கள். வருடக் கடைசிவரை அங்கேயே இருக்கிறார்கள்.

ஜென்ம இராகு விலகுவது சிறப்புதான். பயணங்கள் அதிகரிக்கும். வாகன யோகத்தால் வளம் காண்பீர்கள். அந்நிய தேசத்திலிருந்து அழைப்புகள் வந்து சேரலாம்.

மாமன், மைத்துனர் வழியில் மங்கல நிகழ்ச்சிகள் நடைபெறுவதை முன்னின்று நடத்துவீர்கள். இடமாற்றம், ஊர் மாற்றம், இனிய மாற்றமாக வருவது போல் தோன்றும். தொழில் கூட்டாளிகளை மாற்றி புதிய கூட்டாளிகளை இணைத்துக் கொள்வீர்கள். பழைய தொழிலை வேறொருவரை பார்க்கச் சொல்லிவிட்டுப் புதிய தொழிலை ஏற்று நடத்துவீர்கள்.

ஆறாமிடத்து கேது அலைச்சலைக் கொடுத்தாலும் ஆதாயத்தைச் சேர்க்கும். அடிக்கடி



தலை தூக்கும். வியாதியை அகற்றப் புதிய மருத்துவர்களை நாடுவீர்கள். விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் கூடும். மாற்றுக் கருத்துடையோர் மனம் மாறுவர். பிள்ளைகள் வழியில் பெரும் செலவு உருவாகும். சர்ப்ப சாந்தியைச் செய்வதன் மூலம் சகல யோகங்களையும் வரவழைத்துக் கொள்ள இயலும்.

**குடும்ப ஸ்தானத்தில் சஞ்சரிக்கப் போகும் சனிபகவான்!**

ஜய வருடம் மார்கழி மாதம் தொடக்க நாளிலேயே சனி பகவான் உங்கள் இராசியிலிருந்து விலகி தன ஸ்தானம் எனப்படும் 2 ஆம் இடத்திற்குச் செல்கிறார். ஜென்மச் சனி விலகினால் தான் சிக்கல்களும் தீரும். சிரமங்களும் குறையும். தக்க விதத்தில் வாழ்க்கைத் தரம் உயரும் என்பது பொது விதி.

உங்கள் இராசிக்கு 4,5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் சனி பகவான். அவர் குடும்ப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் பொழுது மேலும் யோகத்தையே வாரி வழங்குவார்.

ஏழரைச்சனியில் பாதச் சனியின் ஆதிக்க காலம் மட்டும் உள்ளது. இதில் பாதியில் நின்ற பணிகள் மீதியும் தொடரும். கட்டடம் கட்டிக் குடியேற வேண்டும், கல்யாண வாய்ப்புகள் கைகூடி வரவேண்டும் என்று திட்டம் தீட்டியிருந்தவர்கள் மகிழ்ச்சியடையும் வண்ணம் சில காரியங்கள் துரிதமாக நடைபெறும். வருமானம் திருப்திகரமாக வந்து சேரும்.

சுகாதிபதியாக சனி விளங்குவதால் சுகங்களும் சந்தோஷங்களையும் வரவழைத்துக்கொள்ள அதிகம் செலவிடும் சூழ்நிலை உருவாகும். விலை உயர்ந்த மின்சாதனப் பொருட்களை வாங்குவதற்காக ஒரு பெரும் தொகையைச் செலவிடுவீர்கள். பூர்வீக சொத்துக்களில் ஏற்பட்ட பஞ்சாயத்துக்கள் நல்ல முடிவிற்கு வரும்.

மாசி 30 ஆம் திகதி முதல் வருடக் கடைசி வரை சனி வக்ர இயக்கத்திலேயே சஞ்சரிக்கின்றார். இக்காலத்தில் பயணங்கள் அதிகரிக்கும். தொழில்களில் சில குறுக்கீடுகள் ஏற்படலாம். ஏமாற்றங்களை சந்திக்காதிருக்க எதிலும் விழிப்புணர்ச்சி தேவை.

**வழிபாட்டின் மூலமே நன்மையை அடையவேண்டியகாலம்!**

14.07.2014 முதல் 31.08.2014 வரை துலாம் இராசியில் செவ்வாயும் சனியும் சேர்க்கை பெறுகிறார்கள். இக்காலத்தில் மிகமிக கவனம் தேவை. மற்ற இராசிக்காரர்களைக் காட்டிலும் துலாம் இராசிக்குத் தான் செவ்வாய், சனியின் ஆதிக்கம் கூடுதலாக இருக்கும். எனவே, வழிபாட்டின் மூலம் வளர்ச்சியைக் கூட்டிக் கொள்ளலாம். பெரும் விரயங்களிலிருந்து தப்பிக்கவும் கூடுதல் கவனத்தோடு கூட்டாளிகளுடன் பழகுவது நல்லது.

**குருப் பெயர்ச்சி பலன்கள்**

வைகாசி 30 ஆம் திகதி (13.06.2014) அன்று கடக இராசியில் குரு பெயர்ச்சியாகிறார். அது மட்டுமன்றி உச்சமும் பெறுகின்றார். அது உங்கள் இராசிக்கு பத்தாமிடமாக அமைகிறது. பத்தாமிடத்து குரு பதவி மாற்றம் தரும் என்பது பொதுநியதி.

முத்தான வாழ்க்கையில் முன்னேற்றங்களைக் கொடுப்பது குருவின் பார்வைதான்.

பத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 2,4,6 ஆகிய இடங்களில் பதிவாகிறது. எனவே, குடும்பத்தில் மகிழ்ச்சியும். கொள்கைப் பிடிப்போடு செயற்பட இயலும்.

**இரண்டினைக் குருதான் பார்த்தால்,**
**திரண்டதோர் செல்வம் சேரும்!**
**நான்கினைக் குருதான் பார்த்தால்,**
**நன்மைகள் யாவும் வாய்க்கும்!**
**ஆறினைக் குருதான் பார்த்தால்,**
**ஆதாயம் பிறரால் கிட்டும்!**

என்பது ஜோதிட நியதி.

எனவே, குருவின் பரிபூரண பார்வையால் இல்லத்தில் நீண்ட நாட்களாக நிறைவேறாத காரியங்களில் வெற்றி பெறும். நீடித்த நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள். சண்டை, சச்சரவுகள் அகலும். சங்கடங்கள் தீரும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு உன்னத உயர்வு கிட்டும். வாங்கிய கடனைக் கொடுக்க வழி பிறக்கும். குருவின் வக்ர காலத்தில் எதிர்பாராத மாற்றங்களைச் சந்திக்க நேரிடும். உடனிருப்பவர்களை அனுசரித்துச் செல்ல வேண்டிய நேரமாகும்.

**துலாம் இராசியில் பிறந்த பெண்களுக்கு!**

ஆரோக்கியத்தில் அதிக அக்கறை தேவை!

ஜய வருடத்தில் குருவின் பார்வை உங்கள் இராசியின் மீது பதிவாகிறது. எனவே, வருடத் தொடக்கத்தில் வளர்ச்சி கூடுதலாக இருக்கும். வருமானம் திருப்தி தரும். வாங்கல்- கொடுக்கல்களையெல்லாம் ஒழுங்கு செய்து கொள்வீர்கள். குடும்பத்தில் ஏற்பட்ட குழப்பங்கள் அகலும். கணவன்- மனைவிக்குள் ஏற்படும் காரசார விவாதங்களைத் தவிர்க்க விட்டுக் கொடுத்துச் செல்வது நல்லது.

குருப்பெயர்ச்சிக்குப் பின்னால் இடமாற்றம், ஊர் மாற்றங்கள் ஏற்படும். பொது நலத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு புதிய பொறுப்புகள் வந்து சேரும். சுக்ர பலத்தால் பிள்ளைகள் வழியில் நல்ல காரியங்கள் நடைபெறுவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன. ஆடை, ஆபரண சேர்க்கை அதிகரிக்கும்.

சனியின் ஆதிக்கம் முடியும் வரை அருகிலிருக்கும் உறவினர்களை யும் நண்பர்களையும் அனுசரித்துச் செல்வது நல்லது. சர்ப்ப சாந்தி செய்வதோடு துர்க்கை வழிபாட்டையும் தொடர்ந்து செய்தால் துயரங்களிலிருந்து விடுபட இயலும்.

**சிறப்பு வழிபாடுகள்!**

**பொதுவாக இராசிநாதன் சுக்ரன் என்பதால் பெண் தெய்வ வழிபாடு உங்களுக்கு பெருமை சேர்க்கும். பிரதோஷ வழிபாட்டிலும் கவனம் செலுத்துங்கள். யோகபலம் பெற்ற நாளில் கற்பக விநாயகரை வழிபட்டு கவலைகளைப் போக்கிக் கொள்ளுங்கள்.**

**நாளை விருச்சிகம்...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூப்பர் ஸ்டார் ரஜினியைச் சந்தித்த நரேந்திர மோடி



தமிழக முதல்வர் ஜெயலலிதா வசிக்கும் போயஸ் கார்டன் பகுதிக்குச் சென்ற பிரதமர் வேட்பாளர் நரேந்திரமோடி அதே பகுதியில் இருக்கும் சூப்பர் ஸ்டார் ரஜினி காந்தை அவரது இல்லத்தில் சந்தித்துவிட்டுத் திரும்பியிருக்கிறார். ரஜினி– மோடி சந்திப்பு தமிழக தேர்தல் பிரசாரத்தை களைகட்ட வைத்திருக்கிறது. ஆனால், இதில் மிகவும் வருத்தப்பட்டவர் பா.ஜ.க. தலைமையிலான தேசிய ஜன நாயகக் கூட்டணியில் தமிழகத்தில் இடம் பெற்றிருக்கும் இன்னொரு சினிமா பிரபலம் விஜயகாந்த்.

ரஜினி நடித்த பாபா படப் பிரச்சினை எழுந்த போது வட மாவட்டங்களில் டாக்டர் ராமதாஸ் சமாளிக்க முடியாமல் ரஜினி திணறிய போது, தைரியம் இருந்தால் பகலில் தியேட்டருக்குள் புகுந்து படப்பெட்டியைத் தூக்க வேண்டியதுதானே என்று குரல் எழுப்பியவர் விஜயகாந்த். அப்படி டாக்டர் ராமதாஸுக்கு எதிராக கருத்துச் சொல்லித்தான் அரசியல் களத்திற்கு வந்தார். அதன் பிறகு ரஜினிக்கும் விஜயகாந்திற்கும் திரையுலக நட்பு நீடிக்கலாம். ஆனால், அரசியல் ரீதியான நட்பு அறவே இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

இதுபோன்றதொரு சூழலில், தமிழகத்தில் தன்னைச் சந்திக்காமல், தனக்குப் போட்டியாக இருக்கும் சூப்பர் ஸ்டார் ரஜினி காந்தை சந்தித்தது விஜயகாந்திற்கு வெறுப்பாகவே இருக்கிறது. அதனால்தான் நரேந்திரமோடியை வரவேற்க தன் கட்சி தலைவர்கள் யாரையும் அனுப்பவில்லை விஜயகாந்த். அதுமட்டுமன்றி வைகோ, ராமதாஸ் போன்ற தலைவர்கள்கூட சென்னையில் நடைபெற்ற மோடியின் கூட்டத்திற்கு வரவில்லை. எப்படியிருந்தாலும், ரஜினியைச் சந்தித்த மோடிக்கு தமிழக அரசியலில் ஒரு இமேஜ் கிடைக்கும் என்பதுதான் பா.ஜ.கவின் கணக்கு. ஏனென்றால், ரஜினி ஒரு பொதுவான இமேஜுக்கு கை கொடுக்கும் பெயர். அந்தப் பெயரைச் சொன்னால் அவரது ரசிகர்கள் மோடியின் கட்சியுடன் கை கோர்ப்பார்கள் என்ற நினைப்பு பா.ஜ.க. தலைவர்களுக்கு ஏற்பட்டிருந்தால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

ஆனால், நிழல் வேறு. நிஜம் வேறு. ரஜினி அரசியல் ரீதியாகச் சொன்ன கருத்துக்கள் ஒரேயொரு தேர்தலில் மட்டுமே கை கொடுத்திருக்கிறது. அது 1996 சட்டமன்ற தேர்தல். ஆனால், அப்போது ஒட்டுமொத்த தமிழகமே ஆட்சி மாற்றத்தை விரும்பியிருந்த நேரம். அப்படி மக்களின் விருப்பத்துடன் ரஜினியின் கருத்தும் சேர்ந்த போது வெற்றி வாய்ப்பாக அமைந்தது. அது திராவிட முன்னேற்றக் கழகத்துடன் அணி சேர்ந்திருந்த மூப்பனாருக்கும், அணி அமைத்த தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கும் பலனளித்தது. முதலமைச்சரானார் கலைஞர் கருணாநிதி. போயஸ் கார்டனில் தனக்கு கொடுக்கப்படும் போக்குவரத்து பொலிஸாரின் நெருக்கடிகளில் புழுங்கிக் கொண்டிருந்த ரஜினி, பாட்ஷா பட விழாவில் கொந்தளித்தார். அதனால் ஏற்பட்ட மோதலை அப்போது ஆட்சி அமைக்க தயாராகிக் கொண்டிருந்த தி.மு.க. பயன்படுத்திக் கொண்டது. அப்போதுகூட முதலில் ரஜினியை தமிழக காங்கிரஸ் தலைவராகச் சொல்லித்தான் அப்போது பிரதமராக இருந்த நரசிம்மராவ் வற்புறுத்தினார். ஆனால், ரஜினி மறுக்கவே, வேறு வழியின்றி மூப்பனார், கலைஞர் கருணாநிதி ஆகியோருடன் இணைந்து வாய்ஸ் கொடுத்து தி.மு.க .அணிக்கு வெற்றி வாய்ப்பை தேடிக் கொடுத்தார் ரஜினி. அதுதான் ரஜினி கொடுத்த முதல் வாய்ஸ்.

அடுத்த வாய்ஸ் 1998 நாடாளுமன்றத் தேர்தலின் போது கொடுத்தார். கோவை குண்டு வெடிப்புக்குப் பிறகு அவர் கொடுத்த அந்த வாய்ஸ் எடுபடவில்லை. தி.மு.க. தலைமையிலான அணி அந்த தேர்தலில் தோல்வியைச் சந்தித்தது. ஒன்றரை வருடத்திற்குள்ளாகவே ரஜினி வாய்ஸ் எடுபடாது என்ற சூழல் தமிழக அரசியலில் எழுந்தது. இதன் பிறகுதான் 2004 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பாக ரஜினிக்கும் ராமதாஸுக்கும் 'லடாய் ஏற்பட்டது. அதன் விளைவாக நதிகள் இணைப்பு என்பதை முன் வைத்து, சென்னை விமான நிலையத்திற்குச் சென்று அப்போதைய பிரதமர் வாஜ்பாஜைச் சந்தித்து தேசிய ஜனநாயகக் கூட்டணிக்கு வாய்ஸ் கொடுத்தார். ஆனால், அந்த வாய்ஸ் எடுபடவில்லை. அந்த தேர்தலில் ரஜினி வாய்ஸ் கொடுத்த அணி நாற்பதுக்கு நாற்பது தொகுதிகளிலும் தோல்வியைச் சந்தித்தது.

ஆகவே, ரஜினி வாய்ஸ் என்பது தமிழகத்தில் எடுபட்டு 18 வருடங்களுக்கு மேலாகிவிட்டது. அப்படியொரு சூழ்நிலையில் நரேந்திர மோடி ஏன் ரஜினியைச் சந்தித்தார் என்ற கேள்வி எழும். மாநிலத்தில் பா.ஜ.க. தலைமையில் தேசிய ஜனநாயகக் கூட்டணி தேர்தலை சந்திக்கிறது. இக்கூட்டணி பற்றி அ.தி.மு.க. பொதுச் செயலாளர் ஜெயலலிதா விமர்சிக்கவில்லை என்ற குற்றச்சாட்டை தி.மு.க. முன்வைக்கிறது. இந்திய கம்யூனிஸ்ட் கட்சி முன்வைக்கிறது. மார்க்ஸிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சொல்கிறது. ஏன் பா.ஜ.க. கூட்டணியிலேயே இருக்கும் வைகோ கூட, எங்களை விமர்சிக்காமல் எங்கள் அறுவடையைத் திருடப் பார்க்கிறீர்களா என்றே அ.தி.மு.கவைப் பார்த்துக் கேட்டு விட்டார். இதற்கு தகுந்தாற்போல் துக்ளக் ஆசிரியர் சோ தன் பத்திரிகையில், பா.ஜ.க. போட்டியிடும் தொகுதிகளில் அக்கட்சிக்கும், அந்தக் கட்சி போட்டியிடாத மற்ற தொகுதிகளில் அ.தி.மு.கவுக்கும் வாக்களியுங்கள் என்று கூறிவிட்டார். அது மட்டுமன்றி பா.ஜ.க. கூட்டணியில் இருக்கும் தே.மு.தி.க., பா.ம.க., ம.தி.மு.க போன்ற கட்சிகளுக்கு வாக்களித்தால் அது ஓட்டுப் பிளவுக்கு மட்டுமே வித்திடும் என்றும் எச்சரிக்கை செய்துவிட்டார்.

இதை தமிழக பா.ஜ.க. தலைவர்கள் யாரும் மறுக்கவில்லை. அகில இந்திய பா.ஜ.க. தலைவர்களும் மறுக்கவில்லை. இதுபோன்ற சூழ்நிலையில்தான் நரேந்திரமோடி ரஜினியை சந்தித்தார். போயஸ் கார்டன் பகுதியில் ரஜினி வீட்டிற்கு திரும்பும் முன்பு இன்னும் இரண்டு வீடுகள் தாண்டினால் முதல்வரின் போயஸ் தோட்ட இல்லம். அங்கு போகாமல் ரஜினி வீட்டிற்குப் போய்விட்டு பொதுக்கூட்ட மேடைக்குப் போய்விட்டார் நரேந்திரமோடி. இது முழுக்க முழுக்க பா.ஜ.க. தொண்டர்களுக்கு, அல்லது பா.ஜ.கவிற்கு வாக்களிக்க விரும்பும் வாக்காளர்களுக்கு, எனக்கும், அ.தி.மு.கவுக்கும் எந்த உறவும் இல்லை என்பதை அறிவிக்கும் விதத்தில் அமைந்துவிட்டது. இதன் மூலம் பா.ஜ.க. வாக்காளர்கள் அ.தி.மு.கவுக்கு வாக்களிப்பார்கள் என்ற கருத்துக்கு முற்றுப் புள்ளி வைக்க முயன்றிருக்கிறார் நரேந்திர மோடி. அதுமட்டுமன்றி இந்த சந்திப்பின் மூலம், தன்னிடம் உள்ள தமிழக கூட்டணிக் கட்சிகளுக்கும் நம்பிக்கையூட்டும் விதத்தில் செயற்பட்டிருக்கிறார் மோடி. இப்படியொரு தோற்றத்தை உருவாக்கிவிட்டு நேராக சென்னை மீனம்பாக்கம் விமான நிலையம் அருகில் உள்ள ஜெயின் கல்லூரி மைதானத்திற்குச் சென்றார்.

அங்கு பிரசாரப் பொதுக்கூட்டம். நரேந்திர மோடி தன் உரையில் நிதியமைச்சர் சிதம்பரத்தின் வார்த்தைகளை கடன் வாங்கினார். அவர்தான் ஏற்கனவே, தி.மு.கவும், அ.தி.மு.கவும் சண்டைக்கோழிகள் என்றார். அதையே சற்று மாற்றி, தி.மு.கவும், அ.தி.மு.கவும் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொள்வதில்தான் காலத்தைத் தள்ளுகிறார்கள். மாநிலத்திற்கு எதுவும் செய்யவில்லை. நாங்கள் உருவாக்கியிருக்கும் அணி தமிழகத்தில் தி.மு.க வுக்கும், அ.தி.மு.கவுக்கும் மாற்று என்று டிக்ளேர் செய்தார். நரேந்திரமோடியின் தாக்குதல் மிகவும் ஷார்ப்பாக இல்லை என்றாலும் தி.மு.க.வையும் அ.தி.மு.கவையும் தன் கூட்டணிக் கட்சிகளுக்காக விமர்சிக்க வேண்டிய நிர்ப்பந்தத்தில்தான் சென்னை வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. இக்கூட்டத்தில் கூட்டணித் தலைவர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து மேடையில் காட்சியளிப்பார்கள் என்று எதிர்பார்க்கப் பட்டது. ஏனென்றால், கூட்டணி அமைந்த பிறகு மோடி அடிக்கும் முதல் விஸிட் இது. ஆனால், முக்கிய தலைவர்கள் யாரும் வரவில்லை. அந்த மேடை முழுக்க முழுக்க பா.ஜ.க மேடையாகவே அமைந்து விட்டது. வேட்பாளர் என்ற முறையில் அன்புமணி ராமதாஸ் மட்டுமே வந்திருந்தார்.

காரசாரமான தாக்குதல் ஏதுமின்றி மோடி திரும்பியிருப்பதற்கு வேறு காரணங்களும் உண்டு. தமிழகத்தில் பா.ஜ.க. அணி எத்தனை இடங்களில் ஜெயிக்கும் என்பது இன்னும் மர்மமாகத்தான் இருக்கிறது. அக்கட்சிக்கு மூன்று, நான்கு இடங்கள் கிடைத்தால் அதுவே பெரிய விடயம் என்ற நிலையில் தி.மு.க. அல்லது அ.தி.மு.கவின் தயவைத் தான் நாட வேண்டியிருக்கும். இந்த இரு கட்சிகளுமே 2016 சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு பா.ஜ.கவிற்கு மத்தியில் ஆதரவளிக்கும் என்று தோன்றவில்லை. அதுவும் பொது சிவில் சட்டம், ராமர் கோயில், காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து அளிக்கும் அரசியல் சட்டப்பிரிவு 370 ரத்து போன்ற வாக்குறுதிகளை முன் வைத்தும், தமிழகத்தில் தி.மு.கவின் கௌரவ திட்டமான சேது சமுத்திரத்திட்டம் பற்றி தெளிவான நிலைப்பாட்டை எடுக்காமலும் வெளியிட்டுள்ள பா.ஜ.கவின் தேர்தல் அறிக்கை இந்த இரு கட்சிகளுக்குமே சிக்கல். அதிலும் குறிப்பாக தி.மு.கவிற்கு சிக்கல்.

மத்திய அரசுடன் இணக்கமாக இருக்க வேண்டும் என்ற முடிவினை எடுத்தால், தமிழக முதல்வர் ஜெயலலிதா மோடி தலைமையில் அமையும் அரசுக்கு ஆதரவு அளிக்கக் கூடும். ஆனால், 2016 இல் மீண்டும் சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற வேண்டும் என்று அவர் முடிவு எடுத்து விட்டால், மோடிக்கு ஆதரவளிப்பதற்கு ஒரு முறைக்கு இருமுறை யோசிப்பார். இன்னும் சொல்லப்போனால் தன் வீடு இருக்கும் பகுதிக்கே வந்து தன்னைச் சந்திக்காமல் சென்றுள்ள மோடிக்கு ஆதரவு கொடுக்கும் முடிவை அ.தி.மு.க. அவ்வளவு எளிதில் எடுக்காது. இதையே காரணம் காட்டி, தேர்தலுக்கு பிறகு அ.தி.மு.கவிற்கு அதிக இடங்கள் கிடைத்தால், பிரதமர் பதவிக்கு தன்னையே முன்னிறுத்தும்படியும் பா.ஜ.கவினருக்கே ஜெயலலிதா கோரிக்கை வைத்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. ஆக மொத்தம் சென்னைக்கு வந்த மோடி ரஜினியைப் பார்த்ததில் தேர்தலுக்குப் பின் ஆதரவு வழங்கக் கூடிய ஒரு நட்புக் கட்சியை இழந்திருக்கிறார் என்பதை மட்டும் இப்போது புரிந்துகொள்ள முடிகிறது.

ஆனால், நரேந்திரமோடியைப் பொறுத்த மட்டில் தி.மு.க., அ.தி.மு.க. இரண்டுமே வழக்குகளில் சிக்கியிருக்கிறது. அதுவும் சி.பி.ஐ. வருமான வரித்துறை போட்ட வழக்குகளில் சிக்கியிருக்கிறது. அப்படி வழக்குகள் இருக்கும் அந்தக் கட்சிகள் பிரதமராக நாம் வரலாம் என்ற சூழல் உருவாகிவிட்டால் வேறு எங்கு போவார்கள் என்று நினைக்கக் கூடும். அப்படி நினைத்துத்தான் தி.மு.க. கூட்டணியை இந்த தேர்தலில் காங்கிரஸ் கட்சி கோட்டைவிட்டது. அதே மாதிரி தேர்தலுக்குப் பிறகு அ.தி.மு.கவையும் பா.ஜ.க. இதே பாணியில் கோட்டை விடுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஆனால், இப்போதைக்கு முதல்வர் ஜெயலலிதாவின் பேச்சைப் பார்த்தால், அவர் பா.ஜ.கவையும் விட்டுவைக்கவில்லை. ரஜினி– மோடி சந்திப்பு நடப்பதற்கு முன்பே காவேரி பிரச்சினையில் பா.ஜ.கவும் தமிழகத்திற்கு துரோகம் செய்துவிட்டது என்று குற்றம் சாட்டிவிட்டார். 2004 நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்பும் இப்படியொரு குற்றச்சாட்டை பா.ஜ.க.. மீது முன்வைத்தார் ஜெயலலிதா என்பது குறிப்பிடத்தக்கது. ஒரு நண்பரை சந்தித்து இன்னொரு நண்பரை இழந்திருக்கிறார் நரேந்திரமோடி என்பது மட்டுமே இப்போதைக்கு மோடி சென்னை விஜயத்தினால் கிடைத்த மைலேஜ்.

-எம்.காசிநாதன்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.நா.சபையின் இளையோர் ஆலோசனைக்குழு உருவாக்கம்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் சபையின் இளையோர் ஆலோசனைக் குழு கடந்த 7 ஆம் திகதியன்று கொழும்பில் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் சபையின் உறுப்பு நாடுகளின் இளையோர் மத்தியில் நேரடி தொடர்புகளை பேணும் வகையில் இந்த அமைப்பு உருவாக்கப்பட்டுள்ளது.

மூன்று நிகழ்ச்சித் திட்டத்தின் போட்டி அடிப்படையில் 15 பேர் இந்த குழுவுக்குள் உள்ளீர்க்கப்பட்டனர்.

ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் பான் கீ மூன் நியமித்த இளையோர் பிரதிநிதி 2013 ஆம் ஆண்டில் இலங்கைக்கு சென்று திரும்பிய பின்னர், இலங்கையின் இளையோர் குரல்களை ஐக்கிய நாடுகளுக்கு கொண்டு செல்ல வேண்டும் என்ற அடிப்படையில் இந்தக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

சுமார் 300 விண்ணப்பதாரிகளிடம் இருந்து இந்த 15 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இதில் வடக்கு மாகாணத்தில் இருந்து அங்கம் பெற்றுள்ள திவ்வியபாலன் சாந்திகுமார், ஐக்கிய நாடுகள் இளையோர் குழுவில் விளையாட்டு மற்றும் விநோத அம்சங்கள் தொடர்பான பிரதிநிதியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்தக் குழுவில் யாழ்ப்பாணம், அநுராதபுரம் ,பதுளை என்ற அடிப்படையில் அனைத்து மாவட்டங்களில் இருந்தும் இளையோர் அங்கம் பெற்றுள்ளனர். (2)

# கடற் பிரதேசங்களை பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும்

## அவுஸ்.புலனாய்வுப் பிரிவு எச்சரிக்கை

இலங்கை, மலேசியா போன்ற நாடுகள் தங்களின் கடற்பிரதேசங்களை பாதுகாப்பாக வைத்துக் கொள்ள வேண்டும் என்று அவுஸ்திரேலிய புலனாய்வு பிரிவு எச்சரித்துள்ளது.

இது குறித்து அவுஸ்திரேலிய புலனாய்வு துறையினர் அறிக்கை ஒன்றை வழங்கி இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி எதிர்வரும் மே மாதம் அளவில் இலங்கையில் இருந்து மீண்டும் அகதிப் படகுகள் அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்தை நோக்கி பயணிக்கவிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவற்றை தடுக்கும் நோக்கில் இலங்கை அரசாங்கமும், மலேசிய கடலோர படையினரும் தயாராக இருக்க வேண்டும் என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே இதற்கான வளங்களை அவுஸ்திரேலியா இரண்டு நாடுகளுக்கும் வழங்கி இருக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (2)



இலங்கை மரபுரிமை தொல்பொருள் சின்னமாக இன்று அல்வாய் வடக்கின் எச்சமாக திகழும் பழைய வேதக் கோவிலை மையமாக வைத்து எழுதப்பட்ட வரலாற்று நாவலான **பழைய வேதக்கோயில்** நாவலின் வெளியீட்டு விழா அண்மையில் அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலய மண்டபத்தில் மூத்த எழுத்தாளர் தெணியான் தலைமையில் இடம் பெற்றது. நூலின் முதற்பிரதியை ஓய்வு பெற்ற அதிபர் கி.கணேசன் பெற்றுக் கொள்வதைப் படத்தில் காணலாம். (படம்:-மானிப்பாய் செய்தியாளர்)

### புலம்பெயர் அமைப்புக்களின் தடைக்கு அவுஸ்.தமிழ் காங்கிரஸ் கண்டனம்

புலம்பெயர்ந்த அமைப்புக்களை இலங்கை அரசாங்கம் தடை செய்துள்ளமைக்கு அவுஸ்திரேலியாவில் இயங்கும் அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ் கண்டனம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்துக்கு எதிரான கருத்துக்களை வெளியிடுகின்றவர்களை தடுத்து நிறுத்தும் நோக்கில் அரசாங்கம் இந்த செயற்பாட்டில் ஈடுபட்டிருப்பதாக குறித்த அமைப்பின் பேச்சாளர் சாம்பாரி தெரிவித்துள்ளார்.

அவுஸ்திரேலிய தமிழ் காங்கிரஸ் அவுஸ்திரேலியாவில் இயங்கும் நேர்மையான சமூக சேவை வழங்கும் அமைப்பாகும்.

இதற்கு கொள்கைகள் வழங்கப்பட்டுள்ளன. இந்த அமைப்பின் செயற்பாடுகள் அனைத்தும் அவுஸ்திரேலிய அதிகாரிகளுக்கு தெரியும்.

இந் நிலையில் இதனையும் தடை செய்துள்ளமை இலங்கை அரசாங்கம் விடுதலைப் புலிகளை வைத்து இன்னும் அரசியல் நடத்துகிறது, என்பதை புலப்படுகிறது என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (2)

# வெலிக்கடை சிறைச்சாலை பொதி குறித்து விசாரணை

கொழும்பு வெலிக்கடை சிறை மகளிர் பிரிவிற்குள் வீசப்பட்டுக் கிடந்த பொதி குறித்து சிறைச்சாலை நிர்வாகம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளது.

சிறைச்சாலைக்கு வெளியில் இருந்து வீசப்பட்ட பொதி ஒன்றை சோதனை செய்த போதே அதில் இருந்து ஹெரோயின் மீட்கப்பட்டதாக சிறைச்சாலை திணைக்களம் தெரிவித்துள்ளது.

அப்பொதியினுள் சவர்க்கார கட்டிகளில் சூட்சுமமாக மறைத்து வைக்கப்பட்டிருந்த 8 ஹெரோயின் பைக்கற்றுக்கள், இரண்டு கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் 5 சிம் கார்ட்கள் என்பன மீட்கப்பட்டுளளன.

இதற்கு முன்னரும் இவ்வாறு சிறைக்குள் பொதிகள் வீசப்பட்டுள்ளதாக சிறைச்சாலைகள் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது. இது குறித்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (2)

# பாராளுமன்றில் பெண்களின் பிரதிநிதித்துவம் குறைவு ஆய்வில் தகவல்

(கொழும்பு)

இலங்கையில் பெண் அரசியல்வாதிகள் காத்திரமான முறையில் பங்களிப்பினை வழங்குவதில்லை என ஆய்வு ஒன்றில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தென் ஆசியாவில் இலங்கைப் பெண்கள் முக்கியமான பதவிகளை வகித்துள்ளனர்.

உலகின் முதல் பெண் பிரதமர், பெண் நிறைவேற்று அதிகார ஜனாதிபதி, பெண் சட்டமா அதிபர், பெண் பிரதம நீதியரசர் பதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

எனினும், பாராளுமன்றில் பெண்களின் பிரதிநிதித்துவமும் பங்களிப்பும் மிகவும் சொற்பளவில் காணப்படுகின்றது.

225 உறுப்பினர்களைக் கொண்ட இலங்கை பாராளுமன்றில் அதில், 13 பேரே பெண்கள் பாராளுமன்ற உறுப்பினர்களாகும் என குறிப்பிடப்பட்டுள்ளது. அதாவது 5.8 வீதமான பெண்களே பாராளுமன்றில் அங்கம் வகிக்கின்றனர்.

பாகிஸ்தான், இந்தியா, பூட்டான், பங்களாதேஷ் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளை விடவும் இலங்கையில் பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் விகிதாசாரம் குறைவானது என தெரிவிக்கப்பட்டுள்ளது,

பெண் பாராளுமன்ற உறுப்பினர்களின் காத்திரமான பங்களிப்பு கேள்விக்குரியாகவே தொடர்ந்தும் காணப்படுகின்றது என குறிப்பிடப்பட்டுள்ளது.

சில அமைச்சுப் பதவிகளை பெண்கள் வகித்த போதிலும், காத்திரமான முறையில் அவர்களது பங்களிப்பு கிடையாது என ஆய்வில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (2)

# இன்று ஒரு தகவல்

## சங்கீத சங்கடம்

எனக்கு மிகவும் வேண்டப்பட்ட ஒருவர் ஒருநாள் என்னைத் தேடி வந்தார். "நான் நாதஸ்வரம் வாசிக்க கற்றுக் கொள்ளப் போகிறேன்!" என்றார்.

நான் பயந்தே போய் விட்டேன். ஏனென்றால் அவரைப் பற்றி எனக்கு நன்றாகவே தெரியும். அதனால் "உங்களுக்கு ஏன் இந்த விபரீத ஆசை! சங்கீதம் என்பது ஒரு சுகமான அனுபவம்! நாமும் கஷ்டப்பட்டு அதையும் கஷ்டப்படுத்த வேண்டாமே! என்றேன்.

அவர் அதைக் காதில் வாங்கிக் கொள்வதாகவே இல்லை. மிகவும் உறுதியுடன் இருந்தார். சரி... வேறு வகையில் அவரின் எண்ணத்தை மாற்றலாம் என்று நினைத்து, ஒரு நேயர் எனக்குத் தெரிவித்திருந்த ஒரு கதையை அவரிடம் சொன்னேன்.

ஒரு ஊரில் ஒரு கோயில் இருந்தது. அந்தக் கோயிலில் உள்ள ஸ்தல விருட்சத்தில் (மரம்) ஒரு பிரம்ம ராட்சசன் இருந்தான். அவன் ஒரு காலத்தில் பல பாவங்கள் செய்து சாபத்தினால் பிரம்ம ராட்சசனாக மாறியவன்.

சாப விமோசனத்துக்காக அந்த மரத்தில் காத்துக் கொண்டிருந்தான். அவனுக்கு உருவம் கிடையாது. அதனால் கண்களால் அவனைக் காணவும் முடியாது.

அந்தக் கோயிலில் ஒருவர் தினமும் நாதஸ்வரம் வாசிப்பார். வாசிக்கிறார் என்றே சொல்ல முடியாது. ஊதுவார் அவ்வளவுதான்! முறையாக பயிற்சி இல்லாதவர்.

தினமும் காலையிலும் மாலையிலும் வாசிப்பார். பிரசாதம் கொடுப்பார்கள். அதை வாங்கிச் சாப்பிட்டுக் கொண்டு மறுபடியும் வாசிப்பார். இப்படியே அவரது காலமும் போய்க் கொண்டிருந்தது.

ஒருநாள் அவர் நீண்ட நேரம் வாசித்து விட்டு, இரவு வீட்டுக்குப் புறப்பட்டார். அப்பொழுது அந்த மரத்திலிருந்த பிரம்ம ராட்சசன் அவரிடம் போய் பரிதாபமாக பேசியது.

"இதோ பார்.... என்னை நீ கண்களால் பார்க்க முடியாது. இருந்தாலும் நீ வாசிப்பதை தினமும் நான் கேட்டுக் கொண்டுதான் இருக்கிறேன். எனக்கொரு உதவி செய்வாயா?" என்று கேட்டது.

"என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார் இவர். "இனிமேல் நீ வாசிப்பதை விட்டுவிட வேண்டும்!" என்றது. "ஏன் அப்படிச் சொல்கிறாய்?" என்று கேட்டார் இவர்.

"நான் ஏற்கனவே ஒரு பாவம் செய்து விட்டு சாப விமோசனத்துக்காக காத்துக் கொண்டிருந்தாலும் சங்கீத ஞானம் உள்ளவன்தான்.... நீ வாசிப்பது கொஞ்சம் கூட நன்றாக இல்லை. அபஸ்வரமாக இருக்கிறது!

என்னால் சகித்துக் கொள்ள முடியவில்லை! இதேமாதிரி நீ தினமும் வாசித்தால் சாப விமோசனம் கிடைக்க முன்பே நான் செத்துப் போனாலும் போய்விடுவேன்.

இப்பொழுது உன் வாசிப்பைக் கேட்டு துரும்பாக இளைத்து விட்டேன்! என்றது. நீ சொல்வது சரிதான், நான் வாசிப்பதை என்னாலேயே சகிக்க முடியவில்லை! இருந்தாலும் இதை விட்டால் எனக்கு வேறு வழியில்லை!

சாப்பாட்டுக்கே நான் இதைத்தான் நம்பியிருக்கிறேன். இதை விட்டு விட்டு என்ன செய்வது? என்றார் அவர்.

உனக்கு சாப்பாட்டுக்கு ஏதாவது வழி செய்தால் இந்த வாசிப்பை விட்டு விடுவாயா? என்று கேட்டது அது.

விட்டு விடுவேன்! என்றார் இவர்.

அப்படியானால் நான் சொல்வதைக்கேள்! இந்த ஊர் ராஜாவின் மகளைப் போய் நான் பிடித்துக் கொள்கிறேன். தன் மகளுக்குப் பேய் பிடித்து விட்டது என்று தெரிந்தவுடன் அந்த ராஜா ஊரிலுள்ள மந்திரவாதிகளையெல்லாம் கூப்பிட்டுப் பேய் ஓட்டுவார்! நான் யாருக்கும் அசைந்து கொடுக்காமல் இருந்து விடுகிறேன்.

கொஞ்ச நாள் கழித்து நீ அந்த அரண்மனைக்கு வா. "நான் அரச குமாரிக்கு பிடித்திருக்கும் பைத்தியத்தை சரி செய்கிறேன்" என்று சவால் விடு. அதன் பின்னர் நாதஸ்வரத்தை வாசி. நான் அந்தப் பெண்ணை விட்டு ஓடி விடுகிறேன்.

உடனே ராஜா உனது திறமையைப் பாராட்டி பொன்னும் பொருளும் நிறைய கொடுப்பார். அதை வைத்துக் கொண்டு நீயும் உன் பரம்பரையும் சுகமாகக் காலம் தள்ளலாம்! என்று யோசனை சொன்னார்.

இவரும் யோசித்துப் பார்த்து விட்டு சரியென்று ஒத்துக் கொண்டார்.

இந்தத் திட்டத்தின் படியே எல்லாம் நடந்தது. ராஜா நிறைய பரிசு கொடுத்தார். இவரும் நாதஸ்வரம் வாசிப்பதை விட்டுவிட்டார்.

இந்தக் கதையை எதிரில் உட்கார்ந்திருக்கும் நண்பரிடம் சொன்னேன். அப்படியும் அவர் நாதஸ்வரம் கற்க வேண்டும் என்ற ஆசையை கைவிட்டதாகத் தெரியவில்லை.

சரி.... இவரை எப்படி வழிக்குக் கொண்டு வரலாம் என்று யோசித்துப் பார்த்தேன். கடைசியாக ஒரு விடயத்தைச் சொன்னேன். அதைக் கேட்டபின்னர்தான் நான் நாதஸ்வரம் கற்கும் யோசனையை கை விடுகிறேன்! என்று ஒத்துக் கொண்டார்.

நான் என்ன சொன்னேன் தெரியுமா? நீங்க நாதஸ்வரம் வாசிக்க கற்றுக் கொள்ள வேண்டுமென்று முடிவு செய்தால் நான் உங்களுக்கு உதவியாக தவில் வாசிக்கக் கற்றுக் கொள்ளலாம் என்று நினைக்கிறேன்! என்றேன். அவ்வளவு தான்! ஆள் அம்பேல்!

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டாவளை பி.செயலகத்தின் கிளை மாற்றப்பட்டதை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

(கண்டாவளை)

கண்டாவளை பிரதேச செயலகத்திலுள்ள கிளையொன்றினை புளியம்பொக்கணை கிராமத்திற்கு இடமாற்றும் செயற்பாட்டை எதிர்த்து கண்டாவளை கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இவ் ஆர்ப்பாட்டம் கண்டாவளை பிரதேச செயலகத்திற்கு முன்பாக காலை 8.30 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை இடம்பெற்றது.

இவ் ஆர்ப்பாட்டத்தில் கண்டாவளை கிராம அலுவலர் பிரிவைச் சேர்ந்த 50 இற்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்துகொண்டு எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

30 வருடமாக கண்டாவளை பிரதேச செயலகம் கண்டாவளை கிராமத்திலேயே இயங்கி வந்தது. இந்நிலையில் இங்குள்ள திட்டமிடல் பிரிவினை புளியம்பொக்கணையிலுள்ள தொழிற் பயிற்சி நிலையக் கட்டடத்திற்கு நேற்றைய தினம் மாற்றுவதற்கு பிரதேச செயலகம் தீர்மானித்திருந்தது.

இதனையடுத்து கண்டாவளை பிரதேச செயலகம் இக்கிராமத்திலேயே இருக்க வேண்டுமெனவும் தற்போது ஒரு கிளையை மாற்றிவிட்டு பின்னர் பிரதேச செயலகம் முழுமையாகவே புளியம்பொக்கணைக்கு மாற்றப்பட்டுவிடும். எனவே, இதனை தாம் கண்டிப்பதாகத் தெரிவித்தே கண்டாவளை கிராம சேவையாளர் பிரிவைச் சேர்ந்த மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் கண்டாவளை பிரதேச செயலர் முகுந்தனிடம் கேட்டபோது கண்டாவளை பிரதேச செயலகத்திற்கென நிரந்தர கட்டடம் அமைக்கப்படவில்லை. தற்போது 160 உத்தியோகத்தர்கள் கடமையாற்றி வருகின்றனர்.

இதனால் இடப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. இதனடிப்படையிலே புளியம்பொக்கணையிலுள்ள தொழிற்பயிற்சி நிலையத்திற்கு பிரதேச செயலகத்திலுள்ள திட்டமிடல் பிரிவை மாற்றுவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளோம்.

எமது பிரதேச செயலர் பிரிவின் கீழ் 16 கிராம சேவையாளர் பிரிவுகள் உள்ளன. எனினும் கண்டாவளைப் பிரதேச மக்களே இதனை எதிர்த்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

கண்டாவளை கிராமத்திலேயே பிரதேச செயலகம் இருக்க வேண்டுமென இக்கிராம மக்கள் நினைக்கின்றனர்.நாங்கள் முழுமையாக பிரதேச செயலகத்தினை புளியம்பொக்கணைக்கு மாற்றவில்லை.

ஒரு கிளையை மாத்திரமே மாற்றியுள்ளோம் என்றார்.மக்களின் எதிர்ப்பின் மத்தியிலும் தீர்மானப்படி கண்டாவளை பிரதேச செயலகத்தின் திட்டமிடல் பிரிவு புளியம்பொக்கணைக்கு மாற்றப்பட்டுள்ளது. (9-263)

# சாதாரண தர பெறுபேறுகள்

(பூநகரி)

பூநகரி கோட்டத்தில் க.பொ.த சாதாரண தரத்தில் சித்தியடைந்த மாணவர்களின் விபரங்கள் வருமாறு,

**கிளி/ பூநகரி மத்திய கல்லூரி**

உ.நிதர்சன்-4ஏ2பி2சிஎஸ், க.சிந்துஜா-3ஏ3பிசிஎஸ், க.துவாரகா-3ஏபி3சி

**கிளி/பூநகரி நல்லூர் மகா வித்தியாலயம்**

க.தனுசியா-4ஏ2பி2சி, ப.கபிலன்-3ஏபி2சி2எஸ், ப.ஜீவநேசன்-2ஏபி2சி3 எஸ், வி.செந்தூரன்-2ஏ2சி5எஸ், ர.மதியினி-2ஏபி3சி2எஸ் (9-84)

# க.பொ.த.சாதாரண தரத்தில் வவு.தெற்கு வலயம் முதலிடம்

(பூந்தோட்டம்)

அண்மையில் வெளியான க. பொ.த சாதாரண தரப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கான பகுப்பாய்வின் அடிப்படையில் வவுனியா தெற்கு கல்வி வலயம் வடமாகாணத்தில் முதலிடத்தையும் தேசிய ரீதியில் 12ஆம் இடத்தையும் பெற்றுள்ளது.

வடமாகாணத்தின் 12 கல்வி வலயங்களினுள் முதலிடத்தையும் தேசிய ரீதியாகவுள்ள 96 கல்வி வலயங்களினுள்12ஆம்இடத்தையும் வவுனியா தெற்கு கல்வி வலயம் பெற்றுள்ளது.

அத்தோடு வடமாகாணத்திலுள்ள ஏனைய கல்வி வலயங்களின் பெறுபேற்று நிலைகளின் அடிப்படையில் மன்னார் கல்வி வலயம் மாகாண ரீதியாக 2ஆம் இடத்தினையும் தேசிய ரீதியாக 14ஆம் இடத்தினையும் பெற்றுள்ளது.

யாழ்ப்பாண கல்வி வலயம் மாகாண ரீதியில் 3ஆம் இடத்தையும் தேசிய ரீதியில் 16 ஆவது இடத்தையும் வடமராட்சி கல்வி வலயம் மாகாண ரீதியாக 4 ஆம் இடத்தையும் தேசிய ரீதியாக 28 ஆவது இடத்தையும் பெற்றுள்ளது.

அத்தோடு தென்மராட்சி கல்வி வலயம் மாகாண ரீதியில் 5 ஆம் இடத்தையும் தேசிய ரீதியில் 45 ஆம் இடத்தையும் வலிகாமம் கல்வி வலயம் மாகாண ரீதியில் 6 ஆம் இடத் தையும் தேசிய ரீதியில் 54 ஆம் இடத்தையும் வவுனியா வடக்கு கல்வி வலயம் மாகாண ரீதியில் 7 ஆம் இடத்தையும் தேசிய ரீதியில் 57 ஆம் இடத்தையும் பெற்றுள்ளது.

மடு கல்வி வலயம் மாகாண ரீதியில் 8 ஆம் இடத்தையும் தேசிய ரீதியில் 69 ஆவது இடத்தையும் முல்லைத்தீவு கல்வி வலயம் மாகாண ரீதியில் 9 ஆம் இடத்தையும் தேசிய ரீதியில் 76 ஆம் இடத்தையும் பெற்றுள்ளது.

கிளிநொச்சி கல்வி வலயம் மாகாண ரீதியில் 10ஆம் இடத்திலும் தேசிய ரீதியில் 91 ஆம் இடத்திலும் துணுக்காய் கல்விவலயம் மாகாண ரீதியில் 11 ஆம் இடத்திலும் தேசிய ரீதியில் 94 ஆம் இடத்திலும் தீவக வலயம் மாகாண ரீதியில் 12 ஆம் இடத்திலும் தேசிய ரீதியில் 96 ஆவது இடத்திலும் உள்ளது.

இந்நிலையில் 9 மாகாணங்களில் வடமாகாணம் 2013ஆம் ஆண்டு வெளியான க.பொ.த சாதாரண பரீட்சையில் 6 ஆவது இடத்தைப் பெற்றுள்ளதுடன் 65.33 வீதமானோர் க.பொ.த உயர்தரம் கற்க தகுதிபெற்றுள்ளனர். இதனடிப்படையில் கடந்த இரண்டாண்டுகளோடு ஒப்பிடுகையில் உயர்வடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (9-266)







பாரம்பரிய கலைகளையும் கலைஞர்களையும் ஊக்குவிக்கும் நோக்கோடு வட மாகாண ஆளுநர் செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பாரம்பரிய கலைகள் தொடர்பான மாவட்ட போட்டிகள் கிளிநொச்சி மத்திய கல்லூரியில் நடைபெற்றது. இந் நிகழ்வில் வடமாகாண ஆளுநரின் செயலாளர் இளங்கோவன் மங்கல விளக்கேற்றுவதையும் கலை நிகழ்வையும் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்:-என்.குமார்)

# ஒட்டுசுட்டான்-புதுக்குடியிருப்பு இணைப்பு பாலம் சீரில்லை

## கிராம மக்கள் சுட்டிக்காட்டு

(முல்லைத்தீவு)

ஒட்டுசுட்டான் புதுக்குடியிருப்பு பிரதேசங்களை இணைக்கும் பாலம் சீர்செய்யப்படாமல் இருப்பதால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக மக்கள் தெரிவித்துள்ளனர்.


கடந்த வாரம் வடமாகாண சபை உறுப்பினர் ரவிகரனால் ஒட்டுசுட்டான் பிரதேச மக்களுடனான சந்திப்பு ஒன்று நடைபெற்றபோதே மக்களால் மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

ஒட்டுசுட்டான் பிரதேச செயலர் பிரிவில் கூழாமுறிப்பு கிராம அலுவலர் பிரிவையும் புதுக்குடியிருப்பு பிரதேச செயலர் பிரிவில் மண்ணாகண்டல் கிராம அலுவலர் பிரிவையும் இணைக்கும் பாலம் சீர் செய்யப்படாமையால் மக்கள் போக்குவரத்தில் பல்வேறு இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருகினறனர்.

நாளாந்தம் 500 இற்கு மேற்பட்ட மக்கள் இப்பாலத்தினால் பயணம் செய்கின்றனர். இதில் இரண்டு பிரிவையும் இணைக்கும் பாலத்தை அமைக்காமையால் நாளாந்தம் பிரயாணம் செய்யும் மக்கள் எதிர் நோக்கும் இடர்பாடுகளை உறுப்பினர் நேரில் சென்று பார்வையிட்டார்.

புதுக்குடியிருப்பு செயலர் பிரிவில் உள்ள வசந்தபுரம் கெருடமடு கிராமமக்கள் மாரி காலங்களில் வைத்தியசாலைக்கு மட்டுமல்லாமல் அத்தியாவசிய தேவைகளின் பொருட்டும் மேற்படி பாலத்தை பயன்படுத்த இயலாமல் தாம் அவதிப்படுவதையும் சுட்டிக்காட்டினார்.

அத்தோடு மழைகாலத்தில் பயன்படுத்திய தடிகளால் அமைக்கப்பட்ட தற்காலிக பாலத்தையும் மக்கள் காண்பித்ததோடு இரண்டு கிராம மக்களும் தங்களின் அத்தியாவசிய தேவையாக மேற்படி பாதை சீரமைப்பு தான் காணப்படுகிறது என்று தெரிவித்தனர்.



இந்நிலையில் மக்களின் நாளாந்த நடவடிக்கைகளுக்கு பயன்படுத்த வேண்டிய இப்பாதையை சீர்செய்து கொடுப்பது அவசியமென்பதை ஆதாரங்களுடன்உரியவர்களுக்கு தெரிவிப்பேன் என வடமாகாண சபை உறுப்பினர் உறுதியளித்துள்ளார். (9-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவின் நிதியுதவி நிறுத்தம்; கவலையில் கமலேஷ் சர்மா

இலங்கையின் மனிதவுரிமைகள் நிலையைக் காரணம் காட்டி பொதுநலவாய அமைப்புக்கான நிதியுதவியை கனடா நிறுத்தியமை குறித்து அவ்வமைப்பின் செயலாளர் கமலேஷ் சர்மா ஏமாற்றத்தை வெளியிட்டுள்ளார்.

பொதுநலவாய அமைப்புக்கு இலங்கை தலைமை தாங்கும் அடுத்த இரண்டு ஆண்டு காலப் பகுதியில், தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான பொதுநலவாய நிதியத்துக்கு வழங்கப்படும் நிதியை நிறுத்துவதாக கனடா அரசாங்கம் முடிவெடுத்துள்ளது.

இந்த பரஸ்பர மற்றும் தன்னார்வ நிதியம் பொதுநலவாய நாடுகளுக்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்கும் நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டது.

தொழில்நுட்ப ஒத்துழைப்புக்கான பொதுநலவாய நிதியத்துக்கு கனடா நீண்டகாலமாக பெறுமதிமிக்க உதவிகளை அளித்து வந்துள்ளது என்பதையும் கமலேஷ் சர்மா நினைவுபடுத்தியுள்ளார். (2)

# பா.ஜ.கவின் தேர்தல் அறிக்கையில் ஈழத்தமிழர் பிரச்சினை குறிப்பிடப்படவில்லை

## உலகத் தமிழர் பேரியக்கத் தலைவர் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஈழத் தமிழர் பிரச்சினை குறித்து பா.ஜ.க. பிரதமர் பதவி வேட்பாளர் மோடி எதுவும் கூறாதது ஏமாற்றமளிக்கிறது என்று உலகத் தமிழர் பேரியக்கத் தலைவர் பழ.நெடுமாறன் கூறினார்.

திருநெல்வேலி மாவட்டம், பாபநாசத்தில் தினமணி செய்தியாளரிடம் நேற்று முன்தினம் அவர் கூறியதாவது,

பா.ஜ.க. தனது தேர்தல் அறிக்கையில் ஈழத்தமிழர் பிரச்சினை குறித்தோ, ராஜபக்ஷ மீது சர்வதேச நீதி விசாரணை வேண்டும் என்பதையோ, மீனவர்கள் சுட்டுக் கொல்லப்படுவது குறித்தோ எதுவும் குறிப்பிடவில்லை.

இப்பிரச்சினைகளை பா.ஜ.க. தலைமை அடியோடு புறக்கணித்து விட்டது.

தமிழ்நாட்டுக்குப் பிரசாரம் செய்ய வந்த மோடியும் இந்த பிரச்சினை குறித்து எதுவும் நேரடியாகப் பேசவில்லை.

இது உலகத் தமிழர்கள் அனைவருக்கும் ஏமாற்றத்தை அளித்திருககிறது என்றார் பழ.நெடுமாறன்.(2)

# நிதியுதவியை கனடா அரசியல் கருவியாக பயன்படுத்துகிறது

## வெளிவிவகார அமைச்சு தகவல்

நிதி உதவிகளை கனேடிய அரசாங்கம் அரசியல் கருவியாக பயன்படுத்தி வருவதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

பொதுநலவாய நாடுகள் அமைப்பிற்கான நிதி உதவிகளை கனடா ஓர் அரசியல் கருவியாக பயன்படுத்துகின்றமை ஏற்றுக்கொள்ளக் கூடியதல்ல என வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொதுநலவாய நாடுகள் அமைப்பிற்கு தன்னார்வ அடிப்படையில் வழங்கும் நிதி உதவிகளை இரத்து செய்வதாக கனடா அறிவித்துள்ளது.

இலங்கை மனிதவுரிமை நிலைமைகளில் முன்னேற்றம் ஏற்படாமையே இவ்வாறு நிதி உதவிகள் ஒதுக்கப்படுவதற்கான காரணம் என கனடா குறிப்பிட்டுள்ளது.

இந்நிலையில், கனடாவின் இவ்வாறான நடவடிக்கைகள் நாட்டின் நல்லிணக்க முனைப்புக்களையே பாதிக்கும் என இலங்கை வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

அரசியல் பிரச்சினைக்கு உள்நாட்டு ரீதியான தீர்வுத் திட்டமொன்றின் மூலமே சுமுகமான தீர்வு காணப்பட முடியும் என இலங்கை சுட்டிக்காட்டியுள்ளது.

பண பலத்தைப் பயன்படுத்தி நிறுவனமொன்றின் அல்லது அமைப்பு ஒன்றின் மீது ஆதிக்கம் செலுத்தும் முனைப்புக்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல எனவும், அனைத்து உறுப்பு நாடுகளுக்கும் சமவுரிமை வழங்கப்பட வேண்டுமெனவும் இலங்கை வெளிவிவகார அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

கனடாவின் தீர்மானம் அதிர்ச்சியளிக்கவில்லை எனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (2)

# குடும்பத் தொழிலாக அரசியல் செய்கிறது அரசு

## மங்கள எம்.பி.தெரிவிப்பு

அரசாங்கம் அரசியலை குடும்பத் தொழிலாக மேற்கொள்ள தயாராகி வருவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மங்கள சமரவீர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அரசாங்கத்தின் அமைச்சர்கள் தமது பிள்ளைகள், மனைவிகள் உட்பட முழு குடும்பத்தையும் அரசியலுககு கொண்டுவர முயற்சித்து வருகின்றனர்.

எனது தந்தை ஒரு அரசியல்வாதியாக இருந்தாலும் அவர் காலமாகி 30 வருடங்களுக்கு பின்னரே நான் அரசியலுக்கு வந்தேன்.

ஆனால் ராஜபக்ஷ அரசாங்கம், பெரியவர்கள் உயிருடன் இருக்கும் போதே சிறியவர்களை அரசியலுக்கு அழைத்து வருகின்றனர்.

அரசாங்கத்தின் அரசியல்வாதிகள் அரசியலை குடும்பத் தொழிலாக செய்ய முயற்சித்து வருகின்றனர் என்றார். (2)

# பிரிவுத்துயர் பகிர்வு



### இராஜேந்திரா சொரூபகாந்தன்

பெருமாள் கோயிலடியை பிறப்பிடமாகவும் வீரமாகாளியம்மன் கோயிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட இராஜேந்திரா சொரூபகாந்தன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### சோமசுந்தரம் கைலாசநாதன்

மண்டைதீவு 8 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் கைலாசநாதன் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மண்டைதீவு இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### கார்த்திகேசு கிருபானந்தன்

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு கிருபானந்தன் கடந்த 9 ஆம் திகதி புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 9.30 மணிக்கு 2,Palce Mazas, 75012, Paris, Metro : Quai de la Rapee (N5) என்னும் முகவரியில் நடைபெறும்.



### திருமதி நவரத்தினம் பூமலர்

நீர்வேலி வடக்கைப் பிறப்பிடமாகவும்வசிப்பிடமாகவும்கொண்ட நவரத்தினம் பூமலர் கடந்த 14 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று அவரது இல்லத்தில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.



### முருகேசு நாகராஜா

புங்குடுதீவு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல. 218, சில்வா வீதி, வட்டக்கச்சியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு நாகராஜா கடந்த 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 10 மணிக்கு இல.06, கரடிப்போக்கு, கிளிநொச்சி என்னும் முகவரியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருநகர் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி தெய்வேந்திரராசா லலிதாதேவி

பருத்தித்துறை இன்பர்சிட்டியைப் பிறப்பிடமாகவும் இந்தியா திருச்சி கே.கே. நகரை வசிப்பிடமாகவும் கொண்ட தெய்வேந்திரராசா லலிதாதேவி கடந்த 12 ஆம் திகதி சனிக்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் பூதவுடல் இன்று முற்பகல் 10 மணிக்கு திருச்சி கருமண்டபம் மின் மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி சோமசுந்தரம் பத்தினி

கரவெட்டி யார்க்கருவைப் பிறப்பிடமாகவும் வவுனியா உக்குளாங்குளத்தை வசிப்பிடமாக வும் கொண்ட சோமசுந்தரம் பத்தினி கடந்த 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று நடைபெற்று பூதவுடல் தச்சனாம்குளம் இந்து மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.



### சின்னப்பு தாமோதரம்பிள்ளை

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரியை பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கை தற்போதைய வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பு தாமோதரம்பிள்ளை (ஓய்வுபெற்ற ஆசிரியர்) கடந்த 14 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 11 மணிக்கு உரும்பிராய் வடக்கிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் எருளன் மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### மயில்வாகனம் நடராசா

தொல்புரத்தைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட மயில்வாகனம் நடராசா கடந்த 14 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### திருமதி நடராசா இராசமணி

கோண்டாவிலைப் பிறப்பிடமாகவும் சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா இராசமணி கடந்த 14 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று முற்பகல் 11 மணிக்கு சுழிபுரம் பிரதான வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### சாமி கந்தையா சோமசுந்தரம்

காரைநகர் வாரிவளவைப் பிறப்பிடமாகவும் 116A அரசடி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சாமி கந்தையா சோமசுந்தரம் கடந்த 14 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று காலை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன்மணல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.



### சின்னத்தம்பி பரமலிங்கம்

அனலைதீவைப் பிறப்பிடமாகவும் பிரான்சை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி பரமலிங்கம் கடந்த 14 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும்19 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8 மணிக்கு Tetard Claude,22 Rue des Petits Fosses, 61200 Argentan, France என்னும் முகவரியில் நடைபெற்று பின்னர் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலி. வலய பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

## இளவாலை ஹென்றியரசர் கல்லூரி சம்பியன்





வலிகாம வலய பாடசாலைகளுக்கிடையிலான 17 வயது உதைபந்தாட்டப் போட்டியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி சம்பியனாகியது.

வலிகாம வலய பாடசாலைகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டிகள் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இடம்பெற்றது.

முன்னதாக இடம்பெற்ற போட்டிகளின் அடிப்படையில் முதலாவது அரையிறுதி போட்டியில் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாசாலையுடன் மோதியது.

விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் இரு அணிகளும் எதிரணிகளின் கோல் பரப்பை ஆக்கிரமித்தபோதும் கோல்கள் எதனையும் பெற முடியவில்லை.

இதனால் போட்டியின் முதல் பாதி 0:0 என்னும் கோல் அடிப்படையில் நிறைவுற்றது. எனினும் 2 ஆவது பாதியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி அடுத்தடுத்து 2 கோல்களைப்போட்டு 2:0 என்ற கோல்கள் வென்று முதலாவது அணியாக இறுதிப் போட்டிக்கு தகுதி பெற்றது.

இடம்பெற்ற இரண்டாவது அரையிறுதியில் அருணோதயக் கல்லூரியும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் மோதியது.

இப்போட்டியில் ஆரம்பத்திலேயே ஆதிக்கம் செலுத்திய அருணோதயக் கல்லூரி கோலொன்றினைப் பெற்றது.

தொடர்ந்து இரு அணிகளும் கோல் பெற கடுமையாக முயற்சித்த போதும் அது பலனளிக்கவில்லை.

இதனால் போட்டியை 1:0 என்னும் அடிப்படையில் அருணோதயக் கல்லூரி அணி வென்று இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றது.

இறுதிப்போட்டிக்கு முன்னதாக இடம்பெற்ற 3 ஆம் இடத்திற்கான போட்டியில் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாசாலையும் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் மோதியது.

இப்போட்டியில் 3:0 என்னும் கோல் கணக்கில் ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாசாலை வெற்றிபெற்று 3ஆவது இடத்தைக் கைப்பற்றியது. இடம்பெற்ற இறுதிப்போட்டியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரியும் அருணோதயக் கல்லூரி அணியும் மோதியது.

ஆரம்பம் முதலே இரு அணிகளும் எதிரணிகளின் கோல் பரப்பை ஆக்கிரமித்த போதும் கோல்களைப் பெறமுடியவில்லை. இதனால் முதற்பாதியாட்டம் எந்தவித கோல்களும் பெறாத நிலையில் நிறைவுற்றது.

இரண்டாவது பாதியாட்டம் ஆரம்பம[...] சில நிமிடங்களில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி வீரன் கிடைத்த சந்தர்ப்பத்தை கோலாக்கினார். பதிலுக்கு ஏழாலை ஸ்ரீமுருகன் வித்தியாசாலை அணி கோல்களைப் பெற முயற்சித்த போதும் அது பலனளிக்கவில்லை.

தொடர்ந்து அடுத்தடுத்து 2 கோல்களை இளவாலை ஹென்றியரசர் கல்லூரி பெற்றது. இதனால் இப்போட்டியில் 3:0 என்னும் கோல் கணக்கில் வென்று வலிகாம வலய பாடசாலைகளுக்கிடையிலான 17 வயது உதைபந்தாட்டப் போட்டியில் இளவாலை ஹென்றியரசர் கல்லூரி சம்பியனாகியது. (கு-23)

வலம்புரி SPORTS
விளையாட்டுச் செய்திகள்

# குருநகர் கார்மேல் போய்ஸ் சம்பியன்

வடமாகாண ரீதியான 7 பேர் 6 பந்துப் பரிமாற்றத்தினைக் கொண்ட மாபெரும் மென்பந்தாட்ட போட்டியின் இறுதியாட்டத்தில் வண்ணார்பண்ணை ஸ்ரீகாமாட்சி விளையாட்டு கழகத்தை வீழ்த்தி குருநகர் கார்மேல் போய்ஸ் விளையாட்டுக் கழகம் சம்பியனாகியது.

இறுதியாட்டத்தில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற குருநகர் கார்மேல் போய்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தது. 6 பந்து பரிமாற்றத்தின் முடிவில் 54 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் அதிக ஓட்டங்களாக றிக்கி இரண்டு 6 ஓட்டங்கள் அடங்கலாக ஒரு 4 ஓட்டங்கள் அடங்கலாக 16 ஓட்டங்களையும் தேசிகன் ஒரு 6 ஓட்டங்கள் அடங்கலாக 15 ஓட்டங்களையும் அஜன் ஒரு 6 ஒரு 4 ஓட்டங்கள் அடங்கலாக 13 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். பந்துவீச்சில் சுஜன் 2 பந்துப்பரிமாற்றங்கள் வீசி 9 ஓட்டங்களை கொடுத்து 2 இலக்குகளையும் நிஷா ஒரு பந்துப்பரிமாற்றத்தினை வீசி 9 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் சாய்த்தனர்.

55 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய கொக்குவில் ஸ்ரீகாமாட்சி அணி 35 ஓட்டங்களை மட்டுமே பெற்று சகல இலக்குகளையும் இழந்தனர். இதில் அதிக ஓட்டங்களாக கஜி இரண்டு 6 அடங்கலாக 16 ஓட்டங்களையும் சிந்து 7 ஓட்டங்களையும் ஜெயரூபன் ஒரு 6 அடங்கலாக 7 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் அலன் 2 பந்துப் பரிமாற்றங்கள் வீசி 14 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் றிக்கி ஒரு பந்துப் பரிமாற்றத்தினை வீசி 7 ஓட்டங்களைக் கொடுத்து 2 இலக்குகளையும் றொக்சன் ஒரு பந்துப் பரிமாற்றத்தினை வீசி 9 ஓட்டங்களைக் கொடுத்து ஒரு இலக்கையும் சாய்த்தனர். இதன்மூலம் குருநகர் கார்மேல் போய்ஸ் அணி சம்பியன் ஆனது.

இப்போட்டியின் ஆட்டநாயகனாக குருநகர் கார்மேல் போய்ஸ் அணியின் றிக்கி தெரிவு செய்யப்பட்டார். தொடர் ஆட்டநாயகனாக கார்மேல் போய்ஸ் அணியின் அஜன் தெரிவு செய்யப்பட்டார். இப்போட்டியின் பரிசளிப்புவிழா எதிர்வரும் 19 ஆம் திகதி தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் தென்னிந்திய பாடகர்களின் இசை நிகழ்ச்சியில் வழங்கப்படும். (கு-23)




வடமாகாண சைக்கிளோட்ட சங்கத்திற்கு விமான படைத்தலைமையகத்தால் மூன்று அதிவேக சைக்கிள்கள் அன்பளிப்பாக வழங்கப்பட்டுள்ளன. வடமாகாணத்தில் சைக்கிள் ஓட்டத்தை ஊக்குவிக்கும் நோக்கில் யாழ்.மாவட்ட சைக்கிளோட்ட சங்கத் தலைவர் வி.கைலநாதனிடம் எயார் மார்சல் ஜி.பி.புளத் சிங்கவால் இச்சைக்கிள் அண்மையில் வழங்கி வைக்கப்பட்டது.









கோப்பாய் பிரதேச செயலக பதிவு செய்யப்பட்ட இளைஞர் கழகங்களுக்கிடையிலான வருடாந்த விளையாட்டுப்போட்டி அண்மையில் புத்தூர் சோமஸ் கந்தாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றபோது...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒழுக்கத்துடன் கூடிய துணிச்சலும், வீர உணர்வும் இருந்தால்தான் நாம் செய்யும் அனைத்துச் செயல்களும் அறச் செயல்களாகவே இருக்கும்.
*- ராபர்ட் லூயி ஸ்டீவன்சன்*

வலம்புரி
T.P : 021 567 1530
website : www.valampurii.lk

## ஒரு பாவத்தை மறைக்க இன்னொரு பாவம் செய்யாதீர்கள்

ஒரு துறவியின் துறவு என்பது ஈழத்தின் எழுத்தாளர் இராசரத்தினம் அவர்கள் எழுதிய சிறுகதை.

தாய் ஒருவர் தன் ஆண் குழந்தையைத் துறவியாக ஆக்குவேன் என்று எடுத்த சத்தியத்தின் காரணமாக, அவரது மகன் பௌத்த துறவியாகுகிறார்.

துறவு என்பதில் இம்மியும் விருப்பமில்லாத அந்தத் துறவி தன் துறவைத் துறந்து போவதைப் பற்றிக் கூறுவதுதான் அந்தச் சிறுகதை.

தாயின் தந்தையின் விருப்பத்திற்காக துறவிக் கோலம் பூணுவது என்பது மிகவும் வேதனையான விடயம்.

துறவிகள் பல் சமயங்களில் இருந்தாலும் துறவு என்பதை இந்து சமயம் மிக தெளிவாகக் கூறி நிற்கின்றது.

மகனுக்கு மகன் பிறந்த பின் துறவு பூணுவது பொருத்துடையது என்கிறது இந்து தர்மம்.

இந்து தர்மத்தின் பிரகாரம் ஒவ்வொருவரும் இல்வாழ்க்கையில் இணையவேண்டும். இல்வாழ்வு என்பது ஒரு அறம். அந்த அறத்தை கடைப்பிடித்து தர்மம் செய்யவேண்டும்.

இவ்வாறாக இல்லறம், துறவறம் பற்றிப் பேசுகின்ற இந்து சமயம் எதையும் உன்விருப்பத்திற்கு அமையச் செய் என்கிறது.

நீ ஆறறிவு படைத்த மனிதன். ஆறறிவு என்பது இறைவனைப் புரிந்து கொள்கின்ற அறிவு.

ஐந்தறிவு கொண்ட ஜீவராசிகளில் இருந்து மனிதன் வேறுபடுவதற்குக் காரணம் ஆறாவது அறிவு. அந்த ஆறாவது அறிவு கடவுள் பற்றிய தேடல் அறிவாகும்.

ஆக, ஆறறிவு படைத்த உனக்கு, சமயம் என்பதன் ஊடாக தத்துவம் முன்வைக்கப்பட்டுள்ளது. அதை நீயோ புரிந்து கொள். உனது புரிதலின் ஊடாக அதைக் கடைப்பிடிப்பதற்கும், தூக்கி எறிவதற்கும் பூரண சுதந்திரம் தரப்படுகிறது முடிவு- தீர்மானம் உன்கையில் என்பதாக, இந்து சமயம் போதனை செய்கிறது.

எனவே, இதில் இருந்து துறவு என்பது துறவை மேற்கொள்பவரின் விருப்பமாக இருக்கவேண்டும். இன்னொருவரின் விருப்பத்திற்காக, இன்னொருவர் நேர்ந்து விட்டார் என்பதற்காக யார் ஒருவர் துறவு கொள்கிறாரோ அவரால் துறவுக்கும் மனித சமூகத்திற்கும் பங்கம் ஏற்படவே செய்யும்.

இன்றைய காலகட்டத்தில் யாரையும் நம்ப முடியாது என்று கூறும் அளவில் நிலைமை உள்ளது. நாளாந்தம் நாம் அறிகின்ற செய்திகள் அவற்றின் பின்னணியில் பேசப்படுகின்ற திடுக்கிடும் தகவல்கள் எங்கள் வாழ்வியலின் அடிப்படைகளையே சிதைத்து சீரழித்து விடுவதாக உள்ளன.

எங்கும் எதிலும் புறநடைகள் இருக்கவே செய்யும் என்பதை எவரும் மறுக்கமுடியாது. அதற்காக புறநடைகளைப் பாதுகாப்பதோ அல்லது புறநடைகள் எதுவும் எங்களிடம் இல்லை என்பதாகக் காட்ட நினைப்பதோ அபத்தம்.

எது உண்மையோ, அந்த உண்மையை வெளிப்படுத்துவதுதான் மனிதப் பண்பு. அதைத்தான் துறவு என்கிறோம்.

ஆக, மன்னிப்பது வேறு; மறைப்பது வேறு. துறவுக்குள் மறைப்பு இருக்கமுடியாது. மறைப்பு இருக்கக் கூடிய துறவுக்கு மன்னிக்கக் கூடிய மகிமையும் இருக்க முடியாது. என்ன செய்வது? தெய்வீகம் என்பதில் நாம் வைக்கின்ற நம்பிக்கைகள் குறைகின்றபோது மன்னிப்பு என்பதை விட மறைப்புகளே மேலோங்கி நிற்கும்.

உயிர்ப்பும் உயிரும் நானே! என்னில் விசுவாசமாக இருப்பவர் இறப்பிலும் வாழ்வார் என்ற புனித வாக்கு; எதையும் மறைக்காதீர்கள், எவருக்கும் பாவம் செய்யாதீர்கள் என்பதையே சுட்டி நிற்கிறது.

ஆம், ஒரு பாவத்தை மறைக்க இன்னொரு பாவம் செய்யாதீர்கள். பாவ மன்னிப்பு வழங்கும் உரிமை மதகுருமாருக்கோ, சட்ட வைத்திய அதிகாரிகளுக்கோ, பொலிஸாருக்கோ கிடையாது என்பது உண்மை வாக்கு.

## புகைப்படக் கலைஞர் நீரில் மூழ்கிப் பலி

(கொழும்பு)

ஜனாதிபதி ஊடகப் பிரிவின் புகைப்படக் கலைஞர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

ஜனாதிபதி ஊடகப் பிரிவில் கடமையாற்றிய விராஜ் சிரந்த அமரக்கோன் என்பவரே நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

தங்காலை மெதகட்டிய கடலில் குளிக்கச் சென்ற போது, நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தங்காலை பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (2)

## எனது உயிர் பாதுகாப்புக்கு தோட்டாக்கள் தாருங்கள்

### செயலாளர் அத்தே ஞானசார தேரர் தெரிவிப்பு

(கொழும்பு)

பொது பல சேனா அமைப்பின் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர், தனது பாதுகாப்புக்காக துப்பாக்கி மற்றும் தோட்டாக்களை வழங்குமாறு கோரி பாதுகாப்பு அமைச்சிடம் விண்ணப்பம் ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார்.

தனது உயிர் பாதுகாப்புக்காக கைத்துப்பாக்கி ஒன்றையும் 50 தோட்டாக்களையும் வழங்குமாறு அவர் தனது விண்ணப்பத்தில் கேட்டுள்ளார்.

பௌத்த சாசனத்தை பாதுகாக்கவும் அதனை நிலைபெற செய்யும் நோக்கிலும் ஏற்படுத்தப்பட்டுள்ள பொது பல சேனா அமைப்பின் செயலாளர் தனக்கு அந்நிய மதங்கள் மற்றும் அரசின் முக்கிய அமைச்சர்கள் சிலரால் மரண அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது எனவும் சில சந்தர்ப்பங்களில் தன்னை கொலை செய்ய முயற்சிக்கப்பட்டுள்ளதாகவும் ஞானசார தேரர் கூறியுள்ளார்.

இதனால் தனக்கு கைத்துப்பாக்கியும் அதற்கான 50 தோட்டாக்களும் வழங்குமாறு அவர் கேட்டுள்ளார்.

அதேவேளை ஞானசார தேரரின் கோரிக்கை தொடர்பில் உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளதாக தெரியவருகிறது. (2)

## நிதி நிறுத்தப்பட்டமை அநீதியான செயலாகும்

### அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல்ல தெரிவிப்பு

(கொழும்பு)

பொதுநலவாய அமைப்புக்கு கனடா வழங்கி வந்த நிதியை அந்நாடு நிறுத்த எடுத்துள்ள தீர்மானம் ராஜதந்திர ரதியில் மிகவும் அநீதியான செயல் என அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல்ல தெரிவித்துள்ளார்.

அத்துடன் நடைமுறையில் இருந்து வரும் சம்பிரதாயங்களின் அடிப்படையில் கனடாவின் தீர்மானம் மிகவும் கீழ மட்டமான செயல் எனவும் அவர் கூறியுள்ளார்.

பொதுநலவாய அமைப்பின் தற்போதைய தலைமைத்துவத்தை வகித்து வரும இலங்கையின் மனிதவுரிமை நிலைமைகளை கவனத்தில் கொண்டு அந்த அமைப்புக்கு வழங்கி வரும் 20 மில்லியன் டொலர் நிதியை நிறுத்துவதாக கனடா நேற்று முன்தினம் அறிவித்தது.

2013ஆம் ஆண்டு பொதுநலவாய நாடுகளின் மாநாட்டை நடத்திய நாடு என்ற ரீதியில் மட்டுமல்லாது அந்த அமைப்பின் இன்றைய தலைமைத்துவத்தை வகிக்கும் இலங்கை, மனித வுரிமை, அரசியல் நல்லிணக்கம் மற்றும பொறுப்புக் கூறல் சம்பந்தமாக அர்த்தமுள்ள நடவடிக்கை எடுக்க வேண்டிய பொறுப்பை கொண்டிருப்பதாக கனேடிய வெளிவிவகார அமைச்சர் ஜோன் பேர்ட் தெரிவித்துள்ளார்.

இந் நிலையில், ஐ.நா மனிதவுரிமை பேரவையில் இலங்கைக்கு எதிரான தீர்மானம் நிறைவேற்றப்பட்ட சூடு தணியும் முன்னர் கனடா, பொதுநலவாய அமைபபின் ஊடாக இலங்கைக்கு அழுத்தத்தை கொடுத்துள்ளமையானது சர்வதேச ரீதியில் எடுத்துக்கொண்டால் இலங்கை நற்பெயருக்கு சேதத்தை ஏற்படுத்தாதா என கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்துள்ள அமைச்சர் ரம்புக்வெல்ல,

கனடாவின் நற்பெயர் சம்பந்தமாகவே கேள்வி எழுந்துள்ளது. அந்நாடு மறைத்து வைத்திருந்த நிகழ்ச்சி நிரலின் ஒரு பகுதியை தற்போது வெளியிட்டுள்ளது.

கனேடிய அரசாங்கம் தனது வாக்கு வங்கியை பாதுகாப்பதற்காக வேறு விடயங்களை வெளிக்கொண்டு வருகிறது எனவும் அமைச்சர் ரம்புக்வெல்ல குறிப்பிட்டுள்ளார். (2)

## ஜனாதிபதி மாளிகை கிளிகள் பறந்தன

(கொழும்பு)

கொழும்பு கோட்டையில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகையில் வளர்க்கப்பட்டு வந்த மெக்கோ ரக கிளிகள் நான்கு, அங்கிருந்து பறந்து சென்றுவிட்டதாக ஜனாதிபதி மாளிகையின் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

இவ்வாறு பறந்து சென்ற கிளிகளில் இரண்டு சிவப்பு மற்றும் மஞ்சள் நிறக் கலவைகளைக் கொண்டவை எனவும் ஏனைய இரண்டும் நீலம் மற்றும் மஞ்சள் நிறக் கலவைகளைக் கொண்டவை எனவும் அவர் குறிப்பிட்டார்.

இந்த கிளிகள் தொடர்பில் தகவல் அறிந்தால் 0777 535377 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு தெரிவிக்குமாறு பேச்சாளர் மேலும் கூறினார். (2)

## போலிக் குற்றச்சாட்டை சுமத்தியவர் ஜெயகுமாரி!

பாலேந்திரன் ஜெயக்குமாரி, பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் இலங்கைக்கு விஜயம் செய்திருந்த போது, போலிக் குற்றச்சாட்டுக்களை சுமத்தியவர் என சிங்கள ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட கோபி என்பவருக்கு ஜெயக்குமாரி தனது வீட்டில் அடைக்கலம் வழங்கியதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெற்ற பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் மாநாட்டில் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் பங்கேற்றிருந்தார்.

பொதுநலவாய நாடுகள் மாநாட்டில் பங்கேற்ற கமரூன் வடக்கிற்கும் விஜயம் செய்திருந்தார்.

இவ்வாறு வடக்கிற்கு விஜயம் செய்த போது, ஜெயகுமாரி கமரூனிடம் முறைப்பாடு செய்துள்ளமை விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளது.

இராணுவத்தினர் இளைஞர்களை கடத்துவதாகத் தெரிவித்து ஜெயகுமாரி, பிரிட்டன் பிரதமரிடம் [illegible] செய்துள்ளார் எனவும் அவ் ஊடகம் தெரிவித்துள்ளது. (செ-11)

## பொது விவாதத்திற்கு வருமாறு பொது பல சேனா அழைப்பு

(கொழும்பு)

ஆளும் கட்சியின் அமைச்சர்கள் ஐந்து பேருக்கு பொது பல சேனா அமைப்பு சவால் விடுத்துள்ளது.

அமைச்சர்களான டிலான் பெரேரா, வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ச, ரிசாட் பதியுதீன் மற்றும் ரவூப ஹகீம் ஆகியோருக்கு இந்த சவால் விடுக்கப்பட்டுள்ளது.

முடியும் என்றால் பொது விவாதமொன்றில் மோதுமாறு குறித்த அமைச்சர்களுக்கு, பொது பல சேனா இயக்கத்தின் பொதுச் செயலாளர் கலபொட அத்தே ஞானசார தேரர் கோரியுள்ளார்.

பயங்கரவாதத்தை இல்லாதொழிககும் நோக்கில் அமைப்பு செயற்பட்டு வருகின்றது.

இனவாதத்தை தூண்டுவதாகவும், மதவாதத்தை தூண்டுவதாகவும் சுமததப்படும் குற்றச்சாட்டுக்களுக்கு தனியாக பதிலளிக்கத் தயார் என அவர் தெரிவித்துள்ளார். (2)

## சத்திய தரிசனம்



மிகப் பண்டைய நாட்களிலிருந்தே பெண்கள் தங்கள் இதயத்தை தூய்மையாக வைத்திருக்கின்றனர். சாவித்திரி அப்படிப்பட்ட தலைசிறந்த பெண்மணிகளில் ஒருத்தி. காலதேவனுடன் சாதுரியமாகப் போரிட்டு தன் கணவனை உயிருடன் மீட்டு வந்தவள். இவ்வாறு எத்தனையோ பெண்கள். ஆனால் சரித்திரம் ஒரு ஆண் மகனாவது தன் மனைவியின் உயிரை மீட்டதாக எங்காவது சான்றுகளைப் பதித்திருக்கிறதா?

இதயம் என்கிற நிலத்தில் ஒருவன் அன்பெனும் விளைச்சலை உருவாக்கினான் என்றால் அவனே உண்மையான கிறிஸ்தவன், சீக்கியன், இந்து... அவனே உண்மையான மனிதன். அவனே குரு! அவனே போதகன்.



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### உணவு உண்ணும் முறைகள்

✦ தினமும் குறித்த நேரத்தில் உண்ண வேண்டும். ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு நேரத்தில் உண்ணக்கூடாது. கை, கால், வாய் கழுவிக்கொண்டு உண்ண ஆரம்பிக்க வேண்டும். காலில் ஈரம் உலர்வதற்கு முன்பே உண்ணத் தொடங்க வேண்டும்.

✦ காலணி அணிந்து கொண்டும் சூரியன் உதிக்கும் நேரத்திலும் மறையும் நேரத்திலும் ஈரத்துணியுடனும் உண்ணக்கூடாது.

✦ அதிக கவலை, துக்கம், கோபம் ஆகிய உணர்ச்சிகளுடன் உண்ணக் கூடாது. இடது கையினைத் தரையில் ஊன்றிக் கொண்டும் சாப்பிடும் தட்டினைக் கையில் ஏந்திக்கொண்டும் உண்ணக்கூடாது.

✦ உணவில் முதலில் இனிப்பு உண்ண ஆரம்பித்து தொடர்ந்து புளிப்பு, உப்பு, காரம், கசப்பு என்று உண்டு. முடிவில் துவர்ப்பு உண்ண வேண்டும். எள்ளில் தயாரித்த உணவை இரவில் உண்ணக்கூடாது. இலையில் உள்ள பதார்த்தங்களைக் கொஞ்சமாவதுமீதம்வைத்துவிட்டுத்தான்சாப்பிட்டுமுடிக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org






தமிழ் , சிங்களப் புத்தாண்டை முன்னிட்டு கோணம் குளம் பகுதியில் 513 ஆவது படைப் பிரிவினரின் ஏற்பாட்டில் கடந்த திங்கட்கிழமை விளையாட்டு போட்டிகள் நடைபெற்றன. இந்நிகழ்வில் பாதுகாப்பு படைத் தளபதிகள், இராணுவத்தினர்கள், பொலிஸார் மற்றும் பிரதேச மக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.




திருநெல்வேலி அரசடி அம்மன் ஆலயத்தின் தேர்த்திருவிழா அண்மையில் இடம்பெற்ற போது.. (படங்கள் :- மானிப்பாய் செய்தியாளர்)



யாழ்ப்பாணம் சின்மயாமிஷன் நடத்திய என்றும் புன்னகை சின்மய பாலவிஹார் முகாம் நிகழ்வுகள் அண்மையில் இடம் பெற்றவேளை...



பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கேஎன். டக்ளஸ் தேவானந்தாவிடம் கொழும்புத்துறை மக்கள் விடுத்த பணிப்புரைக்கு அமைய வீதி அபிவிருத்தி அதிகார சபையூடாக 60 இலட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் கொழும்புத்துறை மலைவேம்படி 5 ஆம் குறுக்குத்தெரு மதகு செப்பனிடப்பட்டு மக்களின் பாவனைக்காக திறந்து வைக்கப்பட்ட நிகழ்வின் போது...



சண்டிலிப்பாய் சீரணி அம்பாள் ஆலயத்தின் வருடாந்த தேர்த்திருவிழா அண்மையில் இடம்பெற்ற நிகழ்வின் போது தேர் வீதி வலம் வருவதனை படத்தில் காணலாம். (படம்:- மானிப்பாய் செய்தியாளர்)





நெல்லியடியில் அமைந்துள்ள பூட்சிற்றியில் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு சிறுவர்களுக்கானநிகழ்வு நடைபெற்றது. இந்நிகழ்வின்போது சிறுவர்கள், பெற்றோர்கள் புத்தாண்டை மகிழ்ச்சியுடன் கொண்டாடுவதனை படங்களில் காணலாம். (படங்கள்:-கரணவாய் செய்தியாளர்)

# வெள்ளரிக்காய் பிஞ்சு வெள்ளரிக்காய்...

கடும் வெயிலைக் கொடுத்து நம்மைக் காய்ச்சி எடுக்கும் இயற்கைதான், அந்த வெயிலுக்கு இதமாய் அதே சீஸனில் வெள்ளரிக்காயையும் தருகிறது. விரல் போல மெலிந்து, இளம் பச்சை நிறத்தில், சடக்கென ஒடியும் பிஞ்சு வெள்ளரியின் சுவையே தனி. உடலில் நீர்ச்சத்தையும் வெப்ப நிலையையும் சீராகப் பராமரித்து, உடலில் உள்ள நச்சுக்களை வெளியேற்றுவதில் வெள்ளரிக்கு நிகர் வேறு எதுவும் இல்லை.

*மலிவான விலையில், மருத்துவப் பயன்கள் நிறைந்து கிடக்கும் வெள்ளரிக்காயின் பயன் என்னென்ன என்று தெரியுமா?*

"காய்கறிகளில், மிகக் குறைவான கலோரி அளவு கொண்டது வெள்ளரிக்காய்தான். 100 கிராம் வெள்ளரிக்காயில் வெறும் 16 கலோரிதான் உள்ளது. 95 சதவிகிதம் நீர்ச்சத்து நிறைந்துள்ளது. இதில் கொழுப்புச் சத்து இல்லை என்பதால், உடல் எடையைக் குறைக்க மிகவும் ஏற்றது. வெள்ளரிக்காயில் உள்ள நீர்ச்சத்து நா வறட்சியைப் போக்கும். பசியைத் தூண்டும். உடலுக்குக் குளிர்ச்சியைத் தரும்.




இரத்தத்தில் சிவப்பணுக்களை உற்பத்தி செய்யும் பொட்டாசியம் இதில் அதிகம். வெள்ளரியில் உள்ள விற்றமின்கள், மங்கனீசு, பொட்டாசியம், சிலிக்கன் போன்ற தாது உப்புக்களும் தோல் பாதுகாப்புக்கு உதவுகின்றன. இதில் உள்ள ஆன்டிஆக்சிடன்ட்கள் பல வகையான புற்று நோய்களைத் தடுக்கின்றன. வெள்ளரிச் சாறில் உள்ள பொட்டாசியம், மக்னீசியம், நார்ச்சத்து ஆகியவை, இரத்த அழுத்தத்தைச் சீராக வைத்திருக்க உதவுகின்றன. வாய் துர்நாற்றத்தைப் போக்கவும் பல், ஈறுகளைப் பாதுகாக்கவும் வெள்ளரி உதவுகிறது.


ஜீரண மண்டலத்தில் உள்ள நச்சுக்களை வெளியேற்றி, அமிலத்தன்மை, நெஞ்சு எரிச்சல், குடல் புண் ஆகியவற்றைக் குணமாக்கி ஜீரணத்து[illegible]க்கு உதவுகிறது. இதில் உள்ள [illegible] வலு அளிப்பதாலும் விற்றமின்கள் ஏ, பி6, சி, போலேட், கல்சியம், மக்னீசியம், பொட்டாசியம் போன்றவை யூரிக் அமிலத்தின் அளவைக் குறைப்பதாலும், மூட்டு வலிக்கு நிவாரணம் கிடைக்கிறது.

இன்சுலினைச் சுரக்கும் கணைய செல்களுக்கு தேவைப்படும் ஓமோன் (வளர்ச்சி ஊக்கி) வெள்ளரியில் உள்ளதால், நீரிழிவு நோயாளிகளுக்கு மிகவும் நல்லது. சிலிக்கனும், கந்தகமும் கூந்தல் வளர்ச்சிக்கு உதவுகிறது. [illegible] போக்கவும், சிறுநீரகக் கற்களைக் கரைக்கவும் வெள்ளரிக்காய் உதவுகிறது. நார்ச்சத்து அதிகம் இருப்பதால் மலச்சிக்கலை நீக்கவும் பயன்படுகிறது.

பித்தத்தைக் குறைக்கும். சரும நோய்களைப் போக்கும். இரைப்பையில் ஏற்படும் புண்ணைக் குணப்படுத்தும்.

சாதாரணமாக வெள்ளரிக்காயைப் பச்சையாகக் கடித்துச் சாப்பிடுவதுதான் வழக்கம். வெள்ளரிக்காய்களை அரைத்துச் சாறாக்கியும் அருந்தலாம். இளநீருக்கு ஈடானது வெள்ளரிக்காய்ச் சாறு. வெள்ளரிக்காயை சமைக்காமல் அப்படியே பயன்படுத்துவதுதான் நல்லது"



அதிக வியர்வையால், தலைமுடி நாற்றம் எடுத்து, சிக்காகும். சாதம் வடித்த கஞ்சியைத் தலைமுடியில் பரவலாகத் தடவி, பிறகு அலசினால் கண்டிஷனர் போட்ட முடி போல் பறக்கும்.

# நடப்புச் சம்பியன் மும்பையை வீழ்த்தி அசத்தியது கொல்கத்தா நைட் ரைடர்ஸ்



ஏழாவது ஐ.பி.எல் தொடரின் முதல் வெற்றியை கொல்கத்தா அணி பதிவு செய்தது. நேற்றைய லீக் போட்டியில் மும்பை அணியை 41 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.

ஏழாவது ஐ.பி.எல் தொடரின் முதற்கட்ட போட்டிகள் ஐக்கிய அரபு எமிரேட்சில் நேற்று தொடங்கின. அபுதாபியில் நடந்த முதல் போட்டியில் 'நடப்பு சாம்பியன்' மும்பை அணி, கொல்கத்தா அணியை சந்தித்தது.

நாணயச்சுழற்சியில் வென்ற கொல்கத்தா கப்டன் காம்பீர் முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தார்.

**காம்பிர் ஏமாற்றம்:**

கொல்கத்தா அணிக்கு காம்பீர, கலிஸ் இணைந்து ஆரம்பம் கொடு த்தனர். சாகிர் கான் வீசியமுதல் ஓவ ரில், உதிரியாக ஒரு ஓட்டங்கள் கிடைத்தது.

அடுத்து வந்த மலிங்க, வழக்கம் போல தனது வேலையை காட்டினார். இவரது 'சூப்பர் யோர்க்கரில்' காம்பீர், ரன்கணக்கை ஆரம்பிக்காமல் போல்டாகினார்.

பின் வந்த மணிஷ் பாண்டே, கோரி ஆண்டர்சன் ஓவரில் தலா ஒரு பவுண்டரி, சிக்சர் என அடுத்தடுத்து விளாசினார். இதன்பின் இருவரும் மந்தமான ஆட்டத்தை வெளிப படுத்த, கொல்கத்தா அணி 6 ஓவ ரில், 31 ஓட்டங்கள் மட்டும் எடுத்தது.

**திடீர் வேகம்:**

அடுத்து ரன்வேகத்தை அதிகரிக்கும் முயற்சியில் இறங்கியது இந்த ஜோடி. ஹர்பஜன், ஒஜா பந்துகளை பவுண்டரிக்கு அனுப்பிய பாண்டே, இத்தொடரில் முதல் அரைசதம் கடந்தார்.

மறுபுறம், மலிங்க பந்தில் பவுண்டரி அடித்த கலிஸ், ஒஜா ஓவ ரில் 2 சிக்சர், ஒரு பவுண்டரி உட்பட 20 ஓட்டங்கள் எடுக்க, கொல்கத்தா அணி 15 ஓவரில் 110 ஓட்டங்களை எட்டியது. கலிசும் தன் பங்கிற்கு அரைசதம் எட்டினார்.

மலிங்க பந்தில் சிக்சர் அடித்த பாண்டே (64), அவரிடமே வீழ்ந்தார். உத்தப்பா (1), ஷகிப் அல் ஹசன (1) ஏமாற்றினர். கலிஸ் (72) அண்டர்சனின் அசத்தல்' கேட்ச் சில்' பெவிலியன் திரும்பினார்.

கடைசி ஓவரில், சூர்ய குமார் யாதவ் 3 பவுண்டரிகள் அடிக்க, கொல்கத்தா அணி 20 ஓவரில், 5 விக்கெட்டுக்கு 163 ஓட்டங்கள் எடுத்தது. சூர்ய குமார் யாதவ் (13), யூசுப் பதான் (4) ஆட்டமிழக்காமல் இருந்தனர். மும்பை சார்பில் மலிங்க 4 விக்கெட்டுக்கள் சாய்த்தார்.


**ராயுடு நம்பிக்கை:**





சற்று கடின இலக்கைத் துரத்திய மும்பை அணிக்கு மைக் ஹசி, தாரே ஜோடி சுமாரான ஆரம்பம் தந்தது. 13 பந்துகளில் 3 ஓட்டங்கள எடுத்த ஹசி, சுனில் நரைன் 'சுழலில்' சிக்கினார். ஆதித்ய தாரேயும் (24) நீடிக்கவில்லை.

பின் இணைந்த ராயுடு, கப்டன் ரோகித் சர்மா ஜோடி மந்தமான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. இதனால், கடைசி 30 பந்தில், மும்பை அணியின் வெற்றிக்கு 69 ஓட்டங்கள தேவைப்பட்டன.



இந்நிலையில், ரோகித் சர்மா (27) ஆட்டமிழந்தார். சற்று நம்பிக்கை தந்த அம்பதி ராயுடுவும் (48) அரைசத வாய்ப்பை இழந்து, வெளியேற மும்பை அணியின் வெற்றிக்கு சிக்கலானது.

பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட ஆண்டர்சன் (2), அணியை கைவிட்டார். ஹர்பஜன் (0), கவுதம் (7) அடுத்தடுத்து ஆட்டமிழக்க, மும்பை அணி 20 ஓவரில், 7 விக்கெட்டுக்கு 122 ஓட்டங்கள் எடுத்து, 41 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்ந்தது.

கொல்கத்தா அணியின் சுனில் நரைன், 4 விக்கெட் கைப்பற்றினார். இப்போட்டியின் ஆட்ட நாயகனாக கொல்கத்தா அணியின் ஜக்கலிஸ் தெரிவு செய்யப்பட்டார். (க)

## சர்வதேச...

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

இலங்கையில் அனைவரினதும் அடிப்படை உரிமைகளை உறுதி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்

யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் இலங்கை மீது சுயாதீன சர்வதேச விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்பதே எமது தொழிற் கட்சியினதும் நிலைப்பாடாகும்.

அண்மையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையில் இலங்கைக்கு எதிராக நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வரவேற்கப்பட வேண்டியது. இந்த தீர்மானமானது சர்வ தேச சுயாதீன விசாரணைகளுக்கு வழியமைக்கும் என நாங்கள் நம்புகிறோம்.

இலங்கையில் நிரந்தரமான நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு குற்றச் செயல்களுக்கு தண்டனை விதிக்கப்பட வேண்டியது அவசியமானதாகும்.

யுத்தக் குற்றச் செயல் விசாரணைகளை நடத்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு கூடுதலான ஒத்துழைப்பை இலங்கை வழங்க வேண்டியது முக்கியமானதாகும் என்றார்.

மேலும் பிரித்தானியாவின் பல்வேறு துறைகளின் அபிவிருத்திக்கு பிரித்தானிய தமிழர்கள் வழங்கி வரும் அர்ப்பணிப்பு பாராட்டப்பட வேண்டியது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (செ-11)

## கிணற்றை...

கட்கிழமை மேற்படி கிணற்றிலிருந்து மீட்கப்பட்டது.

யுவதியின் மரணத்திற்குயாழ். ஆயர் இல்லத்தினைச் சேர்ந்த இரு குருமார்களே காரணம் எனக்கூறி குறித்த யுவதியின் உறவினர்கள் ஆயர் இல்லத்தின் முன்னால் நேற்று போராட்டத்தில் ஈடுபட்ட நிலையில் குறித்த கிணற்றின் மதில்கள் உடைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (செ-11)

## இன்றைய போட்டி





இடம்:- சார்ஜா

## ஊடக கொலை விசாரணைகள் தீர்க்கப்படாத நாடாக இலங்கை

### சி.பி.ஜே பட்டியலில் 4-வது இடம்

(கொழும்பு)

இலங்கையில் மகிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாகவும் அதற்கு முன்னர் பிரதமராகவும் ஆட்சியில் இருந்துள்ள காலத்தில் 9 ஊடகவியலாளர்கள் கொல்லப்பட்டும், கொலையாளிகள் சட்டத்தின் பிடியில் சிக்காமல் இருக்கின்ற நிலைமையை மாற்றுவதற்கு அரசாங்கம் எந்தவிதமான அரசியல் ரீதியான விருப்பத்தையும் வெளிப்படுத்தவில்லை என்று சிபிஜே என்ற ஊடகவியலாளர்களைப் பாதுகாப்பதற்கான குழு சுட்டிக்காட்டியுள்ளது.

ஊடகவியலாளர்கள்பலர்கொலையுண்டும் வழக்கு விசாரணைகள் முழுமையாக தீர்க்கப்படாத நாடுகளின் பட்டியலில் ஈராக், சோமாலியா, பிலிப்பைன்ஸ் ஆகிய நாடுகளுக்கு அடுத்தபடியாக நான்காவது இடத்தில் இலங்கை உள்ளதாக சிபிஜே பட்டியல் வெளியிட்டுள்ளது.

கடுமையான மோதல்கள் நடந்துவரும் சிரியா, ஆப்கானிஸ்தான் ஆகிய நாடுகளும் பாகிஸ்தான், ரஷ்யா, நைஜீரியா, இந்தியா உள்ளிட்ட நாடுகளும் இலங்கைக்கு அடுத்த படியாக முதல் 13 நாடுகளின் பட்டியலில் அடங்குகின்றன.

கடந்த 10 ஆண்டு காலம் கடந்துள்ள ஐயாத்துரை நடேசனின் படுகொலைச் சம்பவம் முதற்கொண்டு 2009-ம் ஆண்டில் நடந்த லசந்த விக்ரமதுங்க படுகொலை வரை பல ஊடகவியலாளர்களின் கொலைகளின் பின்னணியில் அரசாங்கமும் இராணுவமுமே இருப்பதாக சந்தேகிக்கப்படுவதாகவும் சிபிஜே சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கையில் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல்கள் தொடர்பில் குற்றவாளிகள் சட்டத்தின் பிடியில் சிக்காத நிலைமை உள்ளமையே பெருமளவிலான ஊடகவியலாளர்கள் நாடு கடந்து வாழ்வதற்குக் காரணம் என்றும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

இலங்கையில் யுத்தம் முடிந்து 5 ஆண்டுகள் கடந்துள்ள சூழ்நிலையிலும் ஊடகவியலாளர்கள் பாதுகாப்பாக இருப்பதாக உணரவில்லை என்று ஊடகவியலாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

குறிப்பாக அரசாங்கத்தை விமர்சிக்கக்கூடிய அல்லது தமிழ் மக்கள்- சார்ந்து எழுதக்கூடிய ஊடகவியலாளர்கள் தாக்கப்படுகின்ற அல்லது அச்சுறுத்தப்படுகின்ற சூழ்நிலை தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது எனவும் இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர்கள் ஒன்றியம் தெரிவித்துள்ளது. (செ-11)


## ஜோன்சன் ஓய்வு

அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் மிட்சல் ஜோன்சன், ஒருநாள் மற்றும் இருபது-20 போட்டிகளில் இருந்து ஓய்வு பெற திட்டமிட்டுள்ளார். தனது வேகத்தால் எதிரணிகளை நடுங்க வைக்கும் திறன் படைத்தவர் அவுஸ்திரேலிய நட்சத்திர வேகப்பந்து வீச்சாளர் மிட்சல் ஜோன்சன்.

சமீபத்தில் வங்கதேசத்தில் நடந்து முடிந்த இருபது-20 உலகக் கிண்ணத்தில் கால் விரல் காயத்தால் பங்கேற்கவில்லை.

இந்நிலையில், டெஸ்டில் மட்டும் விளையாட முடிவு செய்துள்ள ஜோன்சன் இதுகுறித்து கூறுகையில், டெஸ்ட் போட்டியில் தான் விளையாட விரும்புகிறேன், இதற்காக டெஸ்டில் மட்டும் கவனம் செலுத்த முடிவெடுத்துள்ளேன்.

2015-ல் நடக்க உள்ள(50ஓவர்) உலகக் கிண்ணத் தொடரைவிட இங்கிலாந்து மண்ணில் நடக்கவிருக்கும் ஆஷஸ் டெஸ்ட் தொடரைத்தான் என் இலக்காக கொண்டுள்ளேன். எனவே ஒருநாள், இருபது-20 போட்டிகளில் இருந்து ஓய்வு பெற முடிவு செய்துள்ளேன் என்று கூறியுள்ளார். (க)



## ஹட்ரிக் அடித்த தென்னாபிரிக்கா

டெஸ்ட் தரவரிசையில் முன்னணியில் இருக்கும் சர்வதேச அணிகளுக்கு ஐசிசி சார்பில் பரிசுத் தொகை வழங்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு ஆண்டும் சர்வதேச கிரிக்கெட் சபை சார்பில், டெஸ்ட் மற்றும் ஒருநாள் தரவரிசையில் சிறந்து விளங்கும் அணிகளுக்கு பரிசுப் பணம் தரப்பட்டு வருகிறது. இந்நிலையில் இந்த ஆண்டு ஏப்ரல் 1ம் திகதி வெளியிடப்பட்டுள்ள டெஸ்ட் தரவரிசையின் படி முதல் இடத்தில் தென்னாபிரிக்க அணியும், இரண்டாவது இடத்தில் அவுஸ்திரேலியா அணியும் உள்ளது.

இந்திய அணி, நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை இழந்ததால் கடைசி நேரத்தில் மூன்றாவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. நான்காவது இடத்தில் இங்கிலாந்து அணி உள்ளது.

இதையடுத்து, முதலிடம் பெற்றுள்ள தென்னாபிரிக்காவுக்கு ரூ. 2.87 கோடி பரிசாக வழங்கப்பட்டது.

இரண்டாவது இடத்தில் உள்ள அவுஸ்திரேலியாவுக்கு ரூ. 2.24 கோடியும், மூன்றாவது இடம் பெற்ற இந்திய அணிக்கு ரூ. 1.6 கோடியும் தரப்பட்டது. நான்காவதாக உள்ள இங்கிலாந்துக்கு ரூ. 97 லட்சம் கிடைத்தது.

தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக தென்னாபிரிக்கா முதல் பரிசை தட்டிச் செல்வது மட்டுமில்லாமல் இதற்கான கிண்ணத்தையும் தக்கவைத்துக் கொண்டது குறிப்பிடத்தக்கது. (க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை-இந்திய மீனவர்...

செய்யப்படும்போதெல்லாம் தங்களுடைய முயற்சியால்தான் விடுவிக்கப்படுவதாகவும் இரு நாட்டு மனவர்களுக்கு இடையிலான பேச்சு வார்த்தைக்கு மத்திய அரசு ஏற்பாடு செய்தபோதும், அ.தி.மு.க. அரசு அதனைத் தாமதப்படுத்தியதாகவும் குற்றம் சாட்டினார் சோனியா காந்தி.

தற்போது நாடு மிகப் பெரிய அபாயத்தைச் சந்தித்து வருவதாகவும் சோனியா காந்தி தெரிவித்தார்.

**மதவாதம், நாட்டைத் துண்டாட முயல்கிறது**

மதவாதம், பணம், அதிகாரம் ஆகியவை ஒன்று சேர்ந்து வருவதாகவும் மதத்தின் அடிப்படையில் நாட்டைத் துண்டாட முயல்வதாகவும் சோனியா தெரிவித்தார்.

தற்போது பா.ஜ.க. ஒரு தனி நபரின் கையில் சிக்கியிருப்பதாகவும் எல் லாப் பிரச்சினைகளுக்கும் தன்னி டம் தீர்வு இருப்பதாக அந்த நபர் சொல்லிவருவதாகவும் சோனியா குறிப்பிட்டார்.

சோனியா காந்தி தமிழகத்தில் கலந்துகொண்ட முதல் தேர்தல் பிரசாரக் கூட்டம் இதுவாகும். இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக டில்லியில் இருந்து விமானம் மூலம் திருவனந்தபுரம் வந்த சோனியா காந்தி, அங்கிருந்து ஹெலிகொப்டர் மூலம் கன்னியாகுமரி வந்தார்.

நேற்று நண்பகல் சுமார் 12.30 மணியளவில் பேசத் தொடங்கிய சோனியா காந்தி முதலில் கடந்த பத்தாண்டு கால காங்கிரஸ் அரசின் சாதனைகளைப் பட்டியலிட்டார்.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சியில் இந்தியாவின் பொருளாதாரம் மிக சிறப்பாக நிலையில் இருந்ததாகக் குறிப்பிட்ட சோனியா காந்தி, கடந்த 10 ஆண்டுகளில் இந்த அரசு 14 கோடி மக்களை வறுமையில் இருந்து மீட்டுள்ளதாக சுட்டிக்காட்டினார்.

கல்வி, மருத்துவம், தொழில் துறை ஆகிய துறைகளில் கடந்த பத்தாண்டுகளில் காங்கிரஸ் அரசு பெரும் முதலீடுகளைச் செய்திருப்பதாகவும் சோனியா காந்தி தெரிவித்தார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டம், நிலம் கையகப்படுத்தும் சட்டம் ஆகிய சட்டங்கள் காங்கிரஸ் தலைமையிலான ஆட்சியில் கொண்டுவரப்பட்டிருப்பதாக சோனியா காந்தி சுட்டிக்காட்டினார்.

இந்தியாவின் சரித்திரத்தில் செய்யப்படாத சாத்னைகளையெல்லாம் கடந்த பத்தாண்டுகளில் செய்திருப்பதாக பெருமிததுடன் குறிப்பிட்டார் அவர்.

சுமார் 25 நிமிடங்கள் பேசிய சோனியா காந்தி, காங்கிரஸ் வேட்பாளர்கள் யார் பெயரையும் கூறி வாக்கு சேகரிக்காமல், தமிழகத்தில் போட்டியிடும் 39 காங்கிரஸ் வேட்பாளர்களுக்கும் வாக்களிக்கும்படி கேட்டுக்கொண்டார். (செ-11)

# தலைமைத்துவ...

மைப்பு அடைய வேண்டிய இலக்கின் ஒரு சிறிய முன்னேற்றம் மாத்திரமே.

இந்தத் தேர்தலில் தமிழ் தேசிய கூட்டமைப்பை தமிழ் மக்கள் பாரிய வெற்றியைப் பெற வைத்ததன் மூலம், தமிழ தேசிய கூட்டமைப்பை தமிழ் தேசியத்தின் பிரதிநிதிகளாக தாங்கள் தெரிவு செய்கிறோம் என்பதை இலங்கை அரசாங்கத்துக்கு உணர்த்தி இருக்கிறார்கள்.

இறுதி யுத்தத்தில் வெற்றி பெற்ற ஜனாதிபதி, தமிழ் மக்களை காப்பாற்றவே விடுதலைப் புலிகளுக்கு எதிராக போரிட்டதாக அறிவித்த போது, அவர் தமிழ் மக்களின் அபிலாசைகளை நிறைவேற்றுவார் என்று கருதப்பட்டது. ஆனால் மகிந்த ராஜபக்ஷ அதனை நிறைவேற்றவில்லை. மாறாக அவர் தம்மை, தம்மை சூழ உள்ளவர்களையும் வலுப்படுத்திக் கொண்டதுடன், வடக்கில் தேவையற்ற இராணுவ பிரசன்னத்தை ஏற்படுத்தி, மக்களை வெறுப்படையச் செய்துள்ளார்.

இவ்வாறான நிலையில் வட மாகாண சபையை முழுமையாக வெற்றி பெற்றாலும் கூட தமிழ்த் தேசிய கூட்டமைப்பால் எதனையும் செய்ய முடியாது. தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சுயமாக இயங்க வேண்டுமாக இருந்தால், 13-ம் திருத்தச் சட்டம் முழு மையாக இலங்கை அமுலாக்கப்பட வேண்டும்.

ஆனால் இந்தியா வழங்கிய தீர்வு ஒன்றை இலங்கை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அமுலாக்குவார் என்பது நிச்சயமில்லை. அத்துடன் அரசாங்கத்துடன் தமிழ் தேசிய கூட்டமைப் புகசு சிறந்த உறவு காணப்பட வேணடும் இவ்வாறான வியங்கள நடைபெறுவதற்கு மிகநீண்ட காலம தேவைபபடும்.

இந்த நிலையில் தமிழ் தேசிய கூட்டமைப்பு தமிழ் மக்களின் அபிலாசைகளை முழுமையாக நிறைவேற்றுவதற்கு மிகப்பெரிய தலைமைத்துவ போராட்டத்தில் ஈடுபடவேண்டி ஏற்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# இளம் யுவதியின் மரணத்...

கல்வி நிலையத்தில் கற்று வந்தார்.

இந்நிலையில் அங்கு பணியாற்றும் பாதிரியார் ஒருவர் கொன்சலிற்றாவை பாலியல் ரீதியாக துன்புறுத்தி வந்துள்ளார் என்றும் இதனால் அவர்மிகுந்த மன அழுத்தத்துக்கு உள்ளாகி இருந்தார் என்றும் இதன் காரணமாகவே அவர் தற்கொலை செய்து கொண்டிருக்கலாம் எனவும் அவரது தாயார் மரண விசாரணை அதிகாரி மற்றும் பொலிஸாரிடம் அளித்துள்ள வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார்.

குறித்த யுவதிக்கு பாலியல் தொல்லை கொடுத்து பாதிரியார் அனுப்பிய குறுஞ்செய்திகள் மரணமான யுவதியின் கைத் தொலை பேசியில் உள்ளது.

குறித்த யுவதியின் கைத் தொலைபேசியில் உள்ளதை ஆதாரப்படுத்தி அந்தக் கைத்தொலை பேசி பொலிஸாரிடம் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

இதேவேளை குறித்த யுவதிக்கு பாதிரியார் பாலியல் ரீதியில் தொல்லை கொடுத்து வந்தார் என ஆயர் இல்லத்திலும் முறைப்பாடு செய்யப் பட்டதாக யுவதியின் தாயார் தனது வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார்.

தனது மகளின் மரணத்திற்கு காரணமானவர்கள் தண்டிக்கப்பட வேண்டுமென பொலிஸாரிடம் தாயார் கோரியுள்ளார்.

இதேவேளை குறித்த யுவதி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப் படவில்லையென மருத்துவ அறிக்கையில் தெரிவிக்கப்படுகிறது.

யுவதி துன்புறுத்தப்பட்டமை சம்பந்தமான ஆதாரங்கள் கிடைத்துள்ளபோதும் சம்பவம் தொடர்பில் நேற்றுமுன்தினம் வரை எவரும் கைது செயயபபடவில்லை எனவும் விசாரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும் யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

மரணமான யுவதி கடந்த 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காணாமல் போயிருந்த நிலையில் மறுநாள் குரு நகர் - பெரிய கோவில் பகுதியில் உள்ள கிணறொன்றில் சடலமாக மீட்கப்பட்டிருந்தமையும் அவர் காணாமல் போனமை குறித்து தாயார் திங்கட்கிழமை காலை யாழ். பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்திருந்தார். இதேவேளை நேற்று பிற்பகல் கொனசலிற்றாவின் பூதவுடல் மண்டைதீவு சவக்காலையில் அடக்கம் செய்யப்பட்டது. (செ-6)

# புலிகளுக்கு உதவிய...

உள்ளிட்ட மூவர் அண்மை யில் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் நெடுந்தீவு பகுதியில் வைத்து நபர் ஒருவரை பயங்கரவாத குற்றத் தடுப்பு பிரிவினர் அண்மையில் கைது செய்துள்ளனர்.

இவர்மீது, புலிகள்அமைப்பை மீள ஒருங்கிணையச் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ள புலிகளின் புலனாய்வுப் பிரிவினருக்கு நிதி உதவிகளை வழங்கியுள்ளார் எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

ஏற்கெனவே தமிழீழ விடுதலைப் புலிகளின் நலன்புரிப் பிரிவில் கடமையாற்றியுள்ளதாகத் தெரிவிக்கப்படும் இவர், ஹவாலா பணப்பரிமாற்றம் எனப்படு கின்ற உண்டியல் முறையின் ஊடாக மலேசியாவிலிருந்து 60 இலட்சம் ரூபாய் பணத்தைப் பெற்றுக் கொண்டுள்ளார் எனவும், மலேசியா வில் சில வர்த்தக நடவடிக்கைகளில் ஈடு பட்டு வருவதாகவும் கூறப்படுகின்றது.

இரண்டு கடவுச்சீட்டுக்கள் வைத்திருக்கும் இவர் மலேசியாவிற்கு தொடர் பயணங்களை மேற்கொள்பவர் என விசாரணைகளின் மூலம் தெரியவந்துள்ளதாகவும் தகவல்கள வெளியாகி உள்ளன.

இதேவேளை கடந்த மாதம் 13 ஆம் திகதி கிளிநொச்சி தர்மபுரம் பகுதியில் இடம்பெற்ற இராணுவத்தினரின் சுற்றிவளைப்பின் பின்பு வடக்கில் மட்டும் இதுவரை 60 இற்கும் மேற்பட்ட தமிழர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக இராணுவப் பேச்சாளர் முன்னர் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (செ-6,11)

# பொது பல...

பில் இதுவரையில் யாரும் கைது செய்யப்படவில்லை என்று பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

இந்த நிலையில் கொழும்பு கொம்பனி வீதியில் உள்ள நிப்போன் விருந்தகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பு தொடர்பான காணொளிகளை கொம்பனி வீதி பொலிஸாரிடம் வழங்குமாறு நீதிமன்றம் இரண்டு தொலைக் காட்சி அலைவரிசைகளுக்கு உத்தரவிட்டது.

இதன் அடிப்படையில் சந்தேக நபர்களை அடையாளப்படுத்துமாறும் நீதிமன்றம் கோரியுள்ளது. (செ-11)

# கூட்டமைப்பு எம்.பிக்கு...

கருத்து வெளியிடுகையில்,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர், சுட்டுக் கொல்லப்பட்ட மூன்று தமிழீழ விடு தலை உறுப்பினர்களுக்கும் உடந்தையாக இருந்ததாகவும், இவர்கள் கொழும்பு மற்றும் மட்டக்களப்பு ஆகிய இடங்களில் சந்தித்து இயக்கத்தை புதுப்பிக்க முயற்சி எடுததாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் கோபி என்ற நபர் பயன்படுத்திய தொலைபேசியை பாதுகாப்பு படையினர் கைப்பற்றியதையடுத்து, அதில் இருந்த விவரங்கள் எம்.பி. மற்றும் பயங்கரவாதத்திற்கு இடையிலான உறவை வெளிப்படுத்துவ தாக உள்ளதாக அவர் குறிப்பிட் டார்.

இந்நிலையில், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனை ஒரு தேசிய ஹீரோவாக பாராளு மன்றில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் எம்.பி பாராட்டிப் பேசியதை நினைவு கூர்ந்தார்.

இதேவேளை, எம்.பி. மற்றும் பலருடன் கோபி வைத்திருந்த தொடர்புகளை நிரூபிக்க ஆதாரம் இருப்பதாகவும், அவர்களது பெயர்கள் விரைவில வெளியிடப்படும் எனவும் பொலிஸ் ஊடகப்பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார். (செ-11)


## யாழில் டென்மார்க் பிரண்டாபதி ஸ்ரீ அபிராமி அன்னையாரின்



அருள் ஒளி தர்சன மாலையும் சித்திரை புது வருட விசேட பூஜையும்

இடம் : திவ்வியஜீவன சங்க மண்டபம்
சட்டநாதர் கோயிலடி நல்லூர்.
காலம் : 20.04.2014.
ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணி



வரமருளிக் காத்தருள இராஜேஸ்வரி அம்மானக அவதாரமெடுத்து டென்மார்க் பிரண்டாபதியில் வீற்றிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ அபிராமி அன்னையரின் சித்திரை புதுவருட விசேட பூஜை இடம்பெற ஸ்ரீ அபிராமி அம்பாளின் திருவருளும் ஸ்ரீ அபிராமி உபாசகியின் ஆசிகளும் கைகூடியுள்ளன.

ஏற்கனவே டென்மார்க்கிலிருந்து எடுத்துவரப்பட்ட அம்பாளின் திருவடிக்குப் பால் அபிசேக பூஜை சிறப்பாக இடம்பெறும். பால் அபிசேகம் செய்து தமது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றிக்கொள்ள விரும்புபவர்கள் மண்டபத்திலே பாலினைப்பெற்று வழங்கி அம்பாளின் திருவருளை பெற்றுய்ம்வண்ணம் வேண்டுகின்றோம்.

குறிப்பு : ஒவ்வொரு மாதத்தின் நடுப்பகுதியில் யாழ்ப்பாணத்திலும் மாத இறுதி ஞாயிற்றுக்கிழமையில் சாந்தச்சோலை வீதி பூந்தோட்டம் வவுனியா எனும் முகவரியில் அமைந்துள்ள ஸ்ரீ அபிராமி அம்மன் ஆலயத்தில் சிறப்புப் பூஜை இடம்பெறுகின்றது.

யாழ் தொடர்புகளுக்கு 077 6993861. 0779825604 ஆலய தொடர்புகளுக்கு 0045 97180192

(6149)

**இணைந்த கணிதம் துரித மீட்டல் வகுப்புக்கள் தனியாகவோ குழுவாகவோ கற்பிக்கப்படும்.**

தொடர்பு :- T.Suganthan (B.Sc)
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
T.P:- 077 651 0506

(6152)

## உடனடி வேலைவாய்ப்பு

உலகளாவிய ரீதியில் விஸ்தரித்து பல கிளைகளை, இலங்கையிலும் வடக்கு முழுவதும் ஸ்தாபித்துக் கொண்டிருக்கும் எமது நிறுவனத்திற்கு 2014-ம் புத்தாண்டில் துடிப்பும் ஆர்வமும் மிக்க இளைஞர், யுவதிகளிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

> அடிப்படைத் தகைமை O/L
> வயதெல்லை 18 - 35
> வெளிநாட்டில் பணிபுரிய பொன்னான சந்தர்ப்பம்
> தங்குமிடம் & உணவு வசதிகள் இலவசம்
> அடிப்படை சம்பளம் 15,000 - 20,000
> நிரந்தர தொழில்வாய்ப்புகள், அனுபவம் அவசியமற்றது

ஏன் இன்னும் யோசனை? இன்றே எமக்கு அழையுங்கள் 077 556 6226 077 456 7438

(6151)

## ALLIANCE FRANÇAISE DE JAFFNA

THE ONLY OFFICIAL FRENCH CENTRE.

FRENCH மொழியை FRENCH முறையில் கற்றுக்கொள்ளுங்கள்.

af

Alliance Française de Jaffna

திருமணம் மூலம் France, Canada, Switzerland, Belgium... செல்வோர் மற்றும் French கற்கவிரும்புவோர். யாழில; AF 1976 முதல் இயங்கிவருகிறது.

- உலகில் FRENCH கற்பதற்கு FRENCH அரசாங்கம் அங்கிகரிக்கும் சர்வதேச நிறுவனம் AF. இலங்கையில் கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை ஆகிய இடங்களில் கிளைநிறுவனங்களைக் கொண்டு உலகப் புகழ் பெற்ற நிறுவனமாக FRENCH EMBASSY இன் கீழ் இயங்குகின்றது.
- வருடம்தோறும் நூற்றுக்கணக்கானோர் (வடமராச்சி, வன்னி, மன்னாரைச் சேர்ந்தவர்களும்) இங்கு படிக்கிறார்கள்.
- Certificates & International Diplomas

புதிய வகுப்புகள் மிக விரைவில்...உடன் பதிவுசெய்யுங்கள்...

61, கச்சேரி நல்லூர் வீதி, யாழ்ப்பாணம் 021 222 8093.
(இவ்வீதியில் கச்சேரியை அடுத்துள்ள சந்தியில் உள்ள வெள்ளை மாடிக்கட்டடம்)

(6146)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.04.2014 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.